Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

பிரேம் அச்சகம்
127, KKS Road
யாழ்ப்பாணம்

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 15 திங்கட்கிழமை (28.04.2014) பக்கங்கள் 20 ஓசை – 209

## 2 முன்னாள் பாப்பரசர்களுக்கு முதன்முறையாக புனிதர் பட்டம்



முன்னாள் பாப்பரசர்களான 23ஆவது ஜோன் மற்றும் 2ஆவது ஜோன்போல் ஆகியோருக்கு நேற்றையதினம் புனிதர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் மற்றும் முன்னாள் பாப்பரசரான பெனடிக்ட் ஆகியோரின் 19 ஆம் பக்கம் பார்க்க...

## அரச சேவைக்கு இராணுவம் ஆட்சேர்ப்பு அமைச்சர் ஐங்கரநேசன் கண்டனம்

யாழ்ப்பாணத்தில் இளைஞர், யுவதிகளை அரச சேவையில் சேர்த்துக்கொள்வதற்காக இராணுவம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், இது அரச நடைமுறைக்கு முரணானது என்றும் தமிழ் இளைஞர், யுவதிகளைத் தனது கட்டுப் பாட்டினுள் வைத்திருப்பதற்காக இராணுவம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்றும் வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

அரச சேவைக்கு ஆட்சேர்த்தல் என்ற மகுடத்தில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றில், உரிய அதிகாரிகளினால் பல்வேறு பணிகளுக்கு ஆட்கள் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள் என்று அறிவிக்கப் பட்டதற்கு அமைவாக கொக்குவில் இந்துக் கல்லூரியில் இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் இராணுவத்தினரால் நேற்றைய தினம் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மருத்துவதாதி, நடனம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள், பாடகர்கள், வாத்தியம் மற்றும் நடனக் கலைஞர்கள், கணனி இயக்குநர்கள், விவசாய மேற்பார்வையாளர், விவசாயிகள், தொழிலாளர்கள், மின் இணைப்பாளர், தச்சு வேலை, மேசன், வர்ணம் பூசுபவர்கள், ஓட்டு வேலை, வாகனம் திருத்துவோர், சாரதிகள், கட்டட கலைஞர், படவரைஞர், கட்டடத் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் என 21 வகையான பணிகளுக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் எட்டு முதல் பட்டப் 19 ஆம் பக்கம் பார்க்க...

## பல்கலையில் புதிய பாடத்திட்டம்

நாட்டின் அபிவிருத்திக்கு பொருந்தும் வகையில் பல்கலைக்கழகத்தில் புதிய பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய புதிய பொறியியல் பாடத்திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன குறிப்பிட்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க...

# இலங்கையில் மீளவும் வன்செயல் விரும்பவில்லை தமிழ் மக்கள்

## மௌனம் கலைத்தார் சம்பந்தர்



(கொழும்பு)

இலங்கையில் மீளவும் ஒரு வன்முறை ஏற்படுவதனை இந் நாட்டில் வாழும் தமிழ்மக்கள் விரும்பமாட்டார்களென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கத்திற்கு துணை போனவர்களெனத் தெரிவித்து நெடுங்கேணி காட்டுப் பகுதியில் மூவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கொழும்பிலிருந்து வெளிவரும் 'நேசன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் விடுதலைப் புலிகள் மீளவும் எழுச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. அப்படி அவர்கள் மீள் ஒழுங்கிணைவது குறித்தும் நான் அறியவில்லை. ஆனால் இவ்வாறான சம்பவங்கள் ஏதாவது நடந்தால் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில் இலங்கையில் மீண்டுமொரு வன்செயல் ஏற்படுவதனை இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் விரும்பவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மே மாதத்தில் மீனவர் பேச்சு

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தைகள் மே மாதம் 12ஆம் 13ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறவுள்ளது.

இலங்கை, இந்திய மீனவர் சங்கங்கள் கலந்து கொள்ளும் இப்பேச்சுவார்த்தையில் தமிழக மீன்வர் சங்கங்களின் பிரதிநிதிகளும் மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இராஜதந்தி 19 ஆம் பக்கம் பார்க்க...

## காய்ச்சல் பீடித்த மாணவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அச்செழு வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த கலாகேந்திரன் கபிந்தினி (வயது-12) என்ற அச்சுவேலி கன்னியர்ம பாடசாலையில் தரம்-7 இல் கல்வி கற்கும் மாணவியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பிரஸ்தாப மாணவி மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வேளையில் கோப்பாயில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மரண விசாரணையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (இ)

## தமிழரசுக் கட்சிக்குள் முரண்பாடு வவுனியாவிலும் எதிரொலித்தது

வவுனியா தமிழரசுக் கட்சி கிளைக்குள் முரண்பாடுகளும் குத்துவெட்டுக்களும் ஏற்பட்டுள்ளதாக கட்சி ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் காலை தந்தை செல்வாவின் நினைவு நாள் நிகழ்வுகள் வவுனியா மணிக்கூட்டுக் கோபுரப் பகுதியில் உள்ள தந்தை செல்வா நினைவு தூபியடியில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் என தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட தலைவரும் அக்கட்சியின் நீண்டகால மத்திய குழு உறுப்பினருமான டேவிட் நாதன் ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார்.

இந் நிலையில் காலை 9.00 மணிக்கு திடீரென தமிழ்த் தேசி 19 ஆம் பக்கம் பார்க்க...

## ஐ.நா.வுடன் சுமுக உறவு அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்புடன் சுமுகமான உறவுகள் பேணப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தினை நிராகரித்த போதிலும், ஐக்கிய நாடுகள் அமைப்புடன் பேணப்படும் உறவுகளில் விரிசல் நிலைமை ஏற்படவில்லை.

சர்வதேச அரங்கில் இலங்கை காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொறிமுறைமை மற்றும் மனிதாபிமான விவகாரங்களில் இலங்கை முக்கியமான பங்களிப்பினை வழங்கி வருகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைத் தீர்மானத்தை நிராகரித்ததன் மூலம் சர்வதேசத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டதாக அர்த்தமில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தென்னாபிரிக்க மத்தியஸ்தம் எச்சரிக்கையுடன் இந்தியா

### கூறுகிறார் கேணல் ஹரிஹரன்



இலங்கையில் அரசியல் தீர்வை ஏற்படுத்தும் விடயத்தில் தென்னாபிரிக்கா மத்தியஸ்தம் வகிக்கவுள்ளமை தொடர்பாக இந்திய அரசாங்கம் மிகவும் அவதானமாக இருக்குமென இந்திய இராணுவ புலனாய்வுப் பிரிவின் முன்னாள் அதிகாரி கேணல் ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தென்னாபிரிக்கா, இந்தியாவுடன் சிறந்த உறவை பேணுகின்ற நிலையில், சீனா மற்றும் பாகிஸ்தானைப் போல இந்தியா தென்னாபிரிக்காவை அச்சுறுத்தலான நாடாக கருதாது. ஆனால் இந்தியாவும் இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்துள்ளது. இதனை இலங்கை அரசாங்கம் ஏற்க மறுத்து வருகிறது.

நல்லிணக்கத்திற்கான அரசியல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதுடன் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு அடிப்படையான 13 ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்கம் செய்வதையே இந்தியா வலியுறுத்தி வருகிறது.

19 ஆம் பக்கம் பார்க்க...


உள்ளே

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புக்கள்

பௌதீகவியல்

ஜய வருட பொதுப் பலன்கள்

# சில்லறைக் கடை உடைத்து துணிகர கொள்ளை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முலவைச் சந்தியில் சில்லறைவியாபாரக் கடை ஒன்று உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், கடைக் கதவின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளதுடன், ஆள் நடமாட்டத்தைத் தொடர்ந்து திருடர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும், கடையின் உரிமையாளர் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பிஸ்கட் வகைகள் என்பனவே திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து யாழ். பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ)

## ஓமந்தைப் பகுதியில் இரும்புக்கடை தீக்கிரை

(வவுனியா)

ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகிலிருந்த இரும்புக் கடையொன்று நேற்றுமுன்தினம் இரவு திடீரென்று தீக்கிரையாகியுள்ளது. இதனால், 40 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக அக்கடை உரிமையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## சிறுவிளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*


அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3595)

### காணி, வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் சகல வசதிகளுடனுள்ள ஒரு வீடும், அதை அடுத்துள்ள இரண்டு சிறு வீடுகளாக்கக்கூடிய கட்டடத் தொகுதியும் விற்பனைக்குண்டு. வாங்குவோரின் வசதிக்கேற்ப சிறு சிறு பகுதிகளாகவும் விற்க முடியும். தொடர்பு : காலை, மாலையில் - க.சீவறட்ணம், சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (ஏகாம்பரம் கடையடி)
(R/347)


# வாழ்வின் எழுச்சி திணைக்களம் வவுனியாவில் திறந்து வைப்பு



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான வாழ்வின் எழுச்சி திணைக்களம் நேற்று வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திணைக்களத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இன்றைய தினம் 5 மாகாணங்களில் 6 வலயங்களில் வாழ்வின் எழுச்சி திணைக்களங்கள் திறந்து வைக்கப்படுகின்றன.

அரசின் கொள்கையின் அடிப்படையிலான வேலைத்திட்டங்களே மாவட்டங்கள் மற்றும் மாகாண மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் எமது மக்களின் வாழ்வாதார நிலைகளைப் பலப்படுத்துவதே அரசின் நோக்கமாகும். இவ்வாறான அபிவிருத்தி முன்னெடுப்புக்களின் போது அரசு இன, மத, மொழி பாரபட்சங்களை கருதாமலேயே அவற்றை மேற்கொண்டு வருகின்றது.

எமது மக்களுக்கு குறைபாடுகள் இருக்கலாம். அவற்றை பேசித் தீர்க்கக்கூடிய அரசியல் நடவடிக்கைகளையே நாம் முன்னெடுத்து வருகின்றோம். எனவே மக்களுக்கான நலன் சார்ந்த இவ்வாறான திட்டங்களை வலுப்படுத்தி முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அனைவரும் இணைந்து ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் வாழ்வின் எழுச்சி திட்ட மேலதிகப் பணிப்பாளர் நாயகம் குமாரசிறி வரவேற்புரை நிகழ்த்தினார்.

வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர திட்டத்தை தெளிவுபடுத்தினார். அமைச்சர் றிசாட் பதியுதீன், வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோர் உரைநிகழ்த்தினர். நிகழ்வில் மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், சமுர்த்தி அதிகாரிகள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோவில் வருடாந்த தேர்த்திருவிழா மிகவும் பக்தி பூர்வமாக நேற்று இடம்பெற்றது. இதன்போது மூர்த்திகள் எழுந்தருளுவதனையும், தேர் பவனி வருவதையும் காணலாம்.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2524 திகதி 26-04-2014

ஆங்கில எழுத்து: U

வெற்றி எண்கள்: 11 17 65 66

போனஸ் இல: 52

ஜக்பொட் பரிசு ரூ.12,803,425/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 205990 | 20/- | 4,119,800/- |
| 2 இல | 14728 | 100/- | 1,472,800/- |
| 3 இல | 310 | 1,000/- | 310,000/- |
| 4 இல | 2 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8221 | 40/- | 328,840/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 586 | 1,000/- | 586,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,803,425/- | - |
| 1 இல + போனஸ் இல | 9874 | 100/- | 987,400/- |
| 2 இல + போனஸ் இல | 474 | 500/- | 237,000/- |
| 3 இல + போனஸ் இல | 5 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 367 | 200/- | 73,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 14 | 1,500/- | 21,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 240578 | | 10,706,240/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.04.30 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 13,365,325/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


# வடமாகாண சபை அமர்வில் தவராசா

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட எஸ்.தவராசா இன்று வடமாகாண சபையில் தனது கன்னியுரையை நிகழ்த்தவுள்ளார்.

வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம் தலைமையில் இடம்பெறும் 8 ஆவது அமர்வு இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறுகின்றது.

இதன்போது வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.தவராசா சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவுள்ளதுடன், தனது கன்னியுரையையும் நிகழ்த்தவுள்ளார். (இ)






## சட்டவிரோத மணல் கடத்தல் சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்

சட்டவிரோத மணல் கொண்டு சென்றவேளையில் கைது செய்யப்பட்ட நால்வர் இன்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 24 ஆம் திகதி 4 உழவு இயந்திரங்களில சட்டவிரோதமாக மணல் கொண்டுசென்ற மூவர் கொழும்புத்துறைப் பகுதியில் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் இன்று நீதிமன்றில் முற்படுத் தப்படுவதுடன், மேலும் ஒருவர் இன்று நீதிமன்றில சரணடையவுள்ளதாகவும், இதன்போது கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரங்கள், மணல் என்பனவும் நீதிமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக யாழ். சமூக குற்றச் செயல்களைத் தடுக்கும் பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர். (இ)

# கிளிநொச்சி கல்விவலயத்திலுள்ள 5 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

## வலயக் கல்விப்பணிப்பாளர் தகவல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்தினுள் மொத்தமாக 112 பாடசாலைகள் இயங்கிவருகின்றன. இதில் 8 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் இதில் மூன்று பாடசாலைகள் மீள இயங்க வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் முருகவேள் தெரிவித்தார்.

1796 ஆசிரியர்கள் சம்பள இடாப்பில் கையொப்பம் இட்டு சம்பளம் பெறுவதோடு 95 ஆசிரியர்கள் தற்காலிக விடுப்பில் உள்ளனர் எனினும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த இரு ஆண்டுகளை விட 15 வீதம் அதிகரித்துள்ளதாகவும் இதேபோன்று க.பொ.த. சாதாரணதரம், க.பொ.த. உயர்தரம் ஆகிய பெறுபேறுகளிலும் உச்ச எல்லையை எய்தியுள்ளதாக கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் புள்ளிவிபரங்களுடன் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவில் தெரிவித்தார். (92)

# குடாநாட்டில் அதிகரித்துள்ள வேப்பம்பூ வடாக உற்பத்தி

(சாவகச்சேரி)

வடாக உற்பத்தி குடாநாட்டில் தற்போது ஆரம்பமாகியுள்ளது.

வசந்த காலம் ஆரம்பமானதைத் தொடர்ந்து வேப்பமரங்கள் அதிகளவில் பூத்துக் குலுங்கத் தொடங்கியுள்ள நிலையில், வேப்பம்பூ வடாக உற்பத்தி தற்போது ஆரம்பமாகியுள்ளது.

குடாநாட்டிலும் அதிகளவில் தென்மராட்சிப் பிரதேசங்களில் வடாகம் பெருமளவில் உற்பத்தி செய்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பெருமளவான வீடுளில் வேப்பம்பூ வடாகம் செய்து வெய்யிலில் உலர விடப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

விரத காலங்களிலும் ஆலய உற்சவ காலங்களிலும் வேப்பம்பூ வடாகத்திற்கு நல்ல கிராக்கி ஏற்படும் நிலையில் தற்போதுள்ள பருவகாலத்தில் அதன் உற்பத்தி வெகுவாக அதிகரித்திருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

அதுமட்டுமன்றி வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் அதிகளவில் வேப்பம்பூ வடாகத்தை வாங்குவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. (இ)

# மேதின பேரணியும் பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மக்கள் எழுச்சியை முன்னெடுப்போம். உழைக்கும் மக்களின் உரிமைகளை வலியுறுத்துவோம். என பல கோரிக்கைகளை முன்வைத்து மேதின பேரணியும் பொதுக் கூட்டமும் புதிய ஜனநாயக மாக்சிச - லெனினிச கட்சி எதிர்வரும் 1 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடாத்தவுள்ளது. மே 1 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் திருநெல்வேலி சந்தியில் இருந்து பேரணி ஆரம்பமாகி யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நிறைவடையும் பின்னர் மாலை 4.30 மணிக்கு அங்கு பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு புதிய ஜனநாயக மாக்சிச - லெனினிச கட்சியின் வடபிரதேச செயலாளர் செல்வம் - கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் உட்படப் பலரும் உரையாற்றவுள்ளனர். அன்று நடைபெறும் புரட்சிகர மேதின பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் உரிமைகளை வென்றெடுக்க புரட்சிகர உணர்வுடன் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு புதிய ஜனநாயகமாக்சிச லெனினிசக் கட்சியின் வடபிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் அறிவித்துள்ளார்.

# விவசாயிகளுக்கு விசேட பயிற்சி

(சங்கானை)

வலிகாமம் மேற்கில் உள்ள முன்மாதிரியான விவசாயிகளுக்கு விசேட விவசாயப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.


இதன் முதற்கட்டமாக கிராமங்கள் தோறும் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு இப்பயிற்சித் திட்டத்தில் இணைத்து கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முதலாம் கட்டப்பயிற்சிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன. சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியை மேற்கொள்வது இப்பயிற்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.



**கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு விழாவினை சிறப்பிக்கும் முகமாக சர்வதேச அங்கத்தவர்களின் நிதியுதவியுடன் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோருக்கு 10 ஆயிரம் ரூபாவினை நிலையத் தலைவர் ப.செல்லத்துரை கையளிப்பதைக் காணலாம். (51)**

# இலங்கையின் எழுத்தறிவுடையோர்... வாழ்க மக்காள்...!




**‘அதிகமாகப் படித்த தமிழர்கள், எல்லாந் தெரிந்த தமிழர்கள், இந்தப் பூமியிலேயே நம்பர் 1 ஆட்கள், எப்படி அரசியலில் மட்டும் தோற்றுப்போகிறார்கள்?’** என்று எனக்கு எப்போதும் குழப்பம்.

அதிலும் இந்தப் பத்திரிகைகளில், இணையத்தளங்களில் எழுதிக் கிழிக்கிறதைப் பார்த்தால் இந்தக் குழப்பம் இன்னும் உச்சத்துக்குப்போயிடும்.

அப்பப்பா, இப்ப அழச்சுக்கொண்டிருக்கிற வெயிலையும் விட இது கடுமையானது.

இதையெல்லாம் தாங்கிறதுக்கு ஒரு கழனமான – வலுவான இதயம் தனியாகத் தேவை. கணினிகளில் மேலதிகமாக ஒரு ‘கார்ட் டிஸ்க்’ ஐ வைத்திருப்பதைப்போல **நமக்கும் இந்த அரசியலுக்கு என தனியாக ஒரு இதயத்தைப் பொருத்திக் கொண்டால் பரவாயில்லை** என்று தோன்றும்.

அந்த அளவுக்கு அரசியலை எழுதியும் விவாதித்தும் கிழிக்கிறார்கள்.

ஆனால், இதனால் எல்லாம் என்னதான் பயன்?

ஏனென்றால், இவர்கள் எழுதுகிற அரசியலை அவர்கள் [அரசியல்வாதிகள்] படிப்பதில்லை. அரசியல்வாதிகள் மட்டுமல்ல, இந்த அரசியல்வாதிகளுக்கு ஒத்து ஊதுகிற எடுபிடிகளும் படிப்பதில்லை.

அப்படிப் படிப்பதென்றாலும் **இந்த மேதாவிகள் எழுதுவதில் பத்தில் ஒன்று கூட உருப்படியாக இருப்பதில்லை.**

எல்லாமே கற்பனையிலும் நடைமுறைக்கு எதிர்ப்பக்கத்தில் நின்று அடம்பிடிக்கிறதுமான விசயங்கள்.

உலகம் ஒரு பக்கமாகப் போக, இவர்கள் இன்னொரு பக்கமாகப் போவார்கள்.

இந்த நிலையில் அதிகமாகப் படித்தவர்கள், எல்லாம் தெரிந்தவர்கள், நம்பர் வண் ஆட்கள் என்ற கதையெல்லாம் சிரிப்புக்கிடம்தான்.

இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கும்போதுதான் ஒரு விசயம் கண்ணில் தட்டுப்பட்டுது. எழுத்தறிவு வீதம், படிப்பறிவு வீதம் பற்றிய ஒரு சிறிய – ஆனால், உண்மையான விளக்கம்.

‘இலங்கையில் எழுத்தறிவு வீதம் 97 வீதம்’ என்று சொல்லப்படுவதெல்லாம் புலுடா என்று அப்பதான் பட்டுது. அதிலும் ‘தமிழர்கள் 100 வீதம்’ என்று நெஞ்சை நிமிர்த்திக்கொள்வது **‘டபிள் புலுடா’**.

எழுத்தறிவும் படிப்பறிவும் சிந்திக்கும் ஆற்றலும் சரியாக இருந்திருக்குமாக இருந்தால், அந்த மக்கள் கூட்டம் தன்னுடைய அனைத்துப் பிரச்சினைகளையும் கடந்து சென்றிருக்கும். அல்லது தன்னுடைய பிரச்சினைகளை அது தீர்த்துக்கொண்டிருக்கும்.

ஆனால், தமிழ் மக்களோ பிரச்சினைகளின் இருட்டறைக்குள் நீண்டகாலமாகக் கிடந்து தங்களைத் தாங்களே சிக்க வைக்கும் வலைகளை அல்லவா பின்னிக்கொண்டிருக்கிறார்கள்! அல்லது, இப்படி திரும்பத்திரும்பத் தோற்கிற, **‘தங்களைக் காப்பாற்றவும் ஈடேற்றவும் ரட்சகர்கள் வெளியிலிருந்து வருவார்கள் என்று நம்புகின்ற மக்களாகவும் இருப்பார்களா?’**

எனவேதான் என்னுடைய கண்ணில் பட்ட ஒரு விசயத்தை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எழுத்தறிவு – படிப்பறிவு என்பது, **‘வெறுமனே எழுத்துக்கூட்டி வாசிக்கத் தெரிவது மட்டுமே எழுத்தறிவு வீதம் என்று அமைந்துவிடாது. ஒரு விடயத்தை வாசித்துக் கிரகிக்கும் திறனும், அதனை திறனாய்வு நிலையில் ஆய்வு செய்யும் திறனும், அதுகுறித்து பதிற்குறியாற்றும் திறனும் இருந்தாலே அது எழுத்தறிவு வீதம் என்று கருதப்பட முடியும்.**

**எழுத்தறிவு வீதம் என்பது அதிகம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.**

**வேறுபட்ட விடயங்களைக் கூறும் அச்சுருவிலான எழுத்துக்களாலான விடயங்களை அடையாளம் காண, புரிந்துகொள்ள, வியாக்கியானிக்க, புதிதாக உருவாக்க, தொடர்புபடுத்தத் தெரிந்திருக்கவேண்டும். அத்துடன், இது தொடர்ச்சியான கற்கை, இலக்குகளை எட்டுவதற்கான இயல்தகைமையைப் பெறல், அறிவை விருத்தி செய்து உள்ளார்ந்த சக்தியை வளர்த்தல், பரந்தளவிலான சமுதாயத்துடன் ஊடாட்டம் செய்தல் என்பனவாக இது அமையும்.**

**எழுத்தறிவு வீதம் உள்ளவர்கள் என்றால், அவர்கள் சுய ஒழுக்கம், கட்டுப்பாடு உடையவர்களாக இருப்பர். பாதசாரிகளையும், பிற வாகன ஓட்டுநர்களையும் மதிக்காத வாகன ஓட்டம், கண்ட இடத்திலெல்லாம் குப்பை கொட்டுதல், வயோதிபர்களுக்கு மதிப்பளிக்காத தன்மை, வரிசையில் பொறுமையாக நின்று செயற்படாமல் குறுக்காக ஓடுதல், ஊழல், இலஞ்சம், மக்களுடைய கருத்துக்களை அறியாத அரசியல்வாதிகளின் முடிவெடுக்கும் தன்மை, முட்டாள்தனமாகவும் ஏமாற்றுவோராகவும் உள்ள அரசியல்வாதிகளை ஆதரிக்கும் மனநிலை எல்லாவற்றையும் பார்க்கும்போது, இலங்கையின் எழுத்தறிவு வீதம் எந்தளவு இருப்பதாகத் தெரிகிறது?**

இந்தளவு பரந்த அர்த்தத்தில் நமது நாட்டில் எத்தனை பேர் எழுத்தறிவுடையோராக – அறிவுடையோராக இருக்கின்றனர்?

நம்முடைய ‘மெத்தப் படித்த தமிழர்கள்’ ‘நம்பர் 1 ஆட்கள்’ எல்லாம் இன்னும் காடுகளில் கோடரிகளோடும் வேட்டை நாய்களோடும் நிற்பதாகத்தான் எனக்குத் தோன்றியது.

என்ன செய்வது, கிணற்றுக்குள் இருக்கும் தவளைக்கு கிணறே மிகப்பெரிய உலகம். தமிழர்களின் மனதும் மூளையும் கிணற்றின் அளவுக்குத்தான்.

தமிழர்களின் மனமும் மூளையும் மட்டுமல்ல, சிங்களவர்களுடையதும்தான். அவர்களும் நமது சகோதர இனம் – சகோதர மக்கள் அல்லவா!

ஆகவே, இலங்கையர்களின் எழுத்தறிவு வீதம் ஒன்றும் குறைவானதேயல்ல. வாழ்க படித்த மக்காள்....!

இல்லத்தில் இணக்கமுடன் வாழ்ந்தால், அது தாய்நாட்டில் சட்டத்தை மதிக்கத் தூண்டும். - சீனப் பழமொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மாணவர்களிடம் பேசும் பேச்சா இது?

நேற்று முன்தினம் வடமராட்சியிலுள்ள சனசமூகநிலையம் ஒன்றின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகளும் அதற்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன.

அதற்கு சிறப்பு விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. ஒருவரும் அழைக்கப்பட்டிருந்தார். அந்த எம்.பி பத்திரிகை ஒன்றை நடத்துவதால், அவரை அழைத்தால் அந்தப் பத்திரிகை தங்களுடைய நிகழ்ச்சியை முக்கியத்துவம் கொடுத்து செய்தியாக வெளியிடும் என்று விழா ஏற்பாட்டாளர்கள் எண்ணியிருக்கலாம்.

அந்த எண்ணம் தவறானதில்லை. ஆனால், அதற்கு விலையாக அவர்கள் கொடுக்க வேண்டியிருந்தது, பாடசாலை மாணவக் குருத்துகளின் மனதில் கல்வி மற்றும் ஒழுக்க விதைகளை ஊன்றுவதற்குப் பதிலாக அரசியல் காழ்ப்புணர்ச்சிகளையும், காலங் காலமாகத் தமிழர்களிடம் தொடர்ந்துவரும் முட்டாள்தனச் சவால்களையும் சிறப்பு விருந்தினர் பேச்சாகக் கேட்க வைத்து சிறார்கள் மனங்களிலும் நஞ்சைக் கலந்து வீட்டுக்கு அனுப்பியதுதான்.

இவர்கள் பாடசாலைச் சிறார்கள் மத்தியில் போய் ஏன் ஆளுநர் பற்றியும் பிரதம செயலாளரை மாற்றுவது பற்றியும் ராணுவத்தை விரட்டுவது பற்றியும் அரச துவேச அரசியலைப் பேசுகிறார்கள்? ஊர்ப் பெரியவர்களும் இதையெல்லாம் ஏன் அனுமதிக்கிறார்கள்?

மாணவர்களுக்கு எதற்கு இப்போது இந்த அரச எதிர்ப்பு வீராவேச அரசியலை ஊட்ட வேண்டும்? மாணவர்களிடத்தில் கல்வியின் அவசியம் பற்றியும் மற்றவர்கள் மீது வெறுப்பும் குரோதமும் கொண்டு வளராமல் ஒழுக்கமுள்ள குடிமகன்களாக வளர வேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துரைக்கக் கூடிய அறிஞர்களையல்லவா இத்தகைய மாணவர் விழாக்களில் பங்கேற்க வைக்கவேண்டும்; பேசவைக்க வேண்டும்?

மாணவர்களுக்கான விழாக்களை நடத்துபவர்களுக்கு அத்தகைய பொறுப்புணர்ச்சி தேவையில்லையா? தொடர்ந்து மாணவர்களுக்கு அரச எதிர்ப்புப் போராட்ட ஆவேசத்தையும், இந்த நாட்டில் எதுவும் சரிவராது என்ற வெறுப்பு வீம்பையும், மற்ற மற்ற இனத்தவரெல்லாம் நம்மைப் போன்ற மனிதர்களல்ல நாம் வெறுத்தொதுக்க வேண்டிய எதிரிகள் என்ற பாலபாடத்தையுமா வழங்கிக் கொண்டிருக்கப் போகிறோம்?

இந்த உணர்ச்சிப் பிரவாக வெறுப்பரசியல் விளைத்த தீமைகளையெல்லாம் இனியுங்கூடவா நாம் உணர்ந்துகொள்ள மறுப்பது? அதே பேச்சுக்களையும் ஆவேசக் கூச்சல்களையும் பிஞ்சு மனங்களிலும் ஏற்றிவிட இப்போதும் துணைபோய்க் கொண்டிருப்பதா? ஊரில் சனசமூக நிலையங்களை அமைத்துச் செயற்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்த பெரியவர்களுக்கு, மனங்களில் நஞ்சைக் கலக்கும் பேச்சுக்களை விலக்கத் தெரியாதா?

இத்தகைய சொந்தலாப அரசியல் பேச்சாளர்களிடமிருந்து உணர்ச்சிகரமாக வெறுப்பை வாங்கிக் கொள்ளும் மனம் வன்முறையின்பால்தான் திரும்பும். வன்முறையைத் தூண்டி, வன்முறையை நியாயப்படுத்தி, வன்முறையைக் கவர்ச்சியாக்கி, வன்முறையை வீரமாக்கி, எங்கள் வன்முறையைப் பலப்படுத்த எதிர்த்தரப்பு வன்முறையை வரவேற்று, எதிர்த்தரப்பு வன்முறையை எங்கள் தரப்பு வன்முறைக்கு நியாயமாக்கி, வன்முறையால் நாம் நொந்ததுக்கு வன்முறையால் பதிலடிப்பதே வீரமும் திருப்தியும் என்றாகி.... எங்களை மீண்டும் கொடிய போர்ச்சுழலுக்குள் தள்ளிவிடும் இந்த வெறுப்பு.

வெறுப்பையும் விவேகமற்ற பகையுணர்ச்சியையும் தங்கள் சொந்த ஆகாசக் கோட்டைகளுக்காக இங்கே வளர்ப்போரிடமிருந்து நாம் விலக வேண்டும். இல்லாவிடின், இன்றைய விஷச் சுழலிலிருந்து நமக்கு மீட்சி இல்லை.

- ஆசிரியர்

# ஆட்கடத்தலைத்தடுப்பதற்கு ஆஸி.யுடன் இணைந்து கண்காணிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத் தலைக்கட்டுப் படுத்துவதற்காக அவுஸ்ரேலியாவில் எல்லைப் பாதுகாப்புப்படையும் இலங்கை கடற்படையும் இணைந்து கூட்டு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றனர். இதற்காக இருநாட்டு அதிகாரிகளுக்குமிடையில் வேலைத்திட்ட உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேவேளை போலி புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்துவதற்கு அவுஸ்ரேலியா திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்துடன் அவுஸ்ரேலிய அரசாங்கம் இது தொடர்பில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் அவுஸ்ரேலியாவில் போலியான முறையில் புகலிடம் பெற்றுக்கொண்டவர்களை நாடு கடத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் குறித்து அரசாங்கத்துடன் அவுஸ்ரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவு இணைந்து செயற்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. கடந்த கால அரசாங்கங்களின் போது சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் பிரவேசித்து புகலிடம் பெற்றுக்கொண்டவர்களையும் நாடு கடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற பாதுகாப்புக் கூட்டமொன்றில் அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிஸனுக்கும், இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

# தரமற்ற குடிநீர் விநியோகம் கட்டுப்படுத்த செயற்றிட்டம்

(கொழும்பு)

குடிநீர் விநியோகத்தில் காணப்படும் முறைகேடுகளை கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் புதிய செயற்றிட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படும் குடிநீர் போத்தல்கள் தொடர்பில் விசேட சோதனை நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் காலி ஆகிய பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகள் இரண்டில் மண்ணெண்ணெய் கலக்கப்பட்ட குடிநீர்ப் போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அதிகார சபையின் பணிப்பாளர் அசேல பண்டார குறிப்பிட்டார்.

தொழிற்சாலைகள் இரண்டில் மண்ணெண்ணெய் கலக்கப்பட்ட குடிநீர்ப் போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு குடிநீர்ப் போத்தல்களில் ஏனைய இரசாயனப் பொருட்கள் கலக்கப்பட்டுள்ளதா என்பதை அறிவதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகளால் விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அதிகார சபையின் பணிப்பாளர் அசேல பண்டார சுட்டிக் காட்டினார்.

# நவீன தொழிற் பயிற்சிகள் முல்லையில் ஆரம்பம்

## விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்

தகவல் தொழில்நுட்பம் உட்பட பல்வேறு தொழில்நுட்பக்கற்கை நெறிகள் முல்லை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்காலத்தில் அரச, தனியார், வெளிநாடு, கூட்டுறவுத்துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெறும் பொருட்டும், தொழில் தருனர்களால் எதிர்பார்க்கப்படும் தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களைப் பெறும் பொருட்டும் இப் புதிய கற்கைநெறிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம் பமாக உள்ளன.

இவ்வகையில் பாலிநகரில், தகவல் தொழில்நுட்பம் (NVQ-iv) ஆண், பெண் இருபாலாருக்குமான தையற்கலை (NVQ-III) வீட்டு மின்னிணைப்பு (NVQ-III) ஆகிய கற்கை நெறிகளும்,

ஒட்டுசுட்டான் தகவல் தொழில்நுட்பம் (NVQ-iv) தையற்கலை (NVQ-III) ஆகிய கற்கை நெறிகளும்,

முல்லை தொழிநுட்ப வளாகத்தில் (Mullai - Tech) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (NVQ-iv), கணனி வன்பொருள் தொழில்நுட்பம் (NVQ-III), பெண்களுக்கான அழகுக்கலை, சிகை அலங்காரம் (NVQ-iv), தையற்கலை (NVQ-III), முச்சக்கர வண்டி திருத்துனர் (NVQ-III), அலுமினியக்கட்டுமானம் (NVQ-III), வீட்டு மின்னிணைப்பு (NVQ-III), நீர்க்குழாய் பொருத்துனர் (NVQ-III), வெளியிணைப்பு இயந்திர திருத்தம் (NVQ-III) ஆகிய கற்றை நெறிகளும் ஆரம் பமாக உள்ளன.

மேற்படி கற்கைநெறிகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் வலுவூட்டலுடன் சிறப்பாக நடைபெறவிருப்பதால் ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் "உதவிப்பணிப்பாளர், மாவட்டதொழிற் பயிற்சி நிலையம், (நீதிமன்ற) மாங்குளம் வீதி, முல்லைத்தீவு" எனும் முகவரிக்கு நேரில் அல்லது தபால் மூலம் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்களை வழங்குவதன் மூலம் இணைந்து கொள்ளலாம்.

அல்லது 071 0318989, 071 0318990, 071 0318991, 077 3469133, 077 1527059, 077 0691666 எனும் இலக்கங்களுக்கு தமது பெயர் முகவரியுடன் கற்கவிரும்பும் கற்கைநெறியையும் குறுந்தகவல் மூலம் அனுப்பி பதிவுசெய்ய முடியும்.

எதிர்காலத்தில் வேலைவாய்ப்பில் தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் கட்டாயம் தேவைப்படுவதால் இவ்வாய்ப்பை தவறவிடாது பயன்படுத்தும் வண்ணம் வேண்டுகின்றோம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 15.06.2014 இற்கு முன்பாக விண்ணப்பிக்க முடியும்.

# மூலோபாய அபிவிருத்தி ஐ.தே.க. நிலை என்ன?

## ரணில் நாடுதிரும்பியதும் இறுதிமுடிவு

(கொழும்பு)

மூலோபாய அபிவிருத்தித்திட்டம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிந்திய நிலைப்பாடு என்ன என்று இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும், மூலோபாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட வர்த்தமானி பத்திரங்கள் தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் பதில் தலைவர் ஜோன் அமரதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தற்போது அமெரிக்காவில் உள்ள எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நாடு திரும்பிய பின்னரே மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கு மக்களுக்கான உண்மையான அபிவிருத்தி அரசியலை நோக்கி...!

சாலையூரான்

தமிழ் மக்களுக்காக இதுவரை அரசு முன்னெடுத்த திட்டங்களை தமிழ் மக்கள் சாதகமாக நோக்க முடியாமல் இருப்பதை, இறுதிப் போரை அடுத்து இடம் பெற்ற நான்கு தேர்தல்களிலும் அரச-சார்பு கட்சிகளுக்கு மக்கள் வழங்கியிருக்கும் வாக்குகள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

இதில் தமிழ்த் தேசிய உணர்வு வலிந்து தூண்டப்படுவதால் தமிழர்கள் மனதில் எழும் தேர்தல் கால உணர்ச்சிக் கொந்தளிப்புகளை நாம் காரணமாகக் கூறிக் கொண்டிருப்பதற்கு பதில் இந்தக் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளில் பிரச்சினைகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலாவது, போரை அடுத்து வடபகுதி மக்களுக்காக அரசு முன்னெடுத்த திட்டங்களில் போரின் பின்னரான ஒழுங்கு படுத்தப்பட்ட மீள் குடியேற்றமும் அதனோடு இணைந்ததாக அந்த மக்களின் நிலையான குடும்ப வருமானங்களை உத்தரவாதம் செய்தல் என்கிற விடயமும் விசேட கவனத்திற்குரியதாகும்.

மோசமான யுத்த அழிவின் பின்னரான மீள் குடியேற்றம் என்பது குடும்பத் தலைவர்களை, உறவுகளை இழந்து விட்ட ஒரு சூழலில், அவர்கள் இருக்கின்றார்களா இல்லையா என்பதை அறிந்து கொள்வதென்பதும் சாத்தியமற்றதாக இருந்த ஒரு சூழலில், இம் மீள்குடியேற்றத்தை சாதகமாக அல்லது தற்காலிகமாக நிம்மதியை தரும் ஒரு செயற்பாடாக தமிழ் மக்கள் நோக்க முடியாமற்போயிருப்பதும் கவனத்திற்குரிய விடயம்.

தாம் திரும்பவும் புலிச் சந்தேக நபர்களாக கருதப்படும் ஒரு சூழலுக்குள் மீண்டும் வந்து விட்டோமா என அந்த மக்கள் அச்சம் கொள்ளுமொரு நிலைமையும் உருவாகி இருக்கின்றது என்பது வேறு விடயம்.

அபிவிருத்திக்கான அரசியல் என்கிற விடயத்துக்கு வருவோம். இடம்பெற்ற அபிவிருத்திகளை தமக்கானது என்பதை குறித்த பிரதேசத்தில் வாழ்வோர் தொட்டுணரும் வகையில் அந்த மக்களுடன் முன்னுரிமைப்படுத்த வேண்டிய திட்டங்கள் அபிவிருத்திக்காக ஆராயப்பட்டிருக்க வேண்டும்.

சரி, அவ்வாறு ஆராயப்படாத திட்டமாக இருப்பினும், முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் அவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய குறிப்பான முன்னேற்றம் என்னவென்பதை ஆராய்ந்தறியும் ஒரு முன்னேற்பாடாவது இருந்திருக்க வேண்டும்.

உதாரணத்துக்கு, போரின் பின்னரான விசேட ஏற்பாடாக தமிழ் சூழலில் முன்னெடுக்கப்பட்ட அரசின் வங்கிக் கடன் உதவி திட்டத்தை எடுத்துக் கொள்வோம்.

விவசாயிகளால் கடனாக பெறப்படும் பணம் குறித்த நோக்கத்துக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பது திட்டம் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்தே கண்காணிக்க ஏற்பாடு இருந்திருக்க வேண்டும்.

அந்த ஏற்பாட்டின் பிரகாரம் இத்திட்டத்தை தொடர்வதா அன்றி இடைநிறுத்துவதா என்பதை முன் கூட்டியே அரசு தீர்மானித்திருக்க முடியும். ஆனால், நடந்தது வேறு. இப்பணத்தை பெற்றுக் கொண்ட விவசாயிகள் இவற்றை திருப்பிச் செலுத்த முடியாமற் போனமைக்காக இப்போது கடன் குற்றவாளிகளாக்கப் பட்டிருக்கிறார்கள். போதாக்குறைக்கு கடன் கொடுத்த வங்கி அதிகாரிகளும் விசாரணைக்குட்படும் அவலநிலை.

**இவர்கள் வென்றாலென்ன தோற்றாலென்ன மத்தியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் இவ்வாறான அபிவிருத்திகளை முன்னெடுப்பது அரசின் கடமை, இதற்காக இவர்களுக்கு வாக்குகளைப் போடத் தேவையில்லை என்பதாக தமிழ் மக்கள் சிந்திக்கும் போக்கு இருப்பதும் உண்மையான ஒரு நிலைமையாகும்.**

அடுத்த விடயம் வடக்கின் அபிவிருத்தியில் மிகவும் மேன்நிலையில் இருந்த குடாநாட்டின் குடிசைக் கைத்தொழில்களை மீள் உருவாக்கம் செய்தல் என்கிற விடயம் கவனத்தில் கொள்ளப் படவில்லை.

இவை யுத்தத்துக்கு முந்திய சூழலில் கணிசமான அளவுக்கு வெளிமாவட்ட சந்தைகளையும் ஈர்க்கக் கூடிய குடாநாட்டு மக்களின் பாரிய சுயதொழில் உற்பத்தி நடவடிக்கைகளாகும்.

இதில் குடாநாட்டின் பனைசார் உற்பத்திகள், தானிய மற்றும் எண்ணெய் வகைகளின் உற்பத்தி, பணப்பயிர் உற்பத்திகளுடன் தொடர்புபட்ட முயற்சிகள் பிரதானமானவை.

குடாநாட்டில் இந்த உற்பத்திகளுடன் தொடர்புபட்டு அப்போது தமிழ் சூழலில் வலுப்பெற்றிருந்த தொழில் சார் அமைப்புக்களின் கூட்டான அவற்றின் சமூகப் பலம் என்பதும் கவனத்துக்குரிய ஒன்று. அவற்றின் போருக்குப்பிந்திய நிலைமைகளை இந்த அபிவிருத்தி அரசியல் மேலான கவனத்திலெடுத்து செயற்படுத்தியிருக்க வேண்டும்.

யுத்தத்துக்கு பின்பு இவற்றுக்கான திட்டங்களை அணுகியதில் இந்த உற்பத்தியாளர்களின் வாழ்விடம் சார்ந்து குறிப்பான சூழலில் இந்த உற்பத்திகளுக்கு புத்துயிர் கொடுப்பது என்கிற விடயம் வடக்கின் அபிவிருத்தி அரசியலில் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

அடுத்தது வடக்கில் அமைந்திருந்த முழு இலங்கைக்குமான அரசின் பாரிய உற்பத்தி மையங்களை மீளமைப்பது என்பது வடக்கின் அபிவிருத்தியில் முக்கியமான ஒரு விடயமாகும்.

இதில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை, மற்றும் காங்கேசன் இறங்கு துறையின் அபிவிருத்தி முன்னெடுப்புக்கான திட்டங்கள் என்பன பிரதானமானவை.

இவற்றின் புனரமைப்பு தாமதமாவதால் ஏற்பட்டிருக்கும் பிரதான விளைவு, இந்த அரச கூட்டுத்தாபனங்களை சார்ந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வழங்கக் கூடிய வேலைவாய்ப்புக்கள் மறுதலிக்கப்பட்டிருப்பதாகும்.

அதேவேளை இவற்றின் மீள் இயக்கம் முடக்கப்பட்டிருப்பதை, தாம் மீளுருப் பெறுவதை அரசு விரும்பவில்லை என்பதாகத் தமிழ் மக்கள் உணரும் நிலைக்கு தள்ளியிருப்பது அரசின் அபிவிருத்தி அரசியலை பாதகமாக நோக்க நிர்ப்பந்திக்கும் ஒரு செயன்முறையாகும்.

நாட்டில் இடம்பெற்ற தேசிய மட்ட அபிவிருத்திகளை உரிமை கோரும் தேர்தல் பிரசாரம் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதையும் இங்கே குறித்துக் கொள்ள வேண்டும்.

தனிநபரின் வாழ்க்கை வருமானங்களுக்கு வழியேற்படுத்தப்படாத இந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகளை, “தமிழ் மக்களுக்காக அரசு என்ன செய்தது”என எதிர்க் கட்சிகள் எழுப்பும் கேள்விகளில் அரசுக்கெதிராக தமிழ் மக்கள் சிந்திக்கும் ஒரு நிலைமை இருப்பதையும் காணலாம்.

இந்த அபிவிருத்திகள் நடைபெற்றிருக்கின்றன என்பது உண்மையே எனினும் நாளாந்தம் பொருட்களின் விலையேற்றத்தால் மிகுந்த பாதிப்பை எதிர்கொண்டிருக்கும் எமது மக்களுக்கு நடைபெற்ற இந்த அபிவிருத்திகள் நேரடி வாழ்க்கை வருமானமொன்றை வழங்குவதாக அமையவில்லை என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இந்த நிலையில் இந்தக் கட்சிகளோ வேட்பாளர்களோ இவர்கள் வென்றாலென்ன தோற்றாலென்ன மத்தியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் 'இவ்வாறான அபிவிருத்திகளை முன்னெடுப்பது அரசின் கடமை, இதற்காக இவர்களுக்கு வாக்குகளைப் போடத் தேவையில்லை என்பதாக தமிழ் மக்கள் சிந்திக்கும் போக்கு இருப்பதும் உண்மையான ஒரு நிலைமையாகும்.

அரசின் அபிவிருத்தி முன்னெடுப்புக்களில் தேர்தல் நெருங்கும் காலங்களில் கட்சிமுறை அரசியல் மூலமான போட்டி பூசல்களுக்குள் இந்த வேட்பாளர்கள் சிக்கிக் கொண்டிருப்பது முக்கியமான ஒரு பிரச்சினையாகும்.

ஆளும் கட்சி என்பது பங்காளிக் கட்சி முறைமையை மையமாகக் கொண்டிருப்பதால் தேர்தல் காலத்தில் ஒரே சின்னத்தில் பல கட்சிகள் போட்டியிடும் நிலைமை இருப்பதும் அதன்வழி இதில் போட்டியிடும் வேட்பாளர்கள் விருப்பு வாக்குகளுக்காக முரண் நிலைகளை எடுப்பதும் சிக்கலை உருவாக்குகின்றன.

அரசு சார்பாக போட்டியிடும் இந்த வேட்பாளர்களை ஒருமுகமாக நோக்க முடியாத சங்கடமான நிலையை தமிழ் மக்கள் எதிர்கொண்டிருப்பது அடுத்த முக்கிய பிரச்சினையாகும்.

போருக்குப் பின்னரும் இனத்துவ நிலைப்பட்டு சிந்திக்கும் சூழலொன்றுக்குள் தமிழ் மக்கள் தள்ளப்பட்டிருக்கும் ஒரு நிலையில், தமிழ் மக்களின் அபிவிருத்திக்காக என போட்டியிடும் இந்த வேட்பாளர்கள் அனைவரும் இந்த மக்களின் வாழ்விடங்கள் சார்ந்து தாம் கூட்டாக இனங்கண்ட திட்டங்களை அறிவிக்க வேண்டும்.

மறுபுறத்தே தமிழ் கூட்டமைப்புக்குள் உள்ள பங்காளிக் கட்சிகள் மோசமான குத்துவெட்டுக்களை தமக்குள் கொண்டிருக்கின்ற போதும் தேர்தல் காலங்களில் மேடைகளில் வேட்பாளர்கள் ஒன்றாக தோன்றும் பிரசார பொறிமுறையை அரசின் பங்காளிக் கட்சிகள் கண்டுகொள்ளத் தவறியிருப்பது குறிப்பிட வேண்டிய ஒரு விடயம்.

வேட்பாளர்களிடையே கூட்டுச் சேரும் இந்த செயன்முறையை காண முடியாதிருப்பதன் மறுவிளைவு கூடவே இந்தக் கட்சிகள் பற்றிய கூட்டான ஒரு உணர்வை தமிழ் மக்கள் கண்டு கொள்ளத் தவறிவிடுவதாகும்.

இதன் தொடர்ச்சியானது இதில் போட்டியிடும் வேட்பாளர்களை மேலும் உதிரிகளாக்கி அவர்களை ஆதரிப்பதாக பொய் வாக்குறுதிகளை வழங்கி ஏதாவது பொருள், பண உதவிகளை இந்த வேட்பாளர்களிடம் இருந்து கறந்து விடவேண்டும் என்று தமிழ் மக்கள் சிந்திக்கும் நிலைக்கு தள்ளிவிடுகிறது.

மற்றொரு விடயம் என்னவெனில், உண்மையான நம்பிக்கையான பயிற்றப்பட்ட ஊழியர்களை இந்தக் கட்சிகள் கொண்டிருக்காமையாகும். இந்த நிலைமைக்கான பிரதான காரணம், ஒரு வரன்முறையான

**மக்களுக்கான திட்டங்களை இனங்காண்பது, அதனை வழிமொழிவது என்ற ரீதியில் இதற்கான பயிற்றப்பட்ட ஊழியர்களை அவ் அரசியல் கட்சி உருவாக்கிக் கொள்வதென்பது இந்த அபிவிருத்திக்கான அரசியலைப் பொறுத்தவரை முக்கியமான ஒரு விடயமாகும்.**


அபிவிருத்தி அரசியலொன்றுக்காக ஆற்றவேண்டியிருக்கும் அவசியமான கட்சிப்பணியை இந்த கட்சிகள் கண்டு கொள்ளத் தவறியிருப்பதாகும்.

மக்களுக்கான அபிவிருத்தி என்பது உண்மையில் குறித்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூர் அமைப்புக்களால் இனங்கண்டு முன்மொழியப்பட வேண்டியவை. சரியான திட்டங்களை அந்த அமைப்புக்கள் இனங்கண்டு கொள்வதற்கு, அந்த மக்களுக்காக முறையான அபிவிருத்தி செயன்முறை வழிகாட்டலை அரசியல் கட்சிகள் வழங்குவது அவசியம்.

அவ்வாறான ஒரு ஊழிய முறைமையை... அதாவது, மக்களுக்கான திட்டங்களை இனங்காண்பது, அதனை வழிமொழிவது என்ற ரீதியில் இதற்கான பயிற்றப்பட்ட ஊழியர்களை அவ் அரசியல் கட்சி உருவாக்கிக் கொள்வதென்பது இந்த அபிவிருத்திக்கான அரசியலைப் பொறுத்தவரை முக்கியமான ஒரு விடயமாகும். தேர்தல் காலங்களுக்கு மட்டுமென பருவகால ஊழியர்களாக இவர்கள் திரட்டப்படுவது ஒரு முக்கியமான குறைபாடாகும்.

மொத்தத்தில் இந்தக் கட்சி ஊழியர்களை, உதவிகள் பெறவென தேடி-வரும் பொதுமக்களும் இந்தக் கட்சிகளுக்கு வழங்குவதாக கூறும் ஆதரவு என்பதும் போலியானதாகவே அமைந்து விடுகிறது.

இதுதான் உண்மை நிலைமை எனின் இடம்பெறும் அபிவிருத்திகளின் நன்மையை மக்கள் நேரடியாக அடைந்து கொள்ளும் வகையிலான அரசியல் செயற்பாடொன்றை முறையாக வகை தெரிந்து கொள்ள வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தத்துக்குள் நாமெல்லோரும் வந்து நிற்கிறோம். நாம் அனைவரும் கூட்டாக சிந்திப்பது அவசியமாகிறது.



# படகு மூலம் ஆஸி. பயணம் பயணித்த பலர் மாயம்

## காலம் கடந்து கசிகிறது தகவல்

(கொழும்பு)

படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவுக்கு கடத்தப்பட்ட நூற்றுக்கணக்கானோர் காணாமற்போய் விட்டதாக இப்போது அதிர்ச்சித்தகவல் வெளியாகியுள்ளது.

படகுகள் மூலம் ஆட்களைக் கடத்தும் நபர் ஒருவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியபோதே மேற்படி அதிர்ச்சித்தகவல் வெளியாகியுள்ளது.

ஆட்கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்ட மேற்படி நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், 500இற்கும் அதிகமானவர்களை படகுமூலம் அவரால் வெளிநாடுகளுக்கு அகதிகளாக அனுப்பப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த அவர் கடந்த மாதம் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் எவ்வாறு அகதிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பினார் என்பது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுதவிர, அண்மையில் அந்தமான் தீவுகளுக்கு அகதிகள் குழு ஒன்றை அனுப்பியுள்ளமை தொடர்பிலும் தகவல் கிடைத்துள்ளது. அதேநேரம் அவரால் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அகதிகளை காணவில்லை அல்லது கடலில் மூழ்கியதாக அவர்களின் உறவினர்களால் முறைபாடுகள் தெரிவிககப்பட்டுள்ளன.

தற்போது அவர் தொடர்ந்து குற்றவியல் தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# யுத்தத்துக்குப் பிந்திய அபிவிருத்தி புதிய கற்கை நெறிகள் விரைவில்



(கொழும்பு)

யுத்தத்துக்கு பிந்திய மீள் கட்டுமானம் தொடர்பிலான புதிய பாடத்திட்டங்களும் புதிய கற்கை நெறிகளும் உருவாக்கப் படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக நாட்டின் அபிவிருத்திக்கு பொருந்தும் வகையில் பல்கலைக்கழகத்தில் புதிய பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய புதிய பொறியியல் பாடத்திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சினில் ஜயந்த நவரத்ன குறிப்பிட்டார்.

புதிய பாடத்திட்டத்திற்கு உள்வாங்கப்படும் பொறியியலாளர்களுக்கான பயிற்சிகளுக்காக தொழிநுட்ப அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர மேலும் பல புதிய பாடத்திட்டங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். இதற்கான நிதி ஒதுக்கீடுகள் திறைச்சேரியால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

# இலங்கையர்களை அழைக்க ஏற்பாடு

லிபியாவில் நிலவும் பாதுகாப்பற்ற நிலைமை காரணமாக அங்கிருக்கும் 14 இலங்கையர்களை நாட்டிற்கு மீள வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர்களை நாட்டிற்கு மீள வரவழைப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய தெரிவித்தார்.

லிபியாவிலுள்ள இலங்கையர்களை வரவழைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த வாரத்திற்குள் அவர்களை வரவழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டுள்ளதாகவும் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

# யுத்தத்தால் இடம்பெயர்ந்தோர் இன்னும் மீள்குடியமராதது ஏன்?

## காரணம் அறிய வருகிறார் ஐ.நா. தூதுவர்

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் முழுமையாக மீள்குடியமர்த்தப்பட்டாதது ஏன் என்ற காரணத்தைக் கண்டறிவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனை முதற்கட்டமாக இவ்விடயம் தொடர்பான கள நிலமை அறிவதற்காக ஐ.நா. சபையின் விசேட பிரதிநிதி ஒருவர் மிக விரைவில் வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ளார்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மேற்படி விசேட பிரதிநிதி



யொருவர் அடுத்த மாத நடுப் பகுதியில் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

குடிபெயருவோர் தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி பிரான்கோயிஸ் கிரிபியாயு (François Crépeau) என்பவரே இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 19ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரையில் இலங்கையில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை விஜயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உள்ளக இடம் பெயர்வு தொடர்பான விசேட பிரதிநிதி பியானி இலங்கைக்கு விஜயம் செய்து அறிக்கை சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உள்ளூர் மதுபானம் உயிருக்கு உலை

(கொழும்பு)

மீரிகம,பல்லேவெல எனுமிடத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மதுபானத்தை (வைன்) அருந்திய இருவர் மரணமடைந்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரும் பொலிஸார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# சட்டமூல வாக்கெடுப்பு புறக்கணிக்கப்பட்டது ஏன்?

## ஒழுக்காற்று விசாரணை விரைவில்

தந்திரோபாய அபிவிருத்திச் சட்டம் மீதான வாக்கெடுப்பினை ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஐம்பது பேர் திட்டமிடப்பட்டுப் புறக்கணித்தனரா என்ற தோரணையில் ஒழுக்காற்று விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆளும் கட்சியின் 50 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசா ரணை நடத்தப்படவுள்ளது. அண்மையில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தந்திரோபாய அபிவிருத்திச் சட்டம் தொடர்பிலான வாக்கெடுப்புத் தொடர்பில இவ்வாறு ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவுள்ளது. இந்த வாக்கெடுப்பின் போது அவையில் பிரசன்னமாகியி ருக்காத உறுப்பினர்களுக்கு எதிராகவே விசாரணை நடத்தப்பட உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜே.என்.பி.யின் தலைவர் விமல் வீரவன்ச உள்ளிட்ட 50 உறுப்பினர்கள் அவையில் பிரசன்னமாகியிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இன முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி இன்னும் இல்லை

## ஜனாதிபதி சட்டத் தரணி சொல்கிறார்.

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்த போதிலும் இனங்களுக்கிடையில் நிலவும் முரண்பாடுகளுக்கு இன்னமும் முடிவு காணப்படவில்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரட்ன தெரிவித்தார்.

தந்தை செல்வா நினைவுப் பேருரையில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வகட்சிப் பேரவையின் பரிந்துரைகளை 59 வீதமான பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர் எனவும, யுத்த நிறைவின் பின்னர் இந்த எண்ணிக்கை 80 வீதமாக உயர்வடைந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சர்வகட்சிப் பேரவை அறிக்கை தமது நிலைப்பாட்டை இதுவரையில் வெளியிடவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்த வெற்றி தொடர்பிலேயே அரசாங்கம் அதிகம் கவனம் செலுத்தி வருகின்றது எனவும், அதற்கான மூல ஏதுக்கள் எதுவென்பதனை கண்டறியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தலின் போது தமிழ் மக்கள் தங்களது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தியிருந்தனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதிகாரப் பகிர்வினை வலியுறுத்தியே தேர்தலில் மக்கள் வாக்களித்திருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார். யுத்தம நிறைவடைந்த போதிலும் முரண்பாடுகள முற்று முழுதாக இன்னமும் களையப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து இன சமூகங்களுக்கு இடையிலும் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதன் மூலம் பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வினை எட்ட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை சிறுபான்மை இன சமூகங்களைப் பாதுகாக்கும் வகையில் அமையவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# அபகீர்த்தி ஏற்படுத்தும் வார்த்தை அடியோடு மறுக்கிறார் அஜித்

(கொழும்பு)

பொலிஸாரின் சேவை உடுப்புக் கழுவுதலே எனக் கூறுவதை நான் விரும்பவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

"என்னை யார் விமர்சித்தாலும் அதனை நான் பெரிதாக கொள்ளமாட்டேன். நான் அதனை விரும்புகின்றேன்..

என்றாலும், நாங்கள் செய்கின்ற சேவையை ஆடை தோய்க்கும் தொழிலுக்கு ஒப்பிட்டுப் பேசுவதை நான் விரும்பவில்லை. நான் ஒருபோதும், எந்தவொரு பத்திரிகைக்கும் இணையத்தளத்திற்கும் நான் செய்யும் தொழில் போதும் போதுமென்றாகியுள்ளது எனச் சொல்ல வில்லை. மேலும் நான், முதுகில் சீவன் இல்லாத பொலிஸ் அதிகாரிகள் இருப்பதால் எனக்கு பொலிஸ் தொழில் போதும் போதுமென்றாகியுள்ளது என்று சொல்லவில்லை.

என்னால் விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் பொறுத்துக் கொள்ளவியலும். அதனை நான் விரும்புகின்றேன். நான் ஒருபோதும் ஆளுங்கட்சிக்கு எதிராகவோ, எதிர்க்கட்சிக்கு எதிராகவோ கதைக்கவில்லை. என்றும் நீதமாகவே நான் நடந்துகொண்டுள்ளேன்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கனவிலும் அனுமதிக்க முடியாது சூதாட்டத்துக்கு கடும் எதிர்ப்பு

## சம்பிக்கவின் சூடான பதில்

(கொழும்பு)

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்ட சட்ட மூலத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட இரண்டாவது மற்றும் மூன்றாவது வர்த்தமானி அறிவித்தலின் கீழ் ஆரம்பிக்கவுள்ள ஹோட்டல திட்டங்கள் இரண்டினதும் திட்டங்களில் சூது, பந்தயம் வசதி என்ற சொற்கள் நீக்கப்படாதிருப்பதனால், இவ்விரு திட்டங்களுடன் நாட்டினுள் பாரிய அளவில் கசினோ திட்டம் நிச்சயமாக வரக்கூடிய சாத்தியக்கூறு உள்ளன.என ஜாதிக்க ஹெல உறுமயவின் பிரதம செயலாளர் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க



குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் ஹோட்டல் திட்டத்திற்காக முதலீட்டுச் சபை, அம் முதலீட்டாளர்களுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளில் இன்னும் சூது, பந்தய வசதி என்ற சொற்கள் நீக்கப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ஸ்கந்தா மாஸ்ரரின் நினைவாக வழங்கிய குடிதண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்துக

## மூளாய் மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மறைந்த ஸ்கந்தா மாஸ்ரர் ஞாபகார்த்தமாக வழங்கி வந்த குடிதண்ணீர்த் திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலி.மேற்கு வட்டுக்கோட்டை மூளாய் மற்றும் இதரப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களாகிய நாம் மிக அல்லலுற்றுவருவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே 350 குடும்பங்கள் பயனடைந்து வந்த இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி உடன் உதவவேண்டும் என வட்டுக்கோட்டை மக்கள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேற்படி விடயமாக பாதிக்கப்பட்ட வட்டுக்கோட்டை மக்கள் ஒருங்கிணைந்த ரீதியில் தெரிவித்ததாவது,

முன்னாள் மறைந்த ஆசான் ஸ்கந்தா மாஸ்ரர் நினைவாக அவரது பாரியாரால் (திருமதி பேபிரோஜா ஸ்கந்தகுமார்) தனது சொந்தச் செலவில் தினமும் 350 குடும்பங்கள் பயனடையக் கூடிய குடிதண்ணீரை வழங்கிவந்து கழகத்தின் குடிதண்ணீர்த் தாகத்தினைத் தீர்த்தார்.

தற்போது குடிதண்ணீர் திட்டம் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி ஒரு சில தீர்க்கக் கூடிய காரணங்களை தீர்க்காமல் திட்டத்தை இழுத்தடித்து வருகின்றார்.

இதனால் மக்களாகிய நாம் பெரிதும் அல்லலுறுகின்றோம்.

பிரதேசசபை ஒரு குறிப்பிட்ட பிரதேசங்களுக்கே சேவை வழங்குகின்றது. ஏனைய நன்னீர் மார்க்கங்கள் இருந்த போதும் இதுவரை மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க யாரும் தயாரில்லை.

எனவே, சொந்தச் செலவில் வழங்கி வந்த திட்டத்தை ஆராய்ந்து குடிதண்ணீர் வழங்க சுகாதார அமைச்சர் பொருத்தமான நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என வட்டுக்கோட்டை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (92)

## எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமத்துக்கு முன்பள்ளி ஆசிரியர் விண்ணப்பம் கோரல்

(யாழ்.நிருபர்)

சர்வதேச எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமங்களின் ஓர் அங்கத்துவ நிறுவனமான இலங்கை எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமங்கள் பெற்றோரை இழந்த, பெற்றோரால் கைவிடப்பட்ட மற்றும் கைவிடப்படும் நிலையில் உள்ள சிறார்களுக்கான முழுப்பராமரிப்பையும் வழங்கி வருகிறது.

இந்நிறுவனம் யாழ்ப்பாணத்தில் முன்பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றக் கூடிய 20 - 24 வயதிற்குட்பட்ட அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றில் முன்பள்ளி ஆசிரிய டிப்ளோமா கற்கையினைப் பூர்த்தி செய்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

யாழ்.எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமத்தை அண்டி வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரக்கோவையினை எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக Human Resources Department SOS Children s Villages Srilanka P.O.Box - 05 Piliyawdala என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## முரசின் இன்றைய பலன்



(28.04.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் சித்திரை மாதம் 15 ஆம் திகதி.
கரிநாள் / சித்தம். அமாவாசை.
ரேவதி நட்சத்திரம். மு.ப. 09.37 வரை. பின் அஸ்வினி.
இராகு காலம 07.28 - 08.58 வரை. சுபநேரம 11.58 - 01.28 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தம்பதியர் மத்தியில் சிறு பூசல் ஏற்பட்டுபின் சுமுக நிலைக்கு வருதல், சிலரது வஞ்சக புகழ்ச்சியினால் தகுதிக்கு மீறிய செயலில் ஈடுபாடு காட்டுதல். |
| ரிஷபம் | உடன்பிறந்த ஒருவர் இக்கட்டான சூழ்நிலையில் உதவி செய்ய முன்வருவர், உடல்நலம் பாதிக்கப்பட்டுப்பின் சுமுகநிலைக்கு வந்துவிடும். |
| மிதுனம் | ஒரு தலைக்காதலால் குடும்பத்தில் பூசல் ஏற்பட்டு கவிநிலை பாதிப்படையும், வெளியூர் பயண முயற்சியை அவசரத்தில் ஆரம்பிக்க வேண்டாம். |
| கடகம் | கட்டிய மனையை பூர்த்தி செய்ய பணப்பிரச்சினை தலைதூக்கும், பணியை ஆரம்பிக்கையில் குறிக்கோளையும் ஸ்திரப்படுத்திக் கொள்ளுங்கள். |
| சிம்மம் | சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதினால் சேமிப்பு ஏற்படும், தேங்கிய பணியை நிலுவையின்றி முடிக்க சக ஊழியர் முன்வருவர். |
| கன்னி | பேச்சில் இனிமை தக்கவைப்பதினால் வந்த முரண்பாடு அற்றுவிடும், நம்பிக்கொடுத்ததை வசூலிக்க முடியாமல் பதட்டநிலை ஏற்படும். |
| துலாம் | சகுனத்தில் நம்பிக்கை வைப்பதினால் காரியத்தில் தடங்கல் நிலை தோன்றாது, வாகன யோகங் கிட்ட பிதா உதவிசெய்வார். |
| விருச்சிகம் | சுபகாரியத்திற்காகப் பெற்ற கடனை அடைக்க முடியாது திண்டாட்டநிலை ஏற்படும், அஷ்டமத்து வியாழன் இருப்பதினால்விவாகத்தை ஒத்தி வைக்கும்எண்ணப்பாங்குமேலிடும். |
| தனுசு | பணியில் தேக்க நிலை இருப்பதைக் கண்டு அதிகாரியின் சீற்றத்துக்கு ஆளாகுதல், சட்டவிரோதமான மின்சாரம் பெறத்தெண்டித்தமையினால் அபராதம் கட்டல். |
| மகரம் | பவ்வியமாக பிரச்சினையை கையாண்டதால் முரண்பட்டநிலை மாறிவிடுதல், பரீட்சை சித்தியினால் அரசுப் பணி கைக்குவந்தடைதல். |
| கும்பம் | தர்மசிந்தனை மேலோங்கிக்காணப்பட்டதனால் புகழும் கௌரவமும் கிட்டுதல், கணக்கில் தில்லு முல்லுக் காணப்பட்டதால் வாழக்கையை முறித்துக்கொள்ளல். |
| மீனம் | கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று திரிய வெளிக்கிட்டதால் தேகசுகப்பாதிப்பு, நிலுவையைப் பெற காலந் தாழ்த்தியமையால் கைக்கெட்டுவதில் முரண்பாடுதோன்றுதல். |

## சரஸ்வதி ச.ச. நிலையத்துக்கு ஒலிபெருக்கி அன்பளிப்பு

(கைதடி)

பிரான்ஸ் நிர்வாகம் ஊடாக பிரான்ஸ் வாழ் அங்கத்தவர்களின் நிதி உதவியில் கைதடி மேற்கு சரஸ்வதிசனசமூக நிலையத்திற்குச் சொந்தமாக ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இதற்கு நிதி உதவி செய்த சி.தெய்வேந்திரன், க.குணலிங்கம், இ.துசிகரன், க.ஜெயசீலன் (திலகன்), செ.கஜிதன், ப.றொபின்சன், ஜோன்சன் அமுதா, செ.அரசரத்தினம், யோ.டினேஷ், இ.தீபன், நாகேந்திரம் சறோ, சி.இராஜகாந்தன், அ.கோகுலகீர்த்தன், நா.கோடீஸ்வரன், ஆ.ரமணன், செ.சின்னத்துரை (ஆனந்தன்) மற்றும் மறைமுகமாக உதவி செய்தோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (51)

## மகோற்சவம்

(யாழ்.நிருபர்)

புங்குடுதீவு கிழக்கு கண்ணகைபுரம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழாகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் 14 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (10)

## மீனம் — ஜய வருட பொதுப்பலன்கள்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

குருவை ஆட்சி நாயகனாக கொண்டமீன ராசிக் காரர்களே!

பிரச்சினைகளை சமாளிக்கும் மன தைரியம் கொண்ட நீங்கள், மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்து கொள்ள மாட்டீர்கள். உங்கள் ராசிக்கு 7 ஆம் வீட்டில் இந்த ஜய வருடம் பிறப்பதால் உங்களுடைய அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். அழகும் இளமையும் கூடும். உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். வாட்டி வதைத்துக் கொண்டிருந்த பிரச்சினைகளுக்கெல்லாம் இனி தீர்வு கிடைக்கும்.

சுக்கிரனும், புதனும் சாதகமான நட்சத்திரத்தில் செல்லும் போதும் இந்த வருடம் பிறப்பதால் வீராவேசமாகப் பேசுவதைவிட, கனிவாகப் பேசி எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பது தான் நல்லது. பணப்பற்றாக்குறையைப் போக்க கூடுதலாக உழைப்பீர்கள். சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரியவரும். உங்களைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் மனைவிவழி உறவினர்கள் மத்தியில் அதிகரிக்கும். பிரபலங்களுக்கு நெருக்கமாவீர்கள். விலை உயர்ந்த சமையலறை சாதனங்கள் வாங்குவீர்கள்.

ஜூன் 12 வரை உங்கள் ராசிநாதனான குருபகவான் 4 ஆம் வீட்டில் நிற்பதால் வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். அவருடன் வீண் பிரச்சினைகள் வந்துபோகும். உங்களைப்பற்றிய விமர்சனங்களும் அதிகரிக்கும். எதிர்மறை எண்ணங்களும் ஏற்படும். ஜூன் 13 ஆம் திகதி முதல் குரு உங்கள் ராசிக்கு 5 ஆம் வீட்டில் நுழைவதால் வசதி, வாய்ப்புக்கள் ஓரளவு பெருகும்.

கல்யாணம், கச்சேரி என்று வீடு களைகட்டும். மனை வாங்கிப் போட்டு வெகுநாட்களாகி விட்டதே! அதில் இப்போது வீடு கட்டி முடிப்பீர்கள். பிள்ளைகளிடம் இருந்த பிடிவாத குணம் மாறும். மகளுக்கு எதிர்பார்த்த படி நல்ல வரன் அமையும். மகனின் கூடாநட்பு விலகும்

ஜூன் 20 ஆம் திகதி வரை ராகு 8ஆம் வீட்டிலும், கேது 2 ஆம் வீட்டிலும் நிற்பதால் கணவன் - மனைவிக்குள் வீண் சந்தேகங்கள் வரும். ஈகோ பிரச்சினையால் பிரிவுகள் ஏற்படக்கூடும். பேச்சில் காரம் வேண்டாம். எனவே இடம், பொருள், ஏவல் அறிந்து செயற்படப் பாருங்கள். பல், காது மற்றும் தொண்டை வலி வரக்கூடும். சிறுசிறு விபத்துக்கள் நிகழக்கூடும். ஜூன் 21 ஆம் திகதி முதல் கேது உங்கள் ராசிக்குள் நுழைவதால் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

எண்ணெயில் பொரித்த, வறுத்த மற்றும் வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. அவ்வப்போது முன்கோபம் வரக்கூடும். ராகுவும் 7 ஆம் வீட்டில் அமர்வதால் மன உளைச்சல், விரக்தி, விரயம் வந்துபோகும். தலைசுற்றல் ஏற்படும். அவ்வப்போது குடும்ப வாழ்க்கையில் பற்றில்லாமல் போகும். எவ்வளவு பணம் வந்தாலும் பணத்தட்டுபாடு இருக்கும். பொய் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டாலும் தவிர்க்கப் பாருங்கள். சிலர் நல்லவர்களைப் போல் பழகி உங்களை ஏமாற்ற வாய்ப்பிருக்கிறது. டிசம்பர் 15 வரை அஷ்டமத்துச் சனி நடைபெறுவதால் திடீரென்று அறிமுகமாகும் நபர்களை வீட்டிற்கு அழைத்து வர் வேண்டாம்.

டிசம்பர் 16 ஆம் திகதி முதல் சனி உங்களின் ராசிக்கு 9 ஆம் வீட்டில் நுழைவதால் மனப்போராட்டங்களிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த சச்சரவுகள் விலகும். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தாழ்வுமனப்பான்மை நீங்கும்.

பிரிந்த கணவன், மனைவி ஒன்று சேருவீர்கள். வைகாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் பணவரவு அதிகரிக்கும். வேலை கிடைக்கும். சொத்து அமையும். வியாபாரத்தில் சென்ற வருடத்தை விட இந்த ஆண்டு இலாபம் கணிசமாக உயரும். அஷ்டமத்துச் சனி தொடர்வதால் புதியவர்களை நம்பி முதலீடுகள் செய்து ஏமாற வேண்டாம். ஆனால், ஜூன் 13 ஆம் திகதி முதல் ராசிநாதன் குரு உச்சமடைவதால் இலாபம் இரட்டிப்பாகும். ஜூன் 13 ஆம் திகதி முதல் குரு 5 இல் அமர்வதால் உத்தியோகத்தில் பழைய சிக்கல்கலெல்லாம் பனியாக விலகும். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். உங்களை குறை சொல்லிக் கொண்டிருந்த உயரதிகாரி வேறிடத்திற்கு மாற்றப்படுவார்.

**கலைத்துறையினருக்கு** - கௌரவிக்கப்படுவீர்கள். உங்களுக்கு எதிராக விமர்சனங்கள் வந்தாலும் அஞ்ச வேண்டாம். பெரிய நிறுவனங்களிலிருந்து புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். மூத்த கலைஞர்களை உங்களை அருகே அழைத்துப் பாராட்டுவார்கள். எப்போதும் புகழ்ந்து கொண்டே இருப்பவர்களை அதிகம் நம்ப வேண்டாம்.

**மாணவர்களுக்கு** - புத்தகத்தை பிரித்தாலே தூக்கம் வந்ததே! இனி உற்சாகமாக படிப்பீர்கள். விளையாட்டில் பதக்கம் உண்டு. கூடா நண்பர்களை தவிர்த்து நல்ல நட்புச் சூழலை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். மற்ற மாணவர்களோடு எப்போதும் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். அடுத்த வருடக் கல்வியைப்பற்றி இப்போது சில திட்டங்களைத் தீட்டி வைத்துக் கொள்வது நல்லது.

பெண்களுக்கு- காதல் விவகாரங்களை தள்ளி வைத்து விட்டு உயர்கல்வியில் கவனம் செலுத்துங்கள். வேலைக் கிடைக்கும். பெற்றோரின் விருப்பப்படி திருமணம் முடியும். முகப்பரு, பசியின்மை, ஹார்மோன் கோளாறுகள் வந்து நீங்கும். காய், கனிகளை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# INDIAN PREMIER LEAGUE 2014

## இன்றைய ஆட்டம்

**பெங்களூர் எதிர் பஞ்சாப்**

**இடம்: டுபாய். நேரம்: இரவு 8 மணி**

## ஐ.பி.எல். துளிகள்...

ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் மோசமான தோல்வியைத் தழுவியது வருத்தம் அளிக்கிறது. ஒவ்வொரு ஓவரிலும் விக்கெட் சரிந்தால் நெருக்கடி ஏற்பட்டுவிடும். இதுபோல் இந்த ஆட்டத்தில் நடந்துவிட்டது. ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் நாங்கள் அதைச் சரியாகப் பயன்படுத்தி கொள்ளவில்லை. 70 ஓட்டங்களுக்குள் சுருண்டது மிகப் பெரிய துயரமாகவே பார்க்கின்றோம். இந்த மோசமான தோல்வி விரைவில் மறக்க விரும்புகிறோம்.

**ஹோலி (பெங்களூர் அணிக் கப்டன்)**

பெங்களூர் ரோயல் சலஞ்சர் அணிக்கெதிரான போட்டியில் பந்துவீச்சாளர்கள் அபாரமாகச் செயற்பட்டனர். குறிப்பாக ஹோலி விக்கெட்டை விரைவாகக் கைப்பற்றியமை ஆட்டத்தின் திருப்புமுனை. அவர் நிலைத்து நின்று ஆடியிருந்தால் பெங்களூர் அணி சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றிருக்கும். நாங்கள் அதிக நெருக்கடியை எதிர்கொண்டிருக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால், பந்து வீச்சாளர்களின் சிறப்பான செயற்பாடு காரணமாக நாங்கள் இலகுவாக வெற்றியைப் பதிவு செய்தோம். இரண்டு தோல்விக்குப் பின்னர் வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது.

**வட்சன் (ராஜஸ்தான் அணிக் கப்டன்)**

சென்னை அணிக்கு எதிரான போட்டியில் நாங்கள் குறைந்தபட்சம் 160 ஓட்ட இலக்கை நிர்ணயித்து இருக்க வேண்டும். ஆட்டத்தின் முடிவு மிகுந்த ஏமாற்றம் அளித்தது. நாங்கள் 15 ஓட்டங்கள் குறைவாக எடுத்து விட்டோம். ஆடுகளம் துடுப்பாட்டத்திற்குச் சாதகமாக இருந்தது. நான் தவறான நேரத்தில் ஆட்டம் இழந்து விட்டேன். எங்கள் அணியின் துடுப்பாட்டம் முன்னேற்றம் காண வேண்டியது அவசியமானதாகும். இந்த ஆண்டு நாங்கள் இதுவரை 141 ஓட்டங்களுக்கு அதிகமாக எடுக்கவில்லை. எங்களது பந்து வீச்சு நன்றாக இருந்தது.

**ரோகித் சர்மா (மும்பை அணிக் கப்டன்)**

கும்ளே எனக்கு சுழற்பந்து வீச்சை எப்படி எதிர்கொள்வது என்று ஆலோசனைகள் வழங்கியுள்ளார். இது எனக்கு மிகவும் உதவிகரமாக இருக்கிறது. உலக தரம் வாய்ந்த சுழற்பந்து வீரர்களுக்கு எதிராக சிறப்பாக விளையாடப் பயன்படும். அவருடன் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பு இனிமையான நினைவுகளாக என்றும் இருக்கும். நாங்கள் கடுமையாக உழைக்கிறோம். விரைவில் வெற்றிப் பாதைக்குத் திரும்புவோம்.

**அண்டர்சன் (மும்பை அணி வீரர்)**



# இரட்டையர் பிரிவில் சாதிப்பதே இலக்கு

(புதுடில்லி)

சுவிஸ் வீரர் ரோஜர் பெடரர் ஒற்றையர் பிரிவில் 17 கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் வென்று சாதனை படைத்தது போல, இரட்டையர் பிரிவில் சாதனை படைப்பதே தனது இலக்கு என இந்தியாவின் நட்சத்திர ரென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் தெரிவித்துள்ளார்.

ரென்னிஸ் போட்டிகளில் விளையாடுவதற்காக ஆண்டு முழுவதும் உலகின் பல்வேறு நாடுகளில் சுற்றுப்பயணம் செய்ய வேண்டியுள்ள நிலையில், விருதுகளைப் பற்றி நினைக்க கொஞ்சமும் நேரமில்லை.

எனினும், பத்மபூஷண விருது பெற்ற இந்தத் தருணம் எனது வாழ்க்கையில் மிகவும் சிறப்பானது. மறக்க முடியாதது. இந்த விருது ஏதோ ஒரு போட்டியில் வென்றதற்காக கிடைத்தது அல்ல. கடந்த 30 ஆண்டு கால கடின உழைப்புக்குக் கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரம். இந்த விருதை எனது இரசிகர்களுக்கு சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஓய்வு பெற்ற பின்னர் எனக்கு கிடைத்த விருதுகள், பாராட்டுக்கள் பற்றி நினைத்துப் பார்ப்பேன். அதற்கு இன்னும் நீண்ட காலம் உள்ளது. ஒற்றையர் பிரிவில் சுவிஸ் நட்சத்திரம் ரோஜர் பெடரர் 17 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்று படைத்த சாதனையை இரட்டையர் பிரிவில் படைத்து சமன் செய்வதே எனது இலக்காக உள்ளது. அந்த இலட்சியத்தை அடைவேன் என நம்புகிறேன். அதற்கு இன்னும் மூன்று பட்டங்கள் மட்டுமே தேவை. பத்ம பூஷன் விருது பெற்றது அதற்கான புதிய உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுத்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் சம்பியன் லீக் ருவென்ரி-20

**இந்திய கிரிக்கெட் சபை முடிவு**

(புதுடில்லி)

ஐ.பி.எல்., போட்டிக்கு கிடைத்த வரவேற்பை அடுத்து, உலகின் மிகப்பெரிய பரிசுத் தொகை கொண்ட ருவென்ரி-20 சம்பியன்ஸ் லீக் போட்டியை, ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் (யு.ஏ.இ.,) நடாத்த, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

பொதுத்தேர்தல் காரணமாக ஏழாவது ஐ.பி.எல்., தொடரின் முதல் 20 போட்டிகள், யு.ஏ.இ.இல் நடைபெற்று வருகின்றது. இதற்கான ரிக்கெட்டுகளை பெற கடும் போட்டி ஏற்பட்டது. இரசிகர்களும் பெரும் ஆர்வத்துடன் மைதானத்துக்கு வருகின்றனர்.

இந்த வெற்றியை அடுத்து, எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் இந்தியாவில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 போட்டியையும், இங்கு நடாத்தலாம் என இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) ஆர்வமாகவுள்ளது.

போட்டிகள் நடைபெறும் காலப்பகுதியில் வானிலையும் நன்றாக இருக்கும். தவிர, இத்தொடரில் உலகின் பல்வேறு உள்ளூர் சம்பியன் அணிகளுடன், பாகிஸ்தான் சார்பிலும் ஏதாவது ஒரு அணி கலந்து கொள்ளும். இதனால், கூடுதல் வரவேற்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து விரைவில் முடிவெடுக்கப்படும் எனத் தெரிகிறது.



# இறுதிக்கு முன்னேற்றம்

ஜேர்மனி ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி ரஷ்யா வீராங்கனை மரியா ஷரபோவா இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

ஜேர்மனியில் உள்ள ஸ்டுட்கார்ட்டில் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப்போட்டியில் நடப்புச் சம்பியன் மரியா ஷரபோவா (ரஷ்யா) 6-1, 6-2 என்ற நேர்செட்டில் இத்தாலியில் சாரா எர்ரானியை எளிதில் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.



# உலகக் கிண்ண கால்பந்து பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை

உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி பிரேசிலில் நடைபெறுவதில் எந்தப் பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லை. திட்டமிட்டபடி அங்கு போட்டிகள் நடைபெறும் என சர்வதேச கால்பந்து செயலாளர் ஜெரோம் வொல்கே தெரிவித்துள்ளார்.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) சார்பில், உலக கோப்பை கால்பந்து தொடர் இந்த வருடம் யூன் 12ஆம் திகதி முதல் யூலை 13ஆம் திகதி வரை, பிரேசிலில் நடைபெறவுள்ளது.

இதற்கான ரிக்கெட் விற்பனை தற்போது விறுவிறுப்பாக விற்கப்பட்டுவரும் நிலையில், பிரேசிலின் இரண்டாவது மிகப்பெரிய நகரமான ரியோ – டி – ஜெனிரோவிற்கு அருகிலுள்ள பேவலா பகுதியில் அப்பகுதிவாசிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனால் உருவான கலவரத்தில் இதுவரை இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர். புவலாவிலுள்ள புகழ்பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தோன்றும் நடனக் கலைஞர் சமீபத்தில் கொலை செய்யப்பட்டார். பொலிஸாரின் கவனக்குறைவே அவரது மரணத்திற்கு காரணம் என்ற நோக்கத்தில் இந்தக் கலவரம் உருவானதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, அங்கு கலவரக்காரர்கள் சாலைகளில் உள்ள தடைகளை உடைத்து வன்முறையில் ஈடுபட்டனர். அவர்களை ஒடுக்க பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்நிலையில், சர்வதேச கால்பந்து கூட்டமைப்பான பிபா வின் செயலாளர் ஜெரோம் வொல்கே கலவரம் குறித்து கூறுகையில், உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி நடைபெறுவதில் எந்தப் பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லை, போட்டிகள் நடைபெறும் போது ஏதாவது சிறு சம்பவங்கள் நடப்பதற்கு வாய்ப்புக்கள் இருப்பினும் முடிந்தவரையில் உச்சக் கட்டப் பாதுகாப்பு அளிக்கப்படும். இதுபோன்ற கலவரங்கள் எல்லா நாட்டிலும் பொதுவாக நடப்பவைதான். இது ஒன்றும் புரட்சியல்ல. திட்டமிட்டபடி உலகக் கிண்ணப் போட்டியை நாங்கள் நடாத்துவோம் எனத் தெரிவித்துள்ளார்.

மொத்தம் 64 போட்டிகள் கொண்ட இக்கால்பந்து தொடரைக் காண, இதுவரை 228 நாடுகளில் இருந்து, 1 கோடி பேர் ரிக்கெட் கேட்டு விண்ணப்பித்துள்ளனர். இதில் பிரேசிலில் மட்டும் 9 இலட்சம் ரிக்கெட்டுகள் விற்பனையாகியிருக்கிறது.

உலகக் கோப்பை கோல்பந்து போட்டியை காண அமெரிக்கா, கொலம்பியா, ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா உட்பட பல நாடுகளிலிருந்து இலட்சக்கணக்கான போட்டியைக் கண்டுகளிப்பார்கள் என கால்பந்து விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# விரைவில் எழுச்சி பெறுவோம்


(சார்ஜா)

தொடர் தோல்விகளால் துவண்டுபோயுள்ள மும்பை அணி விரைவில் எழுச்சி பெறும் என்ற நம்பிக்கையுள்ளது என மும்பை அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட் தெரிவித்துள்ளார்.

இம்முறை மும்பை அணிக்காக சச்சின் விளையாட மாட்டார் என அனைவருக்கும் தெரியும். இருப்பினும், கடந்த மூன்று போட்டியில் வீரர்கள் மோசமாக விளையாடினர். இது, சச்சினுக்கு கவலை அளித்துள்ளது. இம்முறை துடுப்பாட்டம் சுத்தமாக எடுபடவில்லை. பந்துவீச்சு சிறப்பாக இருந்த போதிலும், அவர்களுக்கு அதிகளவு நெருக்கடி கொடுக்க விரும்பவில்லை. துடுப்பாட்ட வீரர்கள் இமாலய இலக்கை நிர்ணயிக்காமல், பந்து வீச்சாளர்களை அதிகம் எதிர்பார்க்கக்கூடாது. இதற்கு விரைவில் தீர்வு காணப்படும். துடுப்பாட்டத்தில் நிறைய மாற்றம் செய்ய முடிவு செய்துள்ளோம். இதற்காக சில ரிஸ்க் எடுக்க உள்ளோம்.

சென்னை அணிக்கு எதிராக ஹர்பஜன் சிங் சிறப்பாக பந்துவீசினார். இவரது கடைசி ஓவரில் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் ஒரு விக்கெட் மட்டும் கைப்பற்ற முடிந்தது.

கடந்த முறை விளையாடிய வீரர்கள், இம்முறை வேறு அணிகளில் விளையாடுவது அணி நிர்வாகத்தின் முடிவு. தற்போதுள்ள வீரர்களை தயார்படுத்தி, அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பாக செயற்பட வைக்க வேண்டும். விரைவில் மும்பை அணி எழுச்சி பெறும் என்ற நம்பிக்கையுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





## கைதடி மின்னொளி சம்பியன்

(கைதடி)

கைதடி சரஸ்வதி ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணத்தை கைதடி மின்னொளி அணி கைப்பற்றிக் கொண்டது.

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி அண்மையில் கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

16 ஓவர்கள் கொண்ட இச்சுற்றுப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் நாவற்குழி சான்றோர் அணியும், கைதடி மின்னொளி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நாவற்குழி சான்றோர் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கைதடி மின்னொளி அணி 13 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 104 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சான்றோர் அணி நிர்ணயிக்கப்பட்ட 16 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் மின்னொளி அணி சரஸ்வதி ஆண்டு நிறைவு கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக மின்னொளி அணி வீரர் பானு, சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த எழிலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (51)

# கபடியில் அசத்திய அணிகள்

(நெல்லியடி)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற மாவட்ட மட்ட கபடிப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், இளவாலை கன்னியர் மட வித்தியாலய அணியும் மோதின. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 34-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு ஜெசிந்தா வித்தியாலய அணி பிடித்துக்கொண்டது.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதின. இதில் 28-17 என்ற புள்ளிகள் அடிப்படையில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு ஜெசிந்தா வித்தியாலய அணி பிடித்துக்கொண்டது.

15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணியும், சில்லாலை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணியும் மோதின. இதில் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி 43-27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு ஜெசிந்தா வித்தியாலய அணி பிடித்துக்கொண்டது.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 24-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணி பிடித்துக்கொண்டது. (93)

## மாவட்ட கரப்பந்து பதிவுக்குக் கோரல்

(யாழ்ப்பாணம்)


யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் வருடாந்தம் நடாத்தும் மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி விரைவில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டித் தொடர் ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெறவுள்ளதாகவும், இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் அணிகளை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும் போட்டி ஏற்பாட்டாளர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (93)

விளையாட்டுச் செய்திகள்

# அமரர் தனபாலன் கிண்ணம் வென்றது சென். ஜோண்ஸ்

(யாழ்ப்பாணம்)







அமரர் தனபாலன் ஞாபகார்த்த ஐந்து ஓவர் கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சென். ஜோண்ஸ் கல்லூரி அணி கைப்பற்றிக்கொண்டது.

சென். ஜோண்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் தனபாலன் ஞாபகார்த்தமாக சென். ஜோண்ஸ் கல்லூரியினால் ஏழாவது ஆண்டாக 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட ஐந்து ஓவர் கிரிக்கெட் கடந்த 25,26ஆம் திகதிகளில் சென். ஜோண்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி மைதானங்களில் நடாத்தப்பட்டன.

இதில் கொக்குவில் இந்து, சென். பற்றிக்ஸ், யாழ். மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயம், கைதடி நவீல்ட், சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி ஆகிய அணிகள் பங்குகொண்டன.

விலகல் முறையில் நடாத்தப்பட்ட இப்போட்டி அணிக்கு ஆறு பேரைக் கொண்டதாக நடைபெற்றது.

முதலாவது காலிறுதிப் போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணியும், சென். ஜோண்ஸ் அணி ரெட் அணியும் மோதின. முதலில் ஆடிய வித்தியானந்தாக் கல்லூரி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அருண் 39 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 64 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி ரெட் 2.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 23 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இரண்டாவது காலிறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் மோதின. முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஜன் 17 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 45 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 4.2 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியும், சென். ஜோண்ஸ் கல்லூரி பிளைக் அணியும் மூன்றாவது காலிறுதிப் போட்டியில் மோதின. முதலில் ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 25 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 26 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் பிளைக் அணி 2.4 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது.

மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், கைதடி நவீல்ட் அணியும் மோதின. முதலில் ஆடிய நவீல்ட் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அகமட் 13 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 40 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி நான்கு ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. முதலில் ஆடிய வித்தியானந்தாக் கல்லூரி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அருண் 27 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 65 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. முதலில் ஆடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 54 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 3.4 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் துவாரகசீலன் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் மோதின. முதலில் ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 25 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 26 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 2.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்ததுடன் மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி 5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இப்ராஸ் 13 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 54 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி கபில்ராஜின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இறுதிப் பந்தில் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றிபெற்றதுடன் தனபாலன் நினைவுக் கிண்ணத்தை முதல் முறையாகக் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக கபில்ராஜ் தெரிவு செய்யப்பட்டார்.

சென். ஜோண்ஸ் கல்லூரி அதிபர் வண ஞானப்பொன்ராசா தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் முன்னாள் ஒலிம்பிக் சம்பியன் எதிர்வீரசிங்கம், சென். ஜோண்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் சூரியகுமார், வடமாகாண முன்னாள் பயிற்றுவிப்பாளர் சண்முகலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எஸ்.பி.)

# துன்பங்களில் உழல்வோருக்கு போதிப்பதில் குறியாக இராதே!

- கவிஞர் மகுடேசுவரன் -

திருக்குறள்களுக்கு உரையெழுதிய புலவர்கள் ஒருமித்த தெளிவுரையை வழங்குவதுண்டு. முரணாக, குறள்கள் பலவற்றுக்கு உரையாசிரியர்களிடையே நல்ல மாறுபாடுகளும் இருக்கின்றன. அதனால்தான் திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகளில் எது நல்ல உரை என்று இன்றும் கேட்கிறார்கள்.


நம் தமிழாசிரியர்கள் மு. வரதராசனார் உரையைப் பரிந்துரைப்பார்கள். நான் நாமக்கல் கவிஞர் எழுதிய தெளிவுரையைச் சொல்வேன். "பதினெண் கவனகர்" திருக்குறள் இரா. கனகசுப்புரத்தினம் ஓர் உணர்வுரையை எழுதியுள்ளார். அதுவும் சிறப்பானதே.

கனகசுப்புரத்தினத்தின் உரையை ஏன் சிறப்பானது என்கிறேன் என்றால் அவர் குறள் ஒப்பித்தலையே வாழ்க்கையாகக் கொண்டவர். ஒவ்வொரு குறளும் அவர் மனத்தில் ஊறிப் புரண்டு உரிய பொருளை உணர்த்தியிருக்கும் என்று நம்புவதால்தான்.

சன்மார்க்க உரை என்று ஒன்றுள்ளது - அவ்வுரையில் எல்லாம் ஜோதிமயமே என்கிற கருத்தையொட்டி ஒவ்வொரு குறளுக்கும் பொருள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது முதல் குறளுக்கு "எழுத்துகள் அகரத்தை முதலாகக் கொண்டது. இந்த உலகம் ஆதியில் தோன்றிய ஜோதியென்னும் இறைப்பொருளை முதலாகக் கொண்டது" என்பார்கள்.

இப்படி ஆளாளுக்குக் குறள்களைத் தம்பக்கம் திருப்புவதில் குறியாக இருந்திருக்கின்றனர். இந்த அக்கப்போர்களுக்கு அப்பால் பழந்தமிழில் உரைபடிக்க விரும்பினால் அவர்களுக்குப் பரிமேலழகர் உரையும் மணக்குடவர் உரையும் துணை.

உரையாசிரியர்களுக்குள்ளேயே ஒருமித்த பொருள் சொல்லமுடியாத குறள்கள் பல உள்ளன என்று சொன்னேன். அதில் தலையாயது இந்தக் குறள்.



அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ(டு) ஊர்ந்தான் இடை.
(அதிகாரம் 4 : அறன் வலியுறுத்தல், குறள் எண் 37)

மு. வரதராசன் என்ன உரைக்கிறார் என்றால் "பல்லக்கைச் சுமப்பவனும் அதன் மேலிருந்து ஊர்ந்து செல்வோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இதுவெனக் கூறவேண்டா" என்பது.

சாலமன் பாப்பையாவோ "அறத்தைச் செய்வதால் வரும் பயன் இது என்று நூல்களைக் கொண்டு மெய்ப்பிக்க வேண்டியது இல்லை. பல்லக்கைத் தூக்கிச் செல்பவனையும் அதில் பயணிப்பவனையும் கண்ட அளவில் பயனை அறியலாம்" என்கிறார்.

பரிமேலழகர் உரையின்படி "அறத்தின் பயன் இது என்று உணர்த்தல் வேண்டா. சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவைத் தன்னானே உணரப்படும்" என்கிறார். உரைக்கே உரை தேவைப்படும்போல் உள்ளது, இல்லையா?

கலைஞர் கருணாநிதியும் உரை கூறியுள்ளார். அவர் சொல்வதன்படி "அறவழியில் நடப்பவர்கள் பல்லக்கில் செல்பவர்களைப்போல் இன்ப துன்பங்கள் இரண்டையும் எளிமையாக ஏற்று வாழ்வர். தீய வழியில் சென்றவர்கள் பல்லக்கைச் சுமப்பவர்களைப்போல் இன்பத்திலும் அமைதிகொள்ளாமல் துன்பத்தைத் தாங்கிக்கொள்ளும் மனப் பக்குவமின்றி வாழ்வைப் பெரும் சுமையாகக் கருதுவார்கள்" என்பது பொருளாகும். கலைஞர் சொல்கின்ற உரை சற்றே ரசமானதாக இருக்கிறது என்றாலும் குறளில் இடம்பெற்றுள்ள சொற்களின் பொருள்களை விட்டு விலகிச் செல்வதாகவும் இருக்கிறது.

இதற்குச் சரியான முடிவு குறளில் இடம்பெற்றுள்ள சொற்களுக்கு நாமே பொருள்காண இறங்குவதுதான். அருஞ்சொற்களுக்குப் பொருள் காண்பதில் மனங்கொள்ளவேண்டிய அணுகுமுறை இதுதான் : தமிழில் ஒருசொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. ஒரு பொருளுக்குப் பல சொற்கள் உண்டு.

அறம் என்றால் தெரியும். தர்மம். உலக மகா நற்செயல். காலம் மாறினும் கோலம் மாறினும் கொள்கை மாறினும் நன்மைக்கு எதிரான விளைவைத் தராத அருட்பணி. புண்ணியம். உயிருக்கு இதமளிக்கும் நல்வினை.

ஆறு என்றால் என்னவென்று பார்ப்போம். ஆறு என்பதற்கு "நதி, வழி, பக்கம், பயன், சூழ்ச்சி, விதம், இயல்பு" எனப் பொருள்கள் பல.

அறத்தாறு என்பதற்கு அறத்தின் வழி, அறத்தின் பயன், அறத்தின் சூழ்ச்சி, அறத்தின் இயல்பு என்றுள்ளவற்றில் எதைக் கருதுவது? குறள்தொடர்ந்து ஒரு முடிவுக்கு வரவுள்ளோம்.

---

# வரலாற்றுப் பார்வையில் $E = mc^2$

- வினவு -

2


மைக்கேல் ஃபாரடே

ஒரு இரும்புக் கொல்லரின் மகனான மைக்கேல் ஃபாரடே, புத்தகம் பைண்டிங் செய்யுமிடத்தில் பழகுநராக வேலை செய்து வருகிறார். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழில் புரட்சிக்கு பிந்தைய இங்கிலாந்தில் உழைக்கும் மக்களுக்கு உயர்கல்வி கற்கும் வாய்ப்பு இருக்கவில்லை. அவர்கள் சிறுபட்டறைகளிலும், தொழிற்கூடங்களிலும் தொழில் பழகுநராக சேர்ந்து தொழில் கற்றுக்கொண்டு வாழ்க்கையை நடாத்த வேண்டியிருந்தது. ஃபாரடே பைண்டிங் தொழிலின் திறனை கற்றுக் கொண்டதோடு நில்லாமல், அவர் கைகளுக்கு வரும் எல்லா புத்தகங்களையும் படித்து சுயமாக கல்வி கற்கிறார்.

தனது வேலையை விட அறிவியல் ஆய்வுகளில் ஆர்வம் அதிகம் கொண்டிருந்த ஃபாரடே, தனது சொற்ப வருமானம், ஓய்வு நேரம் அனைத்தையும் சுயகல்வி கற்பதிலும் இயற்கை விஞ்ஞானத்தை அறிந்து கொள்வதிலும் செலவிட்டார். அன்றைய சமூகத்தில் விஞ்ஞானிகள் நட்சத்திர அந்தஸ்து உடையவர்களாக மதிக்கப்பட்டதுடன் அவர்களை சந்திப்பதோ, அவர்களுடைய விரிவுரைகளுக்கு செல்வதோ சாதாரண மக்களுக்கு அரிதாகக் கிடைக்கும் வாய்ப்பாகவே இருந்தது. இளம் ஃபாரடேயின் உற்சாகத்தையும் பேரார்வத்தையும் கண்ட வாடிக்கையாளர் ஒருவர், பிரபுகுலத்தை சேர்ந்தவரும் அக்காலத்தைய மிகப்பிரபலமான இரசாயனவியலாளருமான சேர் ஹம்ஃப்ரி டேவியின் விரிவுரைகளை கேட்பதற்கு ஃபாரடேவுக்கு அனுமதிச்சீட்டு பெற்றுத் தருகிறார்.

ஹம்ஃப்ரி டேவியின் விரிவுரைகளைக் கேட்ட ஃபாரடே உற்சாகமடைந்து அவரை தனது ஆதர்ச நாயகனாக மதிக்க ஆரம்பிக்கிறார். ஹம்ஃப்ரி டேவியின் விரிவுரைகளில் தான் எடுத்த குறிப்புகளை புத்தகமாக தொகுத்து அதை அவரை நேரில் சந்தித்து பரிசளிக்கிறார். கட்டுப்பாடுகள் மிகுந்த, அறிவுத் தேடலை முடக்கிப் போடும் மற்றும் சுயநலம் மிகுந்த வர்த்தக உலகிலிருந்து தான் விடுபட விரும்புவதாகவும் சுதந்திரமும் முற்போக்கானதும் தனது மனதிற்கினியதுமான அறிவியலுக்கு சேவையாற்ற தனக்கு வாய்ப்பளிக்குமாறும் கோரி, டேவியின் உதவியாளராக சேர விண்ணப்பிக்கிறார். டேவி ஆரம்பத்தில் ஃபாரடேவை அவமானப்படுத்தி அவரது கோரிக்கையை நிராகரிக்கிறார். பின்னர் ஆய்வகத்தில் ஏற்பட்ட ஒரு விபத்தில் காயமுற்ற பிறகே தனது ஆய்வுகளில் உதவி செய்ய ஃபாரடேயை தன்னுடன் சேர்த்துக் கொள்கிறார்.

அக்காலத்தின் கவர்ச்சிகரமான அதிசயிக்கத்தக்க ஒன்றான மின்கலமும் மின்சக்தியும் சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. விசித்திரமான மின்சக்தியை குறித்து அறிந்து கொள்ள அனைத்து விதமான சோதனைகளும் நடாத்தப்பட்டு வந்த போதிலும் அதைப் பற்றி இன்னும் சரியாக மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

1821இல் டேனிஷ் (டென்மார்க்) ஆய்வாளர் மின்சாரம் பாயும் மின் கடத்தியின் அருகில் காந்த திசைகாட்டியைக் கொண்டு செல்லும் போது அதன் ஊசி செங்கோணத்தில் விலக்கப்படுவதைக் கண்டறிந்தார். மின்கடத்தியின் எந்தப் பக்கத்தில் வைத்தாலும் ஊசி செங்கோணத்தில் விலக்கப்பட்டது.

உயர்கல்வி கற்ற மேன்மக்களான அப்போதைய அறிவியலாளர்கள் மத்தியில், குழாயினுள் நீர் பாய்வதைப்போல் மின்கடத்தியினுள் மின்சாரம் பாய்வதாக கருத்து நிலவி வந்தது. அப்படித்தான் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது என்று அவர்கள் ஃபாரடே போன்ற "தற்குறி"களுக்கு இடித்துரைக்கவும் செய்கின்றனர். ஆனால், ஃபாரடே மின்கடத்தியில் மின்சாரம் பாயும் போது அதை சுற்றிலும் காந்தப் புலத்தை உருவாக்குகிறது எனும் கருத்தை முன் வைத்தார். அக்காந்தப்புலமே காந்த திசைகாட்டியின் ஊசியை விலக்குகிறது என்றும் விளக்கினார்.

அத்துடன், நிலை காந்தத்தின் அருகில் வைக்கப்படும் மின்கடத்தியில் மின்சாரம் பாயும் போது, கடத்தியை சுற்றி உருவாகும் காந்தப்புலத்திற்கும், நிலை காந்தப்புலத்திற்கும் இடையேயான எதிர் வினை விலக்குவிசையை உருவாக்கும் என்பதை கண்டறிந்தார். இதுவே அந்நூற்றாண்டின் மிகப்பெரும் கண்டுபிடிப்பான மின் மோட்டார் ஆகும். இவ்வாய்வே எல்லா இயக்க சக்திகளையும் ஒருங்கிணைக்கும் ஆற்றல் பற்றிய கோட்பாடு உருவாக காரணமாக அமைந்தது.

பிரிட்டனின் உயர் அறிவியல் அமைப்பான றோயல் சொசைட்டியில் - அவ்வமைப்பின் தலைவராக அப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஹம்ஃப்ரி டேவி, ஃபாரடேவை கருத்து திருடர் என குற்றம் சுமத்தி ஆய்வறிக்கையை திரும்பப் பெறுமாறு நிர்ப்பந்தித்ததையும் மீறி - ஃபாரடே தனது ஆய்வை சமர்ப்பிக்கிறார்.


ஹம்ப்ரி டேவி

ஹம்ஃப்ரி டேவியின் மரணத்திற்கு பின் ஃபாரடே தனது பணிகளுக்கான அங்கீகாரத்தை பெற்றதோடு தனது புகழ்பெற்ற அடுத்த கண்டுபிடிப்பான மின்காந்த தூண்டல் விதிகளை கண்டறிந்தார். அதாவது, மின்கடத்தியை சுற்றியுள்ள காந்தப்புலம் மாறுதலடையும் போது கடத்தியுள் மின்சாரத்தை உருவாக்கும் என்பதைக் கண்டறிந்தார்.

இவ்விரு கண்டுபிடிப்புகளும், மின்சக்தியும் காந்தசக்தியும் ஒன்றை ஒன்று சார்ந்தியங்குகின்றன என்பதையும் ஒன்று மற்றொன்றை தூண்டுகிறது என்பதையும் வெளிக்கொணர்ந்ததுடன், ஆற்றல் அழிவின்மை விதி உருவாக காரணமாக அமைந்தன.

(தொடரும்)

அறத்தாறு இதுவென வேண்டா. சிவிகை என்றால் பல்லக்கு. சிவிகை பொறுத்தான்" என்றால் பல்லக்கைச் சுமப்பவன். ஊர்ந்தான் என்றால் அதில் பயணிப்பவன். ஊர்ந்ததால் வண்டிகளை ஊர்திகள் எங்கிறோம். கடைசிச் சீர் இடை.

ஒருவன் பல்லக்கில் அமர்ந்து இன்பமாகச் செல்கிறான். மற்றவர்கள் அந்தப் பல்லக்கைச் சுமந்து செல்கிறார்கள். இங்கே மேலும் பொருள் துலக்கத்திற்குத் துணையாக அதிகாரத்தின் பெயரையும் பார்க்கவேண்டும். அறன் வலியுறுத்தல். அறத்தை வலியுறுத்திப் பேசுகின்ற குறள்கள். அப்படியென்றால் இக்குறள் அறத்தின் மேன்மை குறித்து வலியுறுத்தி அழுத்தந்திருத்தமாக எதையோ சொல்ல வருகிறது. அல்லது அறத்தை வலியுறுத்தி எங்கெங்கு எப்படியெப்படிப் பேசலாம் என்பதைப் பற்றி விளக்க வருகிறது.

நமக்கு இன்று தோன்றுகிற கேள்வி இது. ஒருவன் ஒய்யார மாக அமர்ந்திருக்க அதை நால்வர் தோள்களில் விதிர்விதிர்க்கச் சுமந்து செல்வதா? இது என்ன நியாயம்? இது என்ன அறம்?

ஒருவேளை இதுதான் அறத்தின் பயனோ? இதுதான் அறத்தின் வழியோ? இது அறத்தின் சூழ்ச்சியோ? இல்லை இல்லை இல்லை. இதுவென வேண்டா. இது அறமில்லை என்கிறார் வள்ளுவர்.

தன்னை நால்வர் சுமந்து செல்ல அதில் ஒய்யாரமாக அமர்ந்து செல்பவனிடம் சென்று "இது அறமில்லை... இது அறம் நல்கும் செயலில்லை" என்று சொல்லாதீர். சொன்னால் தன் மூர்க்கத்தைக் காட்டுவான். அதிகாரத்தைக் காட்டுவான். அவனுக்கும் அறத்திற்கும் தொடர்பில்லை.

சுமந்துசெல்கிறானே அவனிடம் சொல்லலாமா? அவனிடமும் சொல்லக் கூடாது. ஏன்? அவன் அறத்திற்கு எதிராக என்ன செய்தான்? அவன் அப்பாவி அல்லவா? அவனிடம் அறம் போதிக்கலாகாதா? கூடாது என்கிறார் வள்ளுவர். பல்லக்கில் செல்பவன் மூர்க்கன், அவனிடம் அறம் போதிக்க வேண்டா" என்பது புரிகிறது. சுமப்பவன் என்ன பாவம் செய்தான்?

அதற்கு நான் கருதும் பொருள் அவன் ஏற்கனவே சுமக்க முடியாமல் சுமந்து செல்கிறவன். அவன் தோள்கள் பழுத்திருக்கின் றன. மூச்சு இறைக்கிறது. கால்கள் துவண்டுள்ளன. அவனருகே நீ உன் போதனைகளோடு செல்லாதே. பதிலாக, அவன்படும் துன்பத்திற்கு நீயும் தோள்கொடு. அவன்படும் பாடு களில் பங்குகொள். அவனிடம் அறம், தர்மம், புண்ணியம், அது இது என்று எதையும் கூறாதே. உன் செயல்வழியே உதவு. சொற்களைக் குறை. அவன் விடுதலைக்கு உதவு.

தற்காலத்தைப் பார்ப்போம்! நாம் தாங்க முடியாத துன்பங்களில் உழன்றுகொண்டிருக்கிறோம், நம் மீட்பராகத் தங்களைக் கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகள் போதிப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள், அல்லவா?

இப்பொழுது பொருள் திரட்டுகிறேன், பாருங்கள்!


"பல்லக்கில் அமர்ந்து செல்கின்றவனிடமும் அதைச் சுமந்து செல்கின்றவனிடமும் இடையே போய் அறத்திற்கான வழிகள் இவை என்று வலியுறுத்திக் கொண்டிராதே."

**அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோ (டு) ஊர்ந்தான் இடை.**

ஏன் என்பதற்கான காரணத்தைத் தெளிவாக விளக்கவல்லவனே நல்ல உரையாசிரியன்.

# உதவி கேட்டவனைக் கல்லால் அடித்த பெரியவர்

(சிறுவர் கதை)



காட்டு வழியாக ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. அங்கிருந்த ஒரு மரத்தில் உயரத்தில் பழங்கள் இருப்பதைக் கண்டான்.

பசியின் வேகத்தில் மரத்தின் மேல் வேகமாக ஏறி, அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான்.

மேலும் சில பழங்களைப் பறிப்பதற்காக முயன்றான். பழங்கள் கிளைகளின் நுனி யில் இருந்தன. அவற்றை எட்டிப் பறித்து விடலாமென்று கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது, அவனது எடை-யைத் தாங்காமல் அந்தக் கிளை முறிந்து விட்டது.

முறிந்து விட்ட கிளையிலிருந்து கீழே விழுந்த அவன், அந்தக் கிளையின் கீழே இருந்த கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான்.

கீழே குனிந்து பார்த்தான். தரை மிகவும் கீழாக இருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து போனான்.

மரத்தின் கிளையைப் பிடித்துக் கொண்டிருந்த அவனது கைகளின் பிடி தளர்ந்து விடுமோ என்ற அச்சத்தில் இருந்தான்.

கண்ணை மூடிக் கொண்டு "என்னை யாராவது காப்பாற்றுங்கள்" என்று சத்தம் போட ஆரம்பித்தான்.

அப்போது அந்தப் பக்கமாக வந்த ஒரு முதியவர், மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார்.

அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார்.

கல் பட்ட வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது.

"பெரியவரே, உதவச் சொன்னால் என்னைக் கல்லால் அடிக்கிறீர்களே... உங்களுக்கு அறிவில்லையா" என்று கோபத்துடன் கேட்டான்.

அந்தப் பெரியவர் பதில் எதுவும் சொல்லவில்லை.

கீழே குனிந்து, அங்கு கிடந்த மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார்.

அந்தக் கல் பட்ட வலியில், மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து தனது ஒரு கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றைப் பலமாக பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விடமாட்டேன்" என்று எச்சரிக்கை செய்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை எடுத்து அவன் மேல் வீசி-னார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்துக் கிளை மேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான் அவரைச் சரமாரியாகத் திட்டினான்.

"உம்மை நான் உதவிதானே கேட்டேன்? ஆனால், நீங்கள் என்னைக் கல்லால் அடித்துக் கோபப்படுத்துகிறீர்களே..." என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார்.

இளைஞன் எதுவும் புரியாமல் அவரைப் பார்த்தான்.

அந்தப் பெரியவர். "நான் உன்னை முதலில் பார்த்த போது, நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். அதனால் உன் மூளை வேலை செய்யவில்லை. நான் உன் மேல் கல்லை விட்டு எறிந்ததும், உன் பயம் மறைய ஆரம்பித்து, நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்" என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.

# சின்னச் சின்ன...

▸ கோடைகாலத்தில் கறுப்புக் குடை பிடித்துக் கொண்டு செல்லக் கூடாது. கறுப்பு நிறம் சூரிய ஒளிக்கதிரை வாங்கி வெளியில் விடாமல் தன்னகத்தே வைத்துக் கொள்ளும் தன்மையுடையது. எனவே, நாம் வெயிலில் செல்லும் போது கறுப்புக் குடையைப் பிடித்துச் சென்றால் சூரிய ஒளிக்கதிர்கள் நம்மீதே இறங்கும். இதனால் கோடைகாலத்தில் கறுப்புக் குடையை பயன்படுத்தக் கூடாது.



▸ கடல்களுக்கு அடியில் 60,000 மைல்கள் நீளத்தில் மலைகள் உள்ளன! உலகில் கடல்களுக்கு அடியில் காணப்படும் மலைத் தொடர்களில் ஒன்று அட்லாண்டிக் பெருங்கடலில் தொடங்கி இந்தியப் பெருங்கடல் வழியாகச் சென்று பசி-பிக் பெருங்கடலைக் கடந்து மெக்ஸிகோவின் மேற்குக் கடற்கரையை அடைகிற தாம். இம்மலைத் தொட ரின் நீளம் 60,000 மைல்கள் என ஆய்வின் முடிவு தெரிவிக்கின்றது.

▸ நீரழிவு நோயைக் குணமாக்குவதற்கு அவ்வப்போது இன்சுலின் ஊசி போட்டுக் கொள்கின்றனர். அதிகமாக ஊசிபோடும்போது இரத்தத்தில் குளுகோஸ் குறைந்து மரணத்திற்கு வழியாக அமைகிறது. இதனைத் தவிர்ப்பதற்கு அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் அர்னாப் டே என்ற இந்தியர் இன்சுலின் கலப்பு இல்லாத மருந்து ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார். இம்மருந்து இரத்தத்தில் அதிகமாக காணப்படும் இனிப்பைக் குறைக்க உதவும் என கூறப்படுகிறது.

▸ பனி படர்ந்த மலைகளில் பொதுவாகச் செடிகள் எதுவும் வளராது. ஆனால் இமயமலை யின் சிகரங்களில் ஒன்றான "காஞ்சன் ஜங்கா" (இதன் உயரம் 25,000 அடிகளாகும்) முழுவதும் பனிக்கட்டிகள் மூடிக் கிடக்கும். இங்கு மட்டும் "ஐஸ் லார்க்சர்" என்னும் ஒருவகைச் செடிகள் பசுமையாக வளர்ந்து அழகான வண்ண மலர்களுடன் பூத்துக் குலுங்குகிறது!

▸ பலருக்கு பல கனவுகள் வருவதுண்டு. சில-நேரம் அல்லது நீண்ட நேரம் கனவுகள் எதனால் வருகின்றன என்று கேட்டால் பலருக்கு விடை தெரிவதில்லை. நாம் தூங்கும்போது நமது உடல் ஓய்வு எடுக்கிறது. ஆனால், மூளை இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. மூளையின் ஓய்வில்லாத இந்தச் செயற்பாடுதான் கனவுகளுக்குக் காரணமாகிறது.

▸ ரஷ்யாவில் மொஸ்கோவில் இருந்து விளாடிவாஸ்டாக் வரை உள்ள ரயில் பாதையே உலகின் மிக நீளமான ரயில்பாதை! அதன் தூரம் 9259 கி.மீ. சென்று வர ஏழரை நாள் ஆகும்.






▸ அக்பரின் இலட்சிய நகரமான பத்தேபூர் சிக்ரியில் அரச குடும்பம் ஜலக்கிரீடை செய்ய, "மினி நீச்சல் குளம்" ஒன்றை வடிவமைத்தார், அவருடைய மைந்தர் ஜஹாங்கீர். அந்தச் சின்னஞ்சிறிய நீச்சல் குளத்தைப் பார்வையாளர்கள் பார்க்கும் வகை யில் காட்சிக்கு வைத்துள்ளனர். ஒரேயொரு பளிங்குக்கல்லில் கடைந்தெடுக்கப்பட்டது இந்த நீச்சல் குளம்.

▸ உலகிலேயே கைதிகளுக்கு மிக அதிக வசதிகள் உள்ள சிறை வாடிகனில் இருக்கிறது. இங்கு கைதிகளுக்கு நாலு வேளை சாப்பாட்டுடன், ஒவ்வொரு கைதிக்கும் தனி படுக்கை அறை, குளியல் அறை, கழிவறை கொடுக்கப்படுகிறது. ஆனால், 60 ஆண்டுகளாகக் கைதியாக வந்தவர்களின் எண்ணிக்கை நூறுக்கும் கீழேதான்.

▸ நாம் விளையாடும் சீட்டுக் கட்டில் இருக்கும் ராஜாவின் படம் 300 ஆண்டுகளாக மிகப்பெரிய மாறுதல்களுக்கு உட்படாமல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதில் உள்ள ராஜா இங்கிலாந்து மன்னர் முதலாம் சாள்ஸின் உருவமாகவும் ராணி முதலாம் எலிசபெத் உருவமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்டு வருகிறது.

# நிகழ்வுகளின் பதிவுகள்....





இலங்கையில் முதல் முதலாவதாக நடாத்தப்பட்ட தமிழ் அருட்சுனைஞர் பயிற்சி நெறியில் பங்கு பற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், சான்றிதழ் வழங்கப்படுவதையும் காணலாம். (63)


யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு கோவலன் கூத்து அண்மையில் கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றபோது (63)







கிளிநொச்சியில் அமைந்துள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கு கனடா வாழ் பாலபாலசிங்கம் என்பவரால் முச்சக்கரவண்டியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.




கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசைதினம் அண்மையில் நடைபெற்றபோது... (63, 48)








யாழ். இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்திய தொழில் நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தினம் மற்றும் சர்வதேச மாணவர் தினம் நேற்று முன்தினம் தூதரகத்தில் நடைபெற்றபோது...

யாழ். கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் வீரபாகு சிற்றம்பலத்தின் உருவச்சிலை திறப்பு விழா அண்மையில் அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கல்லூரி மாணவர் ஒருவர் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும் காணலாம். (18)









காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் இலவச குடிநீர் விநியோகத் திட்டம் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தினால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (50)

# பாடசாலைகள் மீது கண்காணிப்பு

# ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

மன்னாரில் உள்ள சில பாடசாலைகள் மீது படையினர் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட சில பாடசாலைகளுக்குச் சென்ற படையினர் அங்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் விபரங்களைச் சேகரித்துள்ளதுடன், அவர்களைப் புகைப்படமும் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் இது நடைபெற்றிருப்பதனால், அந்தப் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதுடன், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அச்சமடைந்துள்ளதாக ஆசிரியர்களும் பெற்றோர்களும் தெரிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், தமது மேலதிகாரிகளுக்கு முறையிட்டிருக்கின்றார்கள். வலயன்கட்டு,காக்கையன் குளம் உள்ளிட்ட பாடசாலைகளில் இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பதாகத் தங்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்

இந்தச் சம்பவத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டித்திருக்கின்றது. இதுபற்றிக்கருத்து வெளியிட்ட அந்தச் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், யுத்தம் முடிவடைந்த பின்னர், யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் அமைதி நிலவுகின்ற நேரத்தில் இவ்வாறு பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை அச்சமடையச் செய்யும் வகையில் படையினர் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்தனர்.



கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58ஆவது ஆண்டுநிறைவினை முன்னிட்டு கைதடி நோவையூர் குறுக்கு வீதி சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராசாவினால் திறந்து வைக்கப்பட்டது. (51)

## தேவி காலாண்டு சஞ்சிகைக்கு ஆக்கங்கள் சேகரிப்பு

(யாழ்.நிருபர்)

வெகுவிரைவில் வெளிவரவுள்ள தேவி காலாண்டு சஞ்சிகைக்கு எழுத்தாளர்கள் மாணவர்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. கலை, இலக்கியம் சம்பந்தமான கட்டுரை, கவிதை, சிறுகதைகள் மட்டுமன்றி அறிவியல் சார்ந்த மற்றும் கணனிதொடர்பாடல், தொழிநுட்பம்,சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீர்வளம் தொடர்பான கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

தரமான கட்டுரைகள் மற்றும் ஆக்கங்களுக்குப் பரிசில்கள் காத்திருக்கின்றன. பெண் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு தனியாக பரிசில்கள் வழங்கப்படும்.

ஆர்வமுள்ள அனுபவமிக்க மற்றும் புதிய எழுத்தாளர்களும் தமது ஆக்கங்களை தேவி 140/1 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலமோ அல்லது Deviads@live.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பிவைக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான பிரிவு ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

கோண்டாவில் இந்துமகாவித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான கணித விஞ்ஞான பிரிவுகள் நாளை மறுதினம் புதன் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த வருடம் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டதோடு இப்பாடசாலை 1AB பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறன.

இப்பாடசாலையில் க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கணித, விஞ்ஞான பிரிவுகளில் அனுமதிபெறும் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கோ, கல்வியியற் கல்லூரிகளுக்கோ அனுப்பிவைப்பதற்கான விசேட பயிற்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் இதற்கு பழையமாணவர்களும் பெற்றோர்களும் ஊக்குவிப்பு வழங்கி வருவதாகவும் அதிபர் கே.கே.தவகீஸ்வரன் தெரிவித்துள்ளார். (10)

## உயிர் வலித்த கணம் கவிதை நூல் வெளியீட்டு விழா


கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவனுமான வன்னியூர் செந்தூரனின் ‘உயிர்வலித்த கணம்’ கவிதை நூல் வெளியீட்டு விழா கிளி. மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பிரபல தமிழ் ஆசிரியர் லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

இதன்போது வரவேற்புரையினை முல்லைத்தீவு கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரும் இலக்கிய விமர்சகருமான சி.நாகேந்திரராஜா வழங்கி வைத்தார்.

வெளியீட்டுரையை கிளிநொச்சி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை அதிபர் ரவீந்திரனும், நயப்புரைகளை கவிஞர் சமரபாகுசீனா உதயகுமாரும் முல்லைத்தீவு துணுக்காய் வலயத்தைச் சேர்ந்த திருமதி கௌரிபுத்திரியும் வழங்கினர்.

ஏற்புரையை நூலாசிரியர் செந்தூரன் வழங்கினார்.



இந்த விழாவில் வடமாகாணசபை உறுப்பினர் ப.அரியரத்தினம், கிளிநொச்சி, திருவையாறு, பாரதிபுரம், மலையாளபுரம், உருத்திரபுரம் ஆகிய பிரதேச பாடசாலைகளின் அதிபர்களான பெ.கணேசன், சிறீதரன், திருமதி.சூரியகுமாரி இராஜேந்திரம், திருமதி.இருதயசிவதாஸ் மற்றும் ஆசிரியர் அ.சத்தியானந்தம், பா.உறுப்பினர் சி.சிறீதரனின் செயலாளரும் கிளிநொச்சி கிழக்கு பிரதேச தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அமைப்பாளரும் கவிஞருமான பொன்.காந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



## வேலை வாய்ப்புச் செய்திகள்

யாழ்ப்பாணத்தில் உள்ள கோழிப்பண்ணைக்கு தங்கி வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. தொடர்புக்கு:- 0777048972

---

தனியான அல்லது தம்பதி 50 வயதுக்குட்பட்ட நீர்கொழும்பில் பூந்தோட்டமொன்றுக்கு தேவை. உணவு தங்குமிடமுண்டு தொடர்புக்கு 0773647947, 0777399199.

---

விருப்பமில்லை? 35,000 கூடிய சம்பளம் பிஸ்கட், ஜேம், கோடியல், லேபல்பொதியிடல் பிரிவுகளுக்கு ஆண்,பெண் நாட்டின் எல்லா பிரதேசங்களிலும் தேவை.தொடர்புக்கு 0712296100.

---

இலங்கையில் அமைந்துள்ள பிரதானமான நிறுவனங்களில் டொபி, ஜேம், சொக்லட், பிஸ்ட் நிறுவனங்களில் லேபல், பொதியிடல் வேலைகளுக்கு உடனடியாக ஆண்கள், பெண்கள் தேவை. வயதெல்லை 18 தொடக்கம் சம்பளம் 30,000 சாப்பாடு, தங்குமிடவசதி இலவசம். உடனடி தொடர்பு 0775888302.

---

புதிய நிரந்தர வேலைவாய்ப்புக்கள் ஜேம், கோடியல், பால்மா, கார்மண்ட், தேயிலை சொக்லட் கார்கில்ஸ், ஆர்பிகோ மற்றும் துறைமுகம் (தனியார்) Security, Sales Ref போன்ற பிரிவுகளுக்கு வெற்றிடம் உண்டு. உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும் (பேலியகொடை, மட்டக்குளிய, ஒருகொடவத்தை வெல்லம்பிட்டிய கிராண்ட்பாஸ், களனி, இரத்மலானை, ராஜகிரிய நாராஹென் பிட்டிய பியகம, நீர்கொழும்பு சம்பளம் 18000,30,000 நண்பர் குழுவினர் ஒரே தொழிற்சாலைகளில் Direct கம்பனிகளுக்கு ஆட்சேர்ப்பு உண்டு 0778430179.

---

கொழும்பில் அமைந்துள்ள சிறிய குடும்பத்திற்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வயது 30-40இடைப்பட்ட வீட்டுப் பணிப்பெண் தேவை சம்பளம் 17,000 -20,000சிங்கள உணவு தயாரிக்கக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புக்கு 147A கிங்ஸ்லி ரோட் பொரளை. 0717777733.

---

ஆண்களுக்கான வேலைவாய்ப்பு ஆயுர்வேத மருந்து தயாரிப்பாளர்கள் (அனுபவம் உள்ளவர்கள், அனுபவம் அற்றவர்கள் இரு பாலாருக்கும் வாய்ப்புக்கள் உள்ளன. கவர்ச்சியான சம்பளம் மற்றும் தங்குமிட வசதி உண்டு. பஸ்பாலே ஆயுர்வேத ஔசு தனியார் நிறுவனம், தழுபிட்டி மஹர கடவத்தை தொலைபேசி இல. 0114818196.

---

புதியதொரு தொழில்துறையினை நாடும் உங்களுக்கு அரியதொரு வரப்பிரசாதமாக எமது கம்பனியில் முகாமைத்துவம் சார்ந்த 01) கணக்காளர், 02) அலுவலக உதவியாளர், 03) மேற்பார்வையாளர் 04) விநியோகஸ்தர், 05) துணை முகாமையாளர் 06) முகாமையாளர், ஆகிய பதவி வெற்றிடங்கள், எதிர்பார்க்கப்படுகின்றன தகமை O/L அல்லது A/L அனுபவம் அவசியமற்றது. பயிற்சி காலத்தின் போது ரூபா 12,000 15,000 பின் 35,000க்கு மேல்ஆண்களுக்கு தங்குமிட வசதியுண்டு தொடர்புக்கு 0778213838.

---

இன்னும் வேலைவாய்ப்பு அற்றவரா? நீங்கள் 18வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களா? நீங்கள் O/L பரீட்சைக்கு சமுகமளித்தவரா? நீங்கள் ஒரு முகாமையாளராக வேண்டுமா? எங்களுடன் இணையுங்கள். Innovege International நிறுவனத்திலிருந்து புதிதாக ஆரம்பிக்கும் நிறுவனத்திற்கு முகாமையாளர்கள் பயிற்சியளித்து எல்லா பிரதேசங்களிலிருந்தும் பயிற்சியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். பயிற்சிக்காலம் 180 நாட்கள் இப்பயிற்சியின்போது உணவு, தங்குமிட வசதி எல்லாம் இலவசம். பயிற்சியின் பின்னர் உள்நாடு அல்லது வெளிநாடு நிரந்தர வேலைவாய்ப்பு, திறமையாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படும் பயிற்சியின் போது 15,000 பின் 45,000 இற்கு மேல் சிங்களம் சரத் 0713436756, 0117900563, ஜாபிர் (தமிழ்) .0729067088.

---

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000 - 38,000 வரை வருகைதரும் தினமே சேர்த்துக் கொள்ளப்படும். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும், குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். தொடர்புகளுக்கு 0710854068.

---

கொழும்பு 13 இல் புடவை கடைக்கு வேலைக்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. உணவு, இருப்பிடவசதி உண்டு தொடர்புக்கு 0776577504.

---

சைனிஸ் குக் ரொட்டி பாஸ், உதவியாளர்கள் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம் no 124B, Hill Street, Dehiwela. தொடர்புக்கு 0773531474.

# குருக்கள் பதவிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

லண்டன் உயர்வாசற் குன்று முருகன் ஆலயத்தில் அர்ச் சகர் பதவிக்கான விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

இப்பதவிக்கு விண்ணப்பிக் கும் அர்ச்சகர் முறையாக ஆக மம் பயின்று குருக்கள் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

கோயிற்பூசை, ஓமம், விவா கம் முதலியன செய்யக்கூடிய வராகவும் தமிழில் அர்ச்சனை செய்யக்கூடியவராகவும் ஆலயத் தில் 15 ஆண்டுகளுக்கு குறை யாமல் கடமையாற்றுபவ ராக வும் தேகா ரோக்கியம் உள்ள வராகவும் சுவாமிக்கு நைவேத்தி யம, அலங்காரம் செய்யக்கூடிய வராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணபப்பப் படிவத்துடன் ஆகமம் பயின்ற இடம் பணி புரிந்த இடங்களில் பெற்ற நற்சான்றிதழ்களையும் சேர்த்து எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன் (SECretary,Highgatchill murugan temple 200 A Archway Road LONDON N6 5BA.uk என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாமென அறிவிக்கப்பட் டுள்ளது. (10)

# எல்லாள காவியம் நூல் வெளியீட்டு விழா

(யாழ்.நிருபர்)

காப்பியக்கோ புலவர்மணி ஜின்னா ஹ்ரிபுத்தீனின் எல்லாள காவியம் வெளியீட்டு விழா எதிர்வரும் 4 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சபா ஜெய ராஜா தலைமையில் நடைபெற வுள்ள இந் நிகழ்வில் பேரா சிரியர் சி.தில்லைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள் ளவுள்ளார்.

இந் நிகழ்வில் ஓய்வுநிலை பொலிஸ் அத்தியட்சகர் கே.அரசரத்தினம் கல்வியாளர் ஏ.எம்.நஹியா, ந.கருணை யானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள் ளவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை தொழிலதிபர் ஏ.எம்.சுப்பிரம ணியம் பெற்றுக்கொள்வார். கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆசியு ரையையும் கொழும்பு தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் தம்பு சிவசுப்பிரமணியம் வரவேற் புரையையும் தலைவர் ஆ.இரகு பதிபால ஸ்ரீதரன் தொடக்கவுரை யும் நிகழ்த்துவர்.

நூல்வெளியீட்டுரையினை தென்கிழக்கு பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் க.இரதபரன் நிகழ்த்த விமர்சன உரையை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் நிகழ்த்துவார். (10)

# மக்கள் பங்கேற்பு அபிவிருத்தியில் வீதி புனரமைப்புக்கு முன்னுரிமை

## கிராமங்கள் தோறும் ஒரு திட்டமாவது வேண்டும் வலி.மேற்கு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

(வலி.மேற்கு)

மக்கள் பங்களிப்பு திட்டம் மூலம் வலி.மேற்கில் உள்ள 25 கிராம அலுவர் பிரிவிலும் வீதி களே (பிரதேச) முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளது.

எனவே 25 கிராம அலுவலர் பிரிவிலும் வாக்கெடுப்பு மூலம் வந்த முதலாவது வீதியை யூன் மாதத்திலாவது முன்னுரிமை அடிப்படையில் மீள் புனரமைப்புச் செய்ய வேண்டும் என வலிகாமம் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் இணைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பால கிருஷ்ணன் இவ்வாறு தெரி வித்தார்.

வடக்கின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டமும் மீள்புனர மைப்பு பணியும் எனும் தலைப் பில் சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பங்கேற்பு அபிவி ருத்தித் திட்டம் வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் நிறை வுற்றுள்ளது.

இதில் ஒவ்வொரு உள்ளூ ராட்சி சபைகளிலும் பிரதேச சபை வீதிகளே முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு மக்களால் வாக் கெடுப்பு மூலம் முதலாவதாக முன்னிலைப்படுத்தப்பட்ட வீதி களை யூன் மாதத்தில மீள்புனர மைப்பு பணிகளையும். அத னைத் தொடர்ந்து ஏனைய அபி விருத்திகளையும் முன்னெடுத்து அபிவிருத்தி செய்யலாம்.

இவ்வாறு மக்கள் பங்கேற்பு திட்டத்திற்கு வலுச்சேர்க்க வேண் டுமாயின் கிராம அலுவலர் மட் டத்தில் முதலாவதாக மக்க ளால் முன்மொழியப்பட்ட திட் டங்களை முன்னெடுக்க சம்பந் தப்பட்ட சபைகள் முன்வர வேண் டும் எனக் கேட்டுக்கொண்டார். (92)

# இந்திய உற்பத்தி வாகனங்கள் இலங்கையில் அதிக சந்தை வாய்ப்பு

கடந்த வருடத்தில் இந்தி யாவில் உற்பத்தியாகும் வாக னங்கள் மற்றும் உதிரிப்பாகங்க ளில் 72 சத வீதமானவை இலங் கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள ளதாக இலங்கை வர்த்தக சம் மேளன தகவல் ஒன்று தெரி விக்கின்றது. சம்மேளனத்தின் பொருளாதார புலனாய்வு பிரி வினரால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பில் இது தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப் படும் வாகனங்களின் பெறுமதி குறித்து கருத்து வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்தியா 45 சத வீதமாக உள்ள நிலையில், ஜப்பான் 38 சத வீதத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது. இந்த நிலையில் 2012ஆம் ஆண்டு வாகன உதிரிப் பாக இறக்குமதிக்காக செல விடப்பட்ட செலவீனம் 17 சத வீதத்தால் குறைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் விபரங்கள் வெளியிடப் பட்டிருக்கவில்லை.

அதேவேளை, டீசல் முச்சக்கர வண்டிகள், பயணிகள் வாகனங்கள், சரக்கு வாக னங்கள், மோட்டார் சைக்கிள்கள், கொங்கிரீட் மிக்சர் பார ஊர்தி கள் என்பனவற்றின் எண்ணிக்கை மற்றும் அதன் செலவீனங்கள், கடந்த ஆண்டில் வீழ்ச்சியடைந் துள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

# சூதாட்டத்தை எதிர்த்து வாக்களிக்காதது ஏன்?

## சுமந்திரன் கேள்வி

கசினோ சூதாட்ட சட்டமூலம் மீதான வாக்கெடுப்பின் போது சபையில் பிரசன்னமாகி அதனை எதிர்த்து வாக்களிப்பதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு முதுகெலும்பு இல்லாது போய் விட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத் தில் தெரிவித்தார்.

செயல் நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழான கட்டளை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

சுமந்திரன் எம்.பி இங்கு மேலும் கூறுகையில்-

அரசாங்கத்தினால் சமர்ப்பிக் கப்பட்டுள்ள மேற்படி கட்ட ளையான கசினோ சூதாட்டத்தை கொண்டதான நிகழ்ச்சி நிரல் இல்லை என்று இங்கு அமைச் சர்களால் கூறப்படுகிறது. அத்து டன் இவ்விடயம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பல்வேறு கதைக ளைக் கூறி மக்களை திசை திருப்புவதாகவும் அமைச்சர்கள் கூறுகின்றனர்.

எனினும் மகாநாயக்க தேரர் களே இதனை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை திருத்தியமைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஆகவேதான் மனச்சாட்சி உள்ள ஆளும் கட்சி உறுப்பினர் சூதாட்டத்தைக் கொண்ட பிரே ரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அத்துடன் நின்று விடாது ஆளும் கட்சியின் பங்காளியான அத்துரலியே ரத்ன தேரர் எதிர்த்து வாக்களித்தார். இந் நாட்டில் கடைப்பிடிக்கப்படுகின்ற நான்கு மதங்களுமே சூதாட்டத்தை வெறுக்கின்றன. சூதாட்டத்தின் மூலம் மனைவியை இழந்தமை, சொத்துக்களை இழந்தமை, சகோதரங்களுக்கிடையே கொலைகள் இடம்பெற்றதை வரலாறு கூறுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மே தின ஏற்பாடுகள் தெற்கில் மும்முரம்

(கொழும்பு)

தொழிலாளர் தினமான மே தினத்தைக் கொண்டாடுவதற் கான ஏற்பாடுகளில் அரசியல் கட்சிகளும் பிரதான தொழிற்சங் கங்களும் தெற்கில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்த ஆண்டு மே தினத்தை முன்னிட்டு பிரதான அரசியல் கட்சிகள் அரசியல் அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் 19 மே தினக் கூட்டங்களையும் 15 ஊர்வலங்களையும் நடாத்தத் திட் டமிட்டுள்ளன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான மே தினக் கூட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு கெம்பல்பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் அம்பாறை நகரில் நடாத்தப்படவுள்ளது.

அமைச்சர் தினேஷ் குண வர்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டம் கெம்பல் மைதானத்திலும் தேசிய சுதந்திர முன்னணியின் கூட்டம் பீ.டி. சிறிசேன விளை யாட்டு அரங்கிலும் நடைபெற வுள்ளன. ஜே.வி.பி.யின் மே தினக் கூட்டம் அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநா யக்க தலைமையில் பீ.ஆர். சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய சோசலிசக் கட்சியின மே தினக்கூட்டம் கிராண்ட்பாஸ் பலா மரச் சந்தியிலும் நவ சமசமாஜ கட்சியின் கூட்டம் பிரைஸ் மைதானத்திலும் நடைபெறவுள்ளன. அதே வேளை முன்னிலை சோசலிசக் கட்சியின் மே தினக் கூட்டம் கொட்டாஞ்சேனை ரட்ணம் மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டம் கொழும்பு ஜிந்துப்பிட்டியில் நடைபெறவுள்ளது.

ஜனநாயகக் கட்சியின் மேதி னக் கூட்டம் அதன் தலைவர் சரத் பொன்சேகா தலைமையில் பத்தரமுல்லை புத்ததசா விளை யாட்டு மைதானத்தில் நடைபெற வுள்ளது தேசிய தொழிலாளர் முன்னணியின் மேதினக் கூட்டம் அதன் தலைவர் பீ. திகாம்பரம் தலைமையில் தலவாக்கலையில் நடைபெறவுள்ளது.



# பரமர் சங்கமம்

அடியைப் போலை அண்ணன் தம்பி உதவாது பரமரின் தாரக மந்திரம் எண்டு பாத்தால் இப்ப கனபேருக்கு அந்த மந்திரம் பிடிச்சுப் போச்செண்டு பத்திரிகைகளைப் பார்த்தா விளங்குது.

எங்கை பார்த்தாலும் அடிபாடு எண்டதே பேச்சாகவும் பத்திரிகைகளிலும் அடிபட்டுக் கொண்டிருக்கு. இதிலும் பத்திரிகையாளர்களை தாக்குவது கொல்லுவது எண்ட சங் கதி உலகம் பூராகவும் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டி ருக்கிறதை அறிய முடிகிறது.

அண்மைக்கு 14.04.2014 வரிசப் பிறப்பண்டும் வடமராட்சி புறாப்பொறுப்கிப் பகுதியில் ஊடகவியலாளர் தாக்கப்பட்டதாகச் செய்தி வந்ததே ஊடகவியலாளரெண்டால் நடக்கிறதைத் தானே எழுதுவார்.

அவையளும் கண்ணைப் பிரித்துக்கொண்டு உண்மைக்குப் புறம்பாக எழுதுகிறார்களா? எதற்காகத் தாக்க வேண்டும்? பரமருக்கும் உப்புடித் தாக்குவதெண்டு சிநேகிதர் பகிடிவிடு வினம். அடிக்கிறாங்களில்லையே அடிச்சா அந்தச் சாட்டில் வெளிநாட்டுக்குப் போயிடுவனெண்டு ஒருதரும் திரும்பியும் பாக்கிறாங்களில்லை எண்டு சொல்லுவன்.


ரெண்டு வருடங்களுக்கு முன்னால பத்திரிகையாளர் குகநாதன் தாக்கப்பட்டார். இண்டைக்கு பிரான்ஸில் வசதியாக நிம்மதியாக வாழ் நாளைக் கழிக்கிறார்.

அவருக்கு அந்த வாய்ப்புக் கிடைச்ச வேளை இன்னொரு இளம் ஊடகவியலாளருக்கும் வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிடைச்சது அது போல எனக்கும் ஆகும் அடிச்சால் வயதும் போய் நோய்வாய்ப்பட்டுள்ள இந்த நேரத்தில் வெளிநாட்டுக்குப் போற வாய்ப்புக் கிடைக்குமெண்டால் ஊம்..ஹும் எனக்கந்த புண்ணியம் இல்லையெண்டால் சிநேகிதரெல்லாம் சிரிக்கினம்.

உவருக்கு அடிவாங்கிறேண்டா சரியான பயம் அதால தன்பாட்டுக்குப் புசத்திக் கொண்டு திரியிறாரெண்டும் இரண் டொருதர் கதைச்சிருக்கினம். உண்மேல என்ர மனநிலை அவைக்கு விளங்கேல்லை. ஏனெண்டா அடிக்கிறவன் கொலையே செய்திடுவான்? இரண்டு தட்டுப் போட்டிட்டு வரு வான் தானை. அதுக்கும் சிநேகிதருக்குச் சொன்னான் அடிக்கிறவன் மேல் நாட்டுக்குப் போகிறமாதிரி அடிச்சுப் போடக் கூடாது. வெளிநாட்டுக்குப் போகக் கூடியதாக அடிக் கட்டுமெண்டு

இன்னமும் என்னோடை ஒருதரும் மினக்கெடாததைப் பாத்தா ரகசியமெண்டு கசிந்து போட்டுதெண்டுதான் விளங் குது. ஏனெண்டு கேக்றியளே பரமரகசியம் பாருங்க ஒரு தருக்கும் சொல்லிப் போடாதேங்க

மர்மக்கலை பரமருக்குத் தெரியுமெண்டதுதான் அதால தான் அடியைப் போலை அண்ணன் தம்பி உதாவதெண்ட தாரகமந்திரம் புடிச்சிருக்கு இல்லையே பின்னை சொல்லுங்க பார்ப்பம்...



# க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

## பௌதிகவியல்


1) பிளாங்க் மாறிலி (h) இனது அலகு
1) $Js^{-1}$ 2) Js 3) $Js^{-2}$ 4) $J^{-1}s^{-1}$ 5) $J^{-1}s$

2) கோணவேகம் கொண்டிருக்கும் பரிமாணம்
1) $LT^{-1}$ 2) $T^{-1}$ 3) $LT^{-2}$ 4) T 5) $L^{-1}T^{-1}$

3) $30^0$ C இல் நீரினது நிரம்பல் ஆவி அமுக்கமானது $1.6 \times 10^3$ Pa ஆகும். $30^0$ C ஐ உடைய ஒரு நாளிலே நீராவியின் பகுதி அமுக்கம் $1.2 \times 10^3$ Pa அன்றுள்ள தொடர்பு ஈரப்பதன்.
1) 50% 2) 60% 3) 75%
4) 80% 5) 85%

4) சூரியனானது சக்தியை ஓரலகுப் பரப்புப் பரப்பளவிற்கு E என்ற வீதத்தில் கதிர்க்கின்றது. சூரியனைக் கரும் பொருள் எனக் கருதினால், அதன் பரப்பு வெப்பநிலையைத் தருவது ( σ = ஸ்ரெபான் மாறிலி)
1) $\left(\frac{E}{\sigma}\right)^{\frac{1}{4}}$ 2) $\left(\frac{E}{\sigma}\right)^{\frac{1}{2}}$ 3) $\frac{E}{\sigma}$
4) $\left(\frac{E}{\sigma}\right)^{2}$ 5) $\left(\frac{E}{\sigma}\right)^{4}$

5) மாறா விளையுள் விசையொன்றினால் ஓய்வுக்குக் கொண்டு வரப்படும் பொருள் ஒன்றினது வேகம் υ இனது t உடனான மாறலைப் பின்வரும் வரைபுகளில் எது திறம்பட வகைக் குறிக்கிறது?





6) 0.5 m வேறாக்கத்திலுள்ள இரண்டு நிலைத்த ஆதாரங்களுக்கிடையிலே ஈர்க்கப்பட்ட இழை ஒன்றிலேயுள்ள இழுவையானது, இவ்விழையின் அடிப்படை மீடிறன் 440 Hz ஆக வரும்வரை சரிசெய்யப்பட்டுள்ளது. இவ்விழை வழியேயான குறுக்கலைகளின் கதி
1) 110 $ms^{-1}$ 2) 220 $ms^{-1}$ 3) 330$ms^{-1}$ 4) 440$ms^{-1}$ 5) 880 $ms^{-1}$

7) 240 V ஆ.ஓ. மின்வல முதல் ஒன்றானது, இலட்சிய நிலைமாற்றியொன்றைப் பயன்படுத்தி, 12 V, 60W ஆ.ஓ.மோட்டர் ஒன்றை ஓடச் செய்வதற்குப் பயன்படுத் தப்படுகிறது. இந்நிலைமாற்றியினது முதன்மை முறுக்குகளிலுள்ள ஓட்டம்.
1) 0.25 A 2) 0.5 A 3) $\sqrt{5}$ A 4) 5 A 5) 20 A

8) செறிவு I ஐயுடைய ஒலி முதலொன்றானது, 100 I செறிவையுடைய ஓர் ஒலி முதலினால் பிரதியிடப்படுகிறது. தரப்பட்ட புள்ளி ஒன்றிலேயுள்ள செறிவு மட்ட மாற்றம்.
1) 1 dB 2) 10 dB 3) 20dB 4) 50 dB 5) 100 dB


9) இத்தாளின் தளத்துக்குச் செவ்வனாக வைக்கப்பட்டுளளதும், தாளின் உள்நோக்கிய திசையில் ஓட்டமொன்றைக் காவுவதுமான நேர் கம்பி ஒன்றைச் சூழவுள்ள காந்தப் புலத்தைத் திறம்பட வகை குறிப்பது.




10) இரு சவர்க்காரக் குமிழிகள், ஒன்றினது ஆரை 3 cm சமவெப்ப நிபந்தனைகளின் கீழ் வெற்றிடத்திலே ஒன்று சேர்கின்றன. உருவாகும் ஒற்றைக் குமிழியினது ஆரை 1 ) 1 cm 2) 2 cm 3) 5 cm 4) 6 cm 5) 8cm


11) வானியற் தொலைகாட்டி ஒன்றினது பொருளியானது 60 cm குவிய நீளத்தைக் கொண்டுள்ளது. ஓய்வாகவுள்ள இயல்பான கண்ணைக் கொண்டு பொருட்களைப் பார்வையிடுவதற்கு இத்தொலைகாட்டியானது செப்பஞ் செய்யப்பட்டபோது, வில்லைகளுக்கிடையிலுள்ள தூரம் 65cm ஆகும். இக்கருவியினது கோணப் பெரிதாக்கம். 1) 2.4 2) 2.6 3) 5 4) 12 5) 20

12) மாறா அமுக்கத்திலுள்ள குறிப்பிட்ட திணிவையுடைய இலட்சிய வாயுவொன்றின் கனவளவு V இனது, அதன் தனி வெப்பநிலை T யுடனான மாறலைப் பின்வரும் வரைபுகளில் எது திறம்பட வகை குறிக்கின்றது?




13) பின்வரும் இயல்புகளில் எந்த ஒன்று, α, β,γ கதிர்ப்புகள் மூன்றுக்கும் பொதுவான இயல்பு அல்ல?
1) சக்தியைக் காவுதல்.
2) துணிக்கை இயல்பையும் அலையியல்பையும் ஒருமித்துக் காட்டுதல்.
3) வளியை அயனாக்கும் ஆற்றல்.
4) அணுவின் கருவினால் காவப்படுதல்.
5) ஏற்றமொன்றைக் கொண்டிருத்தல்.

14) வரிப்படத்திலே காட்டப்பட்டுள்ள உருவமுடைய பொருளானது சீரான உலோகத் தகடு ஒன்றிலிருந்து வெட்டப்பட்டுள்ளது. இப்பொருளினது ஈர்ப்பு மையமானது காணப்படக்கூடிய மிகப் பொருத்தமான புள்ளி





1) A 2) B 3) C
4) D 5) E

15) 6 N நிறையுடைய சீரான திண்ம உருளையொன்றானது, திரவமொன்றிலே திரவப் பரப்புக்கு மேல் அதன் உயரத்தின் 1/4 பங்கு இருக்கும் வகையிலே, நிலைக் குத்தாக மிதக்கின்றது. இவ்வுருளையைத் திரவத்தினுள் முற்றாக அமிழ்த்துவதற்குத் தேவையான இழிவு நிலைக்குத்து விசை
1) 1.5 N 2) 2 N 3) 3 N 4) 4N 5) 12 N


16) வில் மாறிலி k யையுடைய மீளியல் இழையொன்று இரு சம நீளப் பகுதிகளாக வெட்டப்படுகிறது. ஒரு பகுதியினது வில் மாறிலி.
1) $\frac{k}{2}$ 2) $\frac{1}{\sqrt{2}}$ k 3) k 4) $\sqrt{2k}$ 5) 2k

17) பின்வரும் வரிப்படங்கள், செங்கோண இருசமபக்கக் கண்ணாடி அரியமொன்றின மீது ஒரு நிறவொளியின் ஒடுங்கிய சமாந்தரக் கற்றையொன்றைப் படச் செய்யும் ஐந்து வெவ்வேறு வழிகளை வகைக் குறிக்கின்றன. இவற்றுள் எந்த ஒழுங்கு. ஆரம்பத்தில் கற்றை நுழைந்த முகத்திலிருந்தே அதனை வெளிப்படச் செய்யும்?




18) ஒரு மனிதன் - 1.5 தையொத்தர் வலுவுடைய மூக்குக் கண்ணாடியை அணியும்போது அவனின் கண்களிலிருந்து 25 cm தூரத்திலே வைக்கப்பட்டுள்ள பொருட்களைத் தெளிவாகக் காண்கிறான். மூக்குக்கண்ணாடியை அணியாது, எவ்விழிவுத் தூரத்திலுள்ள பொருட்களை அவன் மிகத் தெளிவாகப் பார்க்க முடியும்?
1) அவன் கண்களிலிருந்து 18 cm தூரத்தில் உள்ளவற்றை.
2) அவன் கண்களிலிருந்து 20 cm தூரத்தில் உள்ளவற்றை.
3) அவன் கண்களிலிருந்து 30 cm தூரத்தில் உள்ளவற்றை.
4) அவன் கண்களிலிருந்து 40 cm தூரத்தில் உள்ளவற்றை.
5) அ்வன் கண்களிலிருந்து 50 cm தூரத்தில் உள்ளவற்றை.

19) மூன்று திரவியங்களினது மின் தடைத்திறனினது, வெப்பநிலை T உடனான மாறல்களை A, B, C ஆகிய மூன்று வரைபுகளும் காட்டுகின்றன.




பின்வரும் சேர்மானங்களில் எது மேலுள்ள வளையிகளைச் சரியாக வகைக் குறிக்கின்றது?


| | A | B | C |
|---|---|---|---|
| 1) | உலோகக் கடத்தி | மீகடத்தி | குறைகடத்தி |
| 2) | உலோகக் கடத்தி | குறைகடத்தி | மீ கடத்தி |
| 3) | குறைகடத்தி | உலோகக் கடத்தி | மீ கடத்தி |
| 4) | குறைகடத்தி | மீகடத்தி | உலோகக் கடத்தி |
| 5) | மீ கடத்தி | உலோகக் கடத்தி | குறைகடத்தி |

20) ஆடலோட்டம் ஒன்றினது இடை வர்க்க மூலப் பெறுமானம் $I_{r.m.s}$ ஐப் பற்றிச் செய்யப்பட்ட பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
a) $I_{r.m.s}$ ஆனது உச்ச ஓட்டம் $I_0$ இற்கு $I_{r.m.s} = \frac{I_0}{\sqrt{2}}$ என்பதாற் தொடர்பு படுத்தப்படும்.
b) $I_{r.m.s}$ ஆனது ஓட்டச் சக்கரம் (cycle) ஒன்றின் போதான சராசரிப் பெறுமானமாகும்.
C) $I_{r.m.s}$ ஆனது தடையியொன்றிலே ஆடலோட்டத்தினால் ஏற்படுத்தப்படும் அதே சராசரி வலு இழப்பை ஏற்படுத்தக்கூடிய சமவலு Ne.X. ஆகும்.
மேலுள்ள கூற்றுக்களிலே
1) (A) மாத்திரமே உண்மையானது.
2) (A) யும் (B) யும் மாத்திரமே உண்மையானவை.
3) (A) யும் (B) யும் மாத்திரமே உண்மையானவை.
4) (B) யும் (C) யும் மாத்திரமே உண்மையான்வை.
5) (A) , (B), (C) ஆகிய யாவும் உண்மையானவை.

21) யூரேனிய $^{239}_{92}U$ சமதானியொன்றானது β துணிக்கையைக் காவுவதன் மூலம் தேய்வடைகின்றது. பின்வரும் விடைகளில் எது, உருவாகிய புதிய கருவினது சரியான திணிவு எண்ணையும் அணு எண்ணையும் தருகின்றது?

| | திணிவு எண் (A) | அணு எண் (Z) |
|---|---|---|
| 1) | 235 | 90 |
| 2) | 240 | 92 |
| 3) | 239 | 91 |
| 4) | 239 | 93 |
| 5) | 239 | 90 |

22) வெற்றிடத்திலே, உருவிலே காட்டப்பட்டவாறு, சீரான காந்தப் புலம் B யை உடைய பிரதேசம் ஒன்றினுள்ளே இலத்திரன்களின் கற்றையொன்று எறியப்படுகிறது. இவ்விலத்திரன் கற்றையும் காந்தப் புலமும் இத்தாளினது தளத்திலே இருக்குமாயின், இவ்விலத்திரன்களின் பாதையானது





1) இக்காந்தப் பலத்தினால் பாதிக்கப்படாது.
2) இடம் நோக்கி வளையும்.
3) வலம் நோக்கி வளையும்.
4) தாளின் வெளியே மேல்நோக்கி வளையும்.
5) தாளின் உள்ளே கீழ்நோக்கி வளையும்.


24)




உருவிலே காட்டப்பட்டவாறு 2 cm வீச்சமுடைய சர்வசமனான வடிவையுடைய இரு துடிப்புகள், ஓர் இழை வழியே எதிர்த்திசைகளில் ஒரே கதியான $2cms^{-1}$ உடன் நகர்கின்றன. ஆரம்பத்திலே இத்துடிப்புகள் இரண்டும் 8cm இடைவெளியில் இருந்திருக்குமாயின், 2s இன் பின்னருள்ள அலைக் கோலத்தைத் தருவது.




25) உருவிலே காட்டப்பட்டவாறு ஒரு சிறிய பொருள் O வும், ஒரு தள ஆடியும் 0.5 m குவிய நீளக் குவிவு வில்லை ஒன்றினது எதிர்ப் பக்கங் களிலே வைக்கப்பட்டுள்ளன. உருவாக் கப்படும் விம்பங்களின் எண்ணிக் கையையும், அவற்றின் இயல்பையும் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது?




1) மூன்று விம்பங்கள் : அவற்றில் இரண்டு மெய்யானவை.
2) மூன்று விம்பங்கள்: அவற்றில் ஒன்று மெய்யானது.
3) இரண்டு மெய் விம்பங்கள்.
4) இரண்டு விம்பங்கள் : அவற்றில் ஒன்று மெய்யானது.
5) ஒரு மெய் விம்பம் மாத்திரம்.

26) ஒரு மீளியல் இழையானது, அதன்மீது 3 N இழுவையுள்ளபோது 30 cm நீளத்தைக் கொண்டுள்ளது. இழுவை 4N ஆகும்போது இந் நீளம் 32 cm ஆக வருகிறது. இழுவையானது 7 N இற்கு அதிகரிக்கப்படுமாயின், இவ்விழையின் நீளம்

1) 34 cm ஆயிருக்கும். 2) 38 cm ஆயிருக்கும்.
3) 40 cm ஆயிருக்கும். 4) 42 cm ஆயிருக்கும்.
5) 44 cm ஆயிருக்கும்.

27) திரவமொன்று ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படாத இரு மயிர்த்துளைக் குழாய்களூடாக, ஒரே அமுக்க வேறுபாட்டின் கீழ் பாய்கிறது. இவ்விரு குழாய்களினதும் அக விட்டங்கள் 2 : 1 என்ற விகிதத்தில் உள்ளன. அவற்றின் நீளங்கள் 1 : 2 என்ற விகிதத்திலுள்ளன. இவ்விரு குழாய்களுக்குமூடான திரவப் பாய்ச்சல் வீதங்களினது விகிதம்

1) 32 : 1 2) 16 : 1 3) 8 : 1
4) 4 :1 5) 2 : 1

28) புறக்கணிக்கத்தக்க அகத் தடையையுடைய பற்றரி ஒன்றுக்குக் குறுக்கே தொடரில் இணைக்கப்பட்டுள்ள இரு சம தடையிகள் மொத்தமாக 10 W வலுவை விரயமாக்குகின்றன. இதே தடையிகள் அதே பற்றரிக்குக் குறுக்கே சமாந்தரமாகத் தொடுக்கப்படுமாயின் விரயமாக்கப்படும் மொத்தவலு

1) 5 W 2) 10 W 3) 20 W
4) 40 W 5) 60 W

29) A,B ஆகிய இரு துணிக்கைகள் $R_A$, $R_B$ ஆகிய ஆரைகளையுடைய ஒரு மைய வட்டங்களிலே, அவற்றின் சுழற்சி ஆவர்த்தனங்கள் ஒரேயளவாயிருக்கும் வகையிலே அசைகின்றன.

இங்கு $\frac{\text{A யின் மையநாட்ட ஆர்முடுகல்}}{\text{B யின் மையநாட்ட ஆர்முடுகல்}}$ விகிதம்

1) $\frac{R_A}{R_B}$ 2) $\frac{R_A^2}{R_B^2}$ 3) $\frac{R_A^3}{R_B^3}$ 4) $\frac{R_B}{R_A}$ 5) $\frac{R_B^3}{R_A^3}$

30) A, B ஆகிய இரு பொருட்கள், நேர்கோடு ஒன்று வழியே ஒன்றையொன்று நோக்கிச் சீரான கதிகளுடன் அசையும்போது, ஒவ்வொரு செக்கனிலும் இவை 5 m இனால் ஒன்றையொன்று நோக்கி நெருங்குகின்றன. இவை இரண்டும் ஒரு நேர்கோடு வழியே தமது முந்திய கதிகளுடன், ஒரே திசையில் அசையுமாயின், ஒவ்வொரு செக்கனிலும் இவை 1 m இனால் ஒன்றையொன்று நோக்கி நெருங்குகின்றன. A யினதும் B யினதும் கதிகள் முறையே

1) $5 ms^{-1}$ உம் $4 ms^{-1}$ உமாகும். 2) $5ms^{-1}$ உம் $10ms^{-1}$ உமாகும்.
3) $3ms^{-1}$ உம் $2ms^{-1}$ உமாகும் 4) $3ms^{-1}$ உம் $1 ms^{-1}$ உமாகும்.
5) $2ms^{-1}$ உம் $1ms^{-1}$ உமாகும்.

31) பின்வரும் எந்த ஒன்றைப் பேணுயியின் தத்துவத்தைப் பயன்படுத்தி விளக்க முடியாது?

1) கறங்கிக்கொண்டு (spinning) வளியிலே இயங்கும் பந்து ஒன்றினது பாதை வளைவது
2) விமானமொன்றின் மீதான வளி உயர்த்தல்.
3) விசிறு பம்பி (spray pump) ஒன்றினது செயற்பாடு.
4) வெளியிலே வாணமொன்றினது இயக்கம்.
5) நீண்ட புகைப்போக்கி ஒன்றினூடாகப் புகை மேலெழுதல்

32) தனது மையத்துக்கூடாகச் செல்லும் நிலைக்குத்து அச்சைப் பற்றிச் சுழலக்கூடிய கிடையான வட்டவடிவ மேசையொன்றின்மீது சிறிய திணிவொன்று வைக்கப்பட்டுள்ளது. இம்மேசையின் கோண வேகம் (1) ஆகும் போது இத்திணிவு நழுவ ஆரம்பிக்கின்றது. இத்திணிவினது மேசையின் மையத்திலிருந்தான தூரம் இரட்டிக்கப்படின் இத்திணிவானது நழுவ ஆரம்பிப்பதற்குத் தேவையான இழிவுக் கோண வேகம்.

1) $\frac{(1)}{\sqrt{2}}$ 2) $\frac{(1)}{2}$ 3) (1) 4) $\sqrt{2}_{(1)}$ 5) $2_{(1)}$

33) ஒரு முனையில் மூடியுள்ள சிறிய கண்ணாடிக் குழாயொன்றானது அறை வெப்பநிலையிலே இரசத்தினால் அரைவாசிக்கு நிரப்பப்பட்டுள்ளது. கண்ணாடி யினதும் இரசத்தினதும் கனவளவு விரிகைத்திறன்கள் முறையே $\gamma_g$ யும் $\gamma_m$ உமாகும். வெப்பநிலையானது பின்வரும் எக்காரணியினால் அதிகரிக்கப்படும் போது இரசம் இக்குழாயின் முழுக் கனவளவையும் இடக்கொள்ளும்?

1) $\frac{1}{\gamma_g}$ 2) $\frac{1}{\gamma_m}$ 3) $\frac{1}{\gamma_g - \gamma_m}$ 4) $\frac{1}{\gamma_m - \gamma_g}$ 5) $\frac{1}{\gamma_g + \gamma_m}$

34) ஒரு முனையில் மூடியுள்ள $l$ நீளமுடைய குழாயொன்றானது, திரவத்தொட்டி ஒன்றினுள்ளே, அதனது திறந்த முனை முதலில் திரவத்தினுள் அமிழும் வகையிலே, நிலைக்குத்தாக மெதுவாகத் தாழ்த்தப்படுகின்றது. இக்குழாயிலுள்ள வளியானது வெளியேறாமல் இருக்கின்றது. இக்குழாயிலுள்ள திரவப் பிறையுரு வானது, தொட்டியிலுள்ள திரவப் பரப்பிலிருந்து ஆழம் H இல் இருக்கும்போது, இக்குழாயிலுள்ள வளி நிரலின் நீளம் $l/2$ ஆக இருக்குமாயின், திரவ நிரலின் உயரத்தின் சார்பில் தரப்படும் வளிமண்டல அமுக்கம்.

1) $\frac{H}{2}$ 2) H 3) 2H 4) 3H 5) 4H

35) மாறாச் சுற்றாடல் நிபந்தனைகளின் கீழ், $30^0$ C இலுள்ள அறை ஒன்றிலே, ஒரு திரவமானது $65^0$ C இலிருந்து $55^0$ C இற்குக் குளிர எடுக்கும் நேரம் 5.0 நிமிடங்களாகும். இத்திரவமானது $55^0$ C இலிருந்து $45^0$ C இற்குக் குளிர்ச்சி அடைய எடுக்கும் நேரம்.

1) 5.0 நிமிடங்கள் 2) 6.5 நிமிடங்கள்
3) 7.5 நிமிடங்கள் 4) 8. 0 நிமிடங்கள்
5) 10. 0 நிமிடங்கள்

36) $R_1$, $R_2$ ஆகிய ஆரைகளையுடைய இரு கோளக் கடத்திகள், மிகப் பெரிய தூரத்தின..ல் வேறாக்கப்பட்டும், மெல்லிய கடத்தும் கம்பி ஒன்றினால் இணைக் கப்பட்டும் உள்ளன. சுயாதீன வெளியின் அனுமதித்திறன் $\varepsilon_0$ ஆயிருப்பின், இத்தொகுதியினது கொள்ளளவம்.

1) $4\pi\in_0(R_1 + R_2)$ 2) $4\pi\in_0 \frac{R_1R_2}{R_1 + R_2}$


3) $4\pi\in_0 \frac{R_1^2}{R_2}$ 4) $4\pi\in_0(R_1 - R_2)$

5) $\frac{4\pi\in_0 R_1R_2}{R_1 - R_2}$

37) ஆரை a யையுடைய தனியாக்கிய கடத்தும் கோளம் ஒன்றின் பரப்பின் மீது, ஏற்றமொன்று, அடர்த்தி $\sigma$ யுடன் சீராகப் பரம்பியுள்ளது. இக்கோளத்தின் மையத்திலேயுள்ள மின் அழுத்தம்.

1) $\frac{a\sigma}{\in_0}$ 2) $\frac{a^2\sigma}{\in_0}$ 3) $\frac{a^2\sigma^2}{\in_0}$ 4) $\frac{\sigma}{2\in_0}$ 5) 0


38) சர்வசமனான கடத்தும் கம்பிச் சோடியொன்றைக் கொண்டுள்ள 4 Km நீளத் தரைக்கீழ் வடமொன்றானது, உருவிலே காட்டப்பட்டவாறு அதன் நீள வழியே சிறிய குறுஞ்சுற்றொன்றைக் கொண்டுள்ளது.





ஒரு மனிதன் AB யிற்கும் CD யிற்கும் குறுக்கேயுள்ள தடைகள் முறையே 30 Ω உம் 70 Ω சமமாகுமெனக் கண்டுபிடிக்கின்றான். A யிலிருந்து குறுஞ் சுற்றாக்கப்பட்ட புள்ளியின் தூரம்

1) 1 Km 2) 1.2 Km 3) 1.7 km
4) 2 km 5) 3 km

39) இலட்சிய p - n சந்தி ஒன்றுக்குக் குறுக்கேயுள்ள மின் புலச் செறிவு E இனது மாறலைத் திறம்பட வகைக் குறிப்பது.







கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா சங்கத்தின் 94 ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வெற்றி பெற்றவருக்கு பரிசு வழங்குவதையும், கலைநிகழ்வின் ஒரு பகுதியையும், கலந்து கொண்டவர்களையும் காணலாம். (48)

# மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை சிறுவயதிலிருந்தே வளர்க்க வேண்டும்

## பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தெரிவிப்பு

வாசிப்பு என்பது படிக்கத் தொடங்கும் போது ஆரம்பிக்கப் படுகின்றது. தனியே பள்ளிப் படிப்போடு எமது செயற்பாடு நின்று விடக்கூடாது. சகல துறைகளிலும் பூரண அறிவினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் முழுமையான மனிதனாக வளர முடியும்.

இச் செயற்பாடு சிறு வயதில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். மாணவர்களை வழிப்படுத்தும் போது நல்ல நூல்களினை வாசிக்க தூண்ட வேண்டும் என தெல்லிப்பழை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரும் எழுத்தாளருமான சிதம்பர திருச்செந்திநாதன் தெரிவித்தார்.

வலி.தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகத்தின் உலக புத்தக தின நிகழ்வு வலி.தெற்கு பிரதேசசபை தவிசாளர் தியாகராஜா பிரகாஷ் தலைமையில் பொது நூலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நூலகத்தை பாவித்திருக்கின்றோம் நூலகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுத்துலகை ஆரம்பித்தேன் நூலகம் எமது வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தவை. மனித வாழ்வில் சகல செல்வங்களையும் பெற்றுக்கொள்ளும் உறைவிடமாக நூலகங்கள் விளங்குகின்றது.

நாட்டிற்கு வளம் சேர்ப்பது மக்களாகும். அந்த மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்ற வேண்டுமாயின் கல்வியில் முன்னேற வேண்டும். கல்வியின் ஊடாகவே சிறந்த சமூகத்தினை உருவாக்க முடியும். கல்வி வளர்ச்சியின் மூலமே சமூகம் மேம்பாடடைய முடியும். கல்வி வளர்ச்சியின் ஊடாக பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டும். எங்களிடம் உள்ள சொற்களின் அளவில் தான் வார்த்தை ஆற்றலுள்ளது.

வாசிப்பின் மூலம் வார்த்தை கருத்துப் பேச்சு வளம் மேம்பாடடையும். இதன் மூலம் சிறந்த பேச்சாளராக எழுத்தாளராக உருவாக முடியும். ஆரம்பக்கல்வியில் இதனைச் சரியாகப் மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். (63)

# பண்டிகைக்கால பாதுகாப்பு பொலிஸ் திணைக்களம் உஷார்

(கொழும்பு)

எதிர்வரும் விசாகப் பண்டிகையை முன்னிட்டு போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி பொலிஸ் தலைமையகத்தின் ஊடாக அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் சுற்றுநிருபங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

விசாக பண்டிகையை முன்னிட்டு இடம்பெறும் கேளிக்கை நிகழ்வுகளை தடுத்தல், பௌத்த கொடியின் தன்மையை பாதுகாத்தல், ஏனைய மதங்களின் கௌரவத்தை பாதுகாத்தல் மற்றும் அன்னசாலைகளின் தரத்தை மதிப்பிடல் போன்ற விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, விசேட போக்குவரத்து விதிமுறைகளும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித ரோகன தெரிவித்துள்ளார்.

பொதுவாக, கை உழவு இயந்திரம் மற்றும் முச்சக்கர வண்டிகளிலேயே போக்குவரத்து மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறான பாதுகாப்பற்ற பயணங்களை மேற்கொள்ளுதல், மற்றும் அதிக பயணிகளை ஏற்றிச் செல்லும் நடவடிக்கைகள் பொலிஸாரினால் கண்காணிக்கப்படும் என்றும் பேச்சாளர் தெரிவித்தார்.

# பூம்புகார் மாதர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு




அரியாலை கிழக்கு பூம்புகார் மாதர்சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மாலினி பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன், கிராம அலுவலர் இ.கேதீஸ்வரன், டாக்டர் சர்மிளா அருண்பாபு, நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் வ.ஸ்ரீகணேஷா, பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித்தலைவர் உரையாற்றுகையில், புதிய நிர்வாகத் தெரிவுக்குப் பின் பூம்புகார் கிராமத்துக்கு கூடிய விரைவில் காணி உறுதிகள் எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்க இருப்பதோடு, இங்குள்ள மக்களுக்கான வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். என்றார்.

# மானிப்பாய் இந்து மாணவன் சித்திரப் போட்டியில் சாதனை



(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கலைப்பிரிவில் கல்வி பயிலும் மாணவன் சசிதரன் சித்திரப் போட்டியில் மாகாணமட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளார்.

இவருக்கான கௌரவிப்பும் விருதுவழங்கலும் அண்மையில் கொழும்பில்பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பல்வகைமையின் சமத்துவத்தின் ஊடாக அலங்கரிக்கப்பட்ட இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதற்காக என்ற தொனிப்பொருளில் அமைந்த மேற்படி சித்திரப்போட்டியிலேயே இம் மாணவன் வெற்றி பெற்றுள்ளார்.

சுதுமலையில் வசிக்கின்ற இம்மாணவன் ஆரம்ப கல்வியினை சுதுமலை சத்தியசாயி வித்தியாலயத்திலும் தரம்1-5 வரை சுதுமலை சிம்ய பாரதி வித்தியாலயத்திலும் பயனுள்ளதுடன் தரம் 6முதல் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கல்வி பயன்றுவருகின்றார்.

சித்திரத்துறையின் மீது பேரார்வம் உடைய இவர் பல போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களினை பெற்றுக் கொண்டதுடன் ஒருவரினை பார்த்து அப்படியே வரைவதில் திறமையுடையவராவார். (63)

# ஆசிரிய ஆலோசகர்களுக்கான சேவை வரைபை தயாரிக்க திட்டம்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

நாடளாவிய ரீதியில் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களில் சேவையாற்றிவரும் ஆசிரிய ஆலோசகர்களுக்கான சேவை வரைபினைத் தயாரிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது குறித்த அறிவுறுத்தல் கடிதம் கல்வி அமைச்சின் செயலாளரினால் சகல மாகாணங்களின் பிரதம செயலாளர்கள் மாகாண கல்விச் செயலாளர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவைக்குறிப்பினுள் உள்ளடக்குவதற்கு பொருத்தமெனக் காணும் சிபாரிசுகளை சகல மாகாணங்களிலிருந்தும் பெற்றுக் கொள்வதற்கு கல்வியமைச்சின் செயலாளர் எதிர்பார்த்துள்ளார்.

உத்தேச ஆசிரியை ஆலோசகர் சேவைக்கான ஆளணி எண்ணிக்கையினை உருவாக்குதல் தொடர்பாக மாகாண முதலமைச்சர்களினால் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனையடுத்தே இது தொடர்பாக அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத் திற்கும் மேலதிகமாக ஆசிரிய ஆலோசகர் பிரமாணக் குறிப்பில் உள்ளடக்கப்பட்ட வேண்டிய விடயங்கள் தொடர்பில் தங்களது அவதானிப்புக்களை கொண்ட அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்குமாறும் செயலாளரது கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் வலயக் கல்வி அலுவலகங்களில் சேவையாற்றுகின்ற ஆசிரிய ஆலோசகர்கள் தற்போது இலங்கை அசிரிய சேவைத் தரத்திலேயே உள்ளனர்.

நீண்டகாலமாக பல்வேறு சுமைகளுக்கு மத்தியில் சேவையாற்றுக்கின்ற ஆசிரிய ஆலோசகர்களின் சேவையை கருத்திற்கொண்டு இதற்கான சேவைத் திட்டம் ஒன்று புதிதாக உருவாக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை முன் வைக்கபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் புதிதாக கட்டப்பட்டு வரும் யாழ்.சிறைச்சாலையின் கட்டுமானப் பணிகள் பூர்த்திய டையும் நிலையில் காணப்படுகின்றது.

படம்-ஆர்.இராஜகுமார்

# உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக இராஜேந்திர மால் லோதா பொறுப்பேற்பு



உச்ச நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக இராஜேந்திர மால் லோதா (வயது 64) நேற்று பொறுப்பேற்றார். உச்ச நீதிமன்றத்தின் 41ஆவது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்ற அவருக்கு, குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பதவி வகித்து வந்த தமிழகத்தைச் சேர்ந்த பி.சதாசிவம் நேற்றுமுன்தினம் ஓய்வு பெற்றார். இதைத் தொடர்ந்து, புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்ட ஆர்.எம். லோதா நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். இவர், 5 மாத காலத்துக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பு வகிப்பார்.

இராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் பிறந்த லோதா, 1973 ஆம் ஆண்டு பார் கவுன்சிலில் இணைந்தார். 1994 ஆம் ஆண்டு இராஜஸ்தான் உயர் நீதிமன்ற நீதிபதியாக அவர் நியமிக்கப்பட்டார். 2008 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி பாட்னா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், அதே ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி உச்ச நீதிமன்ற நீதிபதியாகவும் பொறுப்பேற்றார்.

நிலக்கரி சுரங்க முறைகேடுகள் குறித்து சி.பி.ஐ நடத்தி வரும் விசாரணையை மேற்பார்வையிடும் குழுவுக்கு தலைமை வகித்து வந்த இவர், அரசியல் கட்சிகளின் பிடியிலிருந்து சி.பி.ஐ யை விடுவிக்கும் நீதிமன்றத் தீர்ப்புகளில் முக்கியப் பங்காற்றியவர்.

நீதிமன்றங்களின் மேற்பார்வையில் நடைபெறும் சி.பி.ஐ வழக்குகளில் சாட்சிகளை விசாரிக்க அரசின் அனுமதி தேவையில்லை என்ற பரபரப்புத் தீர்ப்பை வழங்கியது, இவரது தலைமையிலான நீதிமன்ற அமர்வு தான் என்பது கவனிக்கத்தக்கது.

குறிப்பாக நிலக்கரி சுரங்க முறைகேடு வழக்கு விசாரணை தொடர்பான தகவல்களை அரசுடன் பகிர்ந்து கொள்ளத் தேவையில்லை என அதிரடியாக உத்தரவிட்டதும் இவரே. அதுமட்டுமன்றி பாதுகாப்புப் படையினரின் ஜனநாயக உரிமை பாதிக்கப்படாத வகையில் சண்டை நடைபெறாத இராணுவ நிலைகளில் பணியமர்த்தப்பட்டுள்ள வீரர்கள் தங்களது தொகுதிகளில் வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் நீதிபதி லோதா தலைமையிலான நீதிமன்ற அமர்வு தீர்ப்பளித்திருந்ததும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

# ரஷ்யா மீதான பொருளாதார தடைகளை தீவிரப்படுத்த ஜி 7 நாடுகள் தீர்மானம்



உக்ரைன் விவகாரத்தின் எதிரொலியாக ரஷ்யா மீது புதிதாக கூடுதல் பொருளாதார தடைகளை விதிக்க ஜி-7 நாடுகளின் தலைவர்கள் நேற்றுமுன்தினம் ஒப்புதல் அளித்துள்ளனர்.

இருப்பினும் இதுவரை பொருளாதாரத் தடைகள் தொடர்பில் விபரங்கள் ஏதும் வெளியிடப்படவில்லை எனவும் இன்று திங்கட்கிழமை பொருளாதாரத் தடைகள் தொடர்பான விபரங்களை எதிர்ப்பார்ப்பதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

உக்ரைனின் கிழக்குப் பகுதிகளில் வன்முறைகளில் ஈடுபட்டு வரும் கிளர்ச்சியாளர்களை ரஷ்யா வழிநடத்துவதாக மேற்குலக நாடுகள் தெரிவிக்கின்றன.

கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன் மற்றும் அமெரிக்க நாடுகளை சேர்ந்த தலைவர்கள், ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் அனைவரும் ஒருமித்தமாக இதற்கு அனுமதி அளித்துள்ளனர்.

ஏற்கனவே, கிரைமியாவை தன்னுடன் இணைத்த விவகாரத்தில் ரஷ்யா மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில் கிரைமியாவைப் போன்று தற்போது கிழக்கு உக்ரைனிலும் இத்தகைய நிலை உருவாகியுள்ளது. ரஷ்யா இந்த குற்றச்சாட்டுக்களை மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ராஜீவ் கொலை வழக்கு கைதிகளுக்கு மீண்டும் மரண தண்டனை வழங்க மனு

மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்ட ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு கைதிகளுக்கு மீண்டும் மரண தண்டனையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசாங்கம் மேற்கொள்கிறது.

இதற்காக இந்திய அரசியல் சாசனத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்யவிருப்பதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோருக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனை, உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு மரண தண்டனைகளை ஆயுள் தண்டனைகளாக குறைத்து இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய அனைத்து தீர்ப்புகளையும் ரத்து செய்யுமாறு, இந்திய மத்திய அரசாங்கம் தமது மனுவில் கோரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# அணு ஆயுத சோதனை தொடர்பாக வடகொரியாவுக்கு ஒபாமா எச்சரிக்கை



தென்கொரியாவுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கி வரும் வடகொரியா ஏற்கனவே கடந்த 2006, 2009 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் அணு ஆயுத சோதனை நடத்தியது. மேலும் அடிக்கடி அதிநவீன ஏவுகணை சோதனைகளை நடத்தி தொடர்ந்து அச்சுறுத்தல் விடுத்து வருகிறது. இதற்காக அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளின் கண்டனத்துக்கு உள்ளாகி வரும் அந்நாடு, மீண்டும் அணு ஆயுத சோதனைக்குத் தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுகுறித்து தென்கொரிய இராணுவ அதிகாரி கூறும் போது, ஏற்கனவே அணு ஆயுத சோதனை நடத்திய பங்கயேரூயவிரி பகுதியில் மீண்டும் ஒரு சோதனைக்கு வடகொரிய வீரர்கள் தயாராகி வருவதாகவும், அந்நாட்டு தலைமை உத்தரவிட்டவுடன் எந்த நேரத்திலும் இந்த சோதனை நடைப்பெறக் கூடும் என்றும் தெரிவித்தார்.

வடகொரியாவின் இந்த செயல அமெரிக்காவுக்கு மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதுதொடர்பாக கடும் கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வடகொரியா அணு ஆயுத சோதனை மேற்கொண்டால், அந்நாடு சர்வதேச விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று தெரிவித்தார்.

# மோடியை "ஹிட்லர்" என விமர்சித்த சிரஞ்சீவி மீது முட்டை வீச்சு




பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியை "ஹிட்லர்" என விமர்சனம் செய்த மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் சிரஞ்சீவி மீது நேற்றுமுன்தினம் பா.ஜ.க தொண்டர்கள் முட்டை வீசினர். இது தொடர்பாக 2 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

மத்திய அமைச்சரும் காங்கிரஸ் தேர்தல் பிரசார குழு தலைவருமான நடிகர் சிரஞ்சீவி, நேற்றுமுன்தினம் ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டம் மசூலிப்பட்டினத்தில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து திறந்தவெளி வாகனத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பந்தர் பகுதியில் கோனேரு கூட்டு ரோடு பகுதியில் சிரஞ்சீவி பேசுகையில், "பா.ஜ.க. ஒரு மதவாத கட்சி. இதன் பிரதமர் வேட்பா ளர் நரேந்திர மோடி, வாஜ்பாய், அத்வானி போன்ற மூத்த தலைவர்களை ஓரங்கட்டியவர்" என தீவிரமாக குற்றஞ்சாட்டினார். அப்போது கூட்டத்தில் இருந்த பா.ஜ.க தொண்டர்கள் சிலர் சிரஞ் சீவி மீது முட்டை வீசினர். இந்த முட்டைகள் சிரஞ்சீவி பயன்படுத் திய வாகளத்தின் மீது விழுந்தது. இதன் காரணமாக சிறிது நேரம் தனது பிரச்சாரத்தை நிறுத்தினார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக அங்கிருந்த பொலிஸார் முட்டை வீசிய 2 பேரை கைது செய்தனர்.

# சகோதரர் பா.ஜ.க.வில் வருந்துகிறார் மன்மோகன்சிங்



பிரதமர் மன்மோகன்சிங், தனது சகோதரர் பா.ஜ.கவில் இணைந்தது வருத்தம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

மன்மோகன் சிங்கின் தந்தையின் 2 ஆவது மனைவிக்கு பிறந்தவரான தல்ஜீத் சிங் கோலி, அமிர்தசரஸ் நகரில் பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி முன்னிலையில் பா.ஜ.கவில் இணைந்து கொண்டார்.

நாட்டில் எங்கும் மோடி அலை வீசவில்லை என்று காங்கிரஸ் கூறிவரும் நிலையில் பிரதமரின் சகோதரரே பா.ஜ.கவில் இணைந்தது காங்கிரசுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, டெல்லியில் பத்ம விருதுகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்ள வந்த பிரதமரிடம் தனது சகோதரர் பா.ஜ.கவில் இணைந்தது பற்றி நிருபர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதற்கு பதில் அளித்துள்ள அவர், இந்த சம்பவம் எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிப்பதாகவும் அவர்கள் குழந்தைகள் அல்ல விவரம் தெரிந்தவர்கள் தான் என்றும் அவர்களை என்னால் கட்டுப்படுத்த இயலாது எனவும் தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய முற்போக்கு கூட்டணி 3 ஆவது முறையாக ஆட்சி அமைக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். அதற்கான வாய்ப்புகள் இல்லை என்று கூறிவிட முடியாது எனவும் தெரிவித்தார்.

# தோல்வி பயத்தில் உள்ளார் மோடி

குஜராத்தில் ஒரு தொகுதியிலும், உத்தரப்பிரதேசத்தில் ஒரு இடத்திலும் மோடி ஏன் போட்டியிட வேண்டும்? என மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்த திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்கு வங்காள முதலமைச்சருமான மம்தா பானர்ஜி பெரும்பான்மையான அரசியல்வாதிகளிடையே வெளிப்படையான தன்மை இல்லை. மக்களின் நம்பகத்துக்கு உகந்தவர்களாகவும் அவர்கள் இருப்பதில்லை. குஜராத்தில் ஒரு தொகுதியிலும், உத்தரப்பிரதேசத்தில் ஒரு இடத்திலும் மோடி ஏன் போட்டியிட வேண்டும்?

இதில் இருந்து வெற்றி மீது அவருக்கு நம்பிக்கை இல்லை என்பது தெரிகிறது. அவர் இரண்டு இடத்தில் வெற்றி பெற்றாலும், ஒரு இடத்தில் ராஜினாமா செய்ய வேண்டும். இதன் மூலம் தன்னை வாக்களித்து தேர்வு செய்த மக்களுக்கு அவர் நீதி செய்யப்போவதில்லை என்பது தெளிவாகிறது என்றார்.

# இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கொக்குவில் இந்துவில் பதிவுகள்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நல்லிணக்க ஆணைக்குழுவினால், வேலையில்லாத இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதாக நல்லிணக்க மைய ஆணையாளர் செல்வா யாதவன் தெரிவித்தார்.

பதிவுகள் மேற்கொள்ளும் நடவடிக்கையில் 500 இற்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டதுடன் தொழில்கள் சம்பந்தமான கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது.

மருத்துவதாதி, நடனபாட ஆசிரியர், சங்கீத பாட ஆசிரியர், ஆங்கில பாட ஆசிரியர், வாத்தியக் கலைஞர்கள், பாடகர்கள், நடனக் கலைஞர்கள், எழுதுநர்கள், அலுவலர்கள், கணனி இயக்குநர், விவசாய மேற்பார்வையாளர், விவசாய அலுவலர்கள், மின் இணைப்பாளர், தச்சு வேலை, மேசன், வர்ணம் பூசுபவர்கள், ஒட்டு வேலை செய்பவர்கள், வாகனம் திருத்துபவர்கள், வாகன வேலை செய்பவர்கள், வாகனத்திற்கு வர்ணம் பூசுபவர்கள், கூலி ஆட்கள், மற்றும் கட்டட தொழிலாளர்கள் உள்ளிட்ட வேலைகளுக்கே ஆட்கள் சேர்க்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வர்த்தக நிலையம் கொள்ளை; கல்வியங்காட்டில் சம்பவம்

கல்வியங்காட்டிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்று கடந்த வெள்ளியன்று இரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

வெள்ளியன்று இரவு கடையைப் பூட்டிவிட்டுச் சென்ற உரிமையாளர் மறுநாள் காலை யில் கடைக்கு வந்தபோது கடை உடைக்கப்பட்டு திருடப்பட்டிருந்தது.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் என ஏறக்குறைய 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# சட்டவிரோத மணல் அகழ்ந்தவர் துப்பாக்கிச் சூட்டின் மூலம் கைது

(கொடிகாமம்)

யாழ். கொடிகாமத்தின் பாலாவி வடக்குப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்துகொண்டு தப்பியோடியவரின் உழவு இயந்திரச் சில்லுக்கு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் உழவு இயந்திரச் சாரதியான பொன்னையா நிமலன் (வயது -22) என்பவரை கைதுசெய்ததாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் எங்களுக்கு தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து அங்கு நேற்று முன்தினம் மாலை சென்ற போது, எங்களைக் கண்டு உழவு இயந்திரத்துடன் சந்தேக நபர் தப்பியோடினார்.

இந்நிலையில், குறித்த உழவு இயந்திரத்துடன் தப்பியோடிய வரை பொலிஸார் துரத்திச் சென்றனர். இதன்போது, அங்கு நின்றிருந்த சிலர் ஆணிகள் பொருத்திய பலகைகளை வீதியில் வைத்து பொலிஸாரின் வாகனத்தின் ரயர்கள் காற்றுப் போகச் செய்ததுடன், குறித்த உழவு இயந்திரத்துடன் சந்தேக நபர் தப்பியோடுவதற்கும் வழியமைத்தனர்.

இருப்பினும், வாகனத்திலிருந்து கீழிறங்கிய பொலிஸார் குறித்த உழவு இயந்திரத்தின் சில்லுக்கு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு, சந்தேக நபரை கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி கொடிகாமம், கெற்பேலி பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்துகொண்டு தப்பியோடிய இச்சந்தேக நபரின் உழவு இயந்திரச் சில்லுக்கு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு சந்தேக நபரை கைதுசெய்திருந்தனர். இந்நிலையில், சாவகச்சேரி நீதிமன்றத்தினால் இவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி மகிந்த சீனா செல்கிறார்

(கொழும்பு)

ஜ்னாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் விளம்பரப்படுத்தல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் ஏ.எம். சாதிக் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர், சீனாவுக்கு மேற்கொள்ளும் ஏழாவ்து பயணமாகும்.

ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளின் நான்காவது மாநாட்டில் பங்கேற்கவே மகிந்த ராஜபக்ஷ சீனா செல்லவுள்ளார்.

ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கை அமைப்பானது, ஆசியாவில் அமைதி, பாதுகாப்பு, மற்றும் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காக, அரசாங்கங்களுக்கிடையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்து; யுவதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் யுவதி ஒருவர் காயமடைந் துள்ளார்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் கச்சேரி நல்லூர் வீதியில் நாற்சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளாகியதில் நல்லூரைச் சேர்ந்த நிரோசியா (வயது-25) என்ற யுவதி காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை உரும்பிராயில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். (இ)

## தென்னாபிரிக்க...

இலங்கை குறித்து நடைபெற்ற கடந்த ஐ.நா. மனித உரிமைகள் கலந்தாய்வு கூட்டத்தில் இந்தியாவின் பிரதிநிதி திலிப் சின்ஹா இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியதுடன் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் நிறையவே செய்ய வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் சிறுபான்மையினருடன் அர்த்தமுள்ளதும் பரந்துபட்டதும் ஆழமானதுமான உண்மையான நல்லிணக்கத்திற்கு நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பது அவசியமானது.

இலங்கையின் நெருங்கிய அண்டை நாடாக ஆயிரக்கணக்கான வருடங்கள் நல்லுறவைப் பேணிவந்த நாம், அந்த நாட்டின் வளர்ச்சியில் தீண்டத்தகா தவர்களாக இருந்துவிட முடியாது.

தென்னாபிரிக்க மத்தியஸ் தம் நல்லிணக்கத்தினை கொண்டுவருமானால் இந்தியாவிற்கும் மகிழ்ச்சி. வரலாற்று ரீதியாக காலணித்துவ முதலாளிகளுக்கு எதிரான போராட்டத்தினை பகிர்ந்து கொண்டதிலிருந்து இந்தியா தென்னாபிரிக்காவுடன் மிகச்சிறந்த நல்லுறவினைக் கொண்டுள்ளது.

எனவே, இலங்கையில் அர்சியல் நல்லிணக்க செயற்பாடுகளை தூண்டிவிடுவதில் தென்னாபிரிக்கா தன்னை ஈடுபடுத்திக்கொள்வதை இந்தியா எதிர்க்க வாய்ப்பில்லை.

எனினும் தென்னாபிரிக்கா, இலங்கையில் தனது மத்திய ஸ்தத்தினை ஏற்கும்போது தகவல் பரிமாற்ற தொடுப்பில் இந்தியாவினையும் கொண்டி ருக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்க இயலும்

இந்த நிலையில் தென்னாபிரிக்கா, இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்து வெற்றி காணுமாக இருந்தால், இலங்கையில் தென்னாபிரிக்காவுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். எனவே இந்த விடயத்தில் இந்தியா மிகவும் எச்சரிக்கையாக நடந்துகொள்ளுமென. அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழரசுக் ...

யக் கூட்டமைப்பில் புதிதாக இணைந்து வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வவுனியாவில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று சுகாதார அமைச்சர் பதவியைப் பெற்றுள்ள ப.சத்தியலிங்கம் தலைமையில் ஒன்று கூடிய தமிழரசுக் கட்சி வவுனியா மாவட்ட உறுப்பினர்களான சேனாதிராசா, கருணாநிதி மற்றும் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணித் தலைவர் சீலன் உள்ளிட்ட குழுவினர் தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு அவசர அவசரமாக மாலையை அணிவித்துவிட்டுச் சென்றனர்.

இதன் பின் காலை 9.30 மணிக்கு வந்த தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட மூத்த உறுப்பினர் டேவிட் நாதன் மற்றும் தேவராசா தலைமையிலான குழுவினர் சுகாதார அமைச்சரின் செயலைக் கண்டு தமக்குள் நொந்து கொண்டதுடன் தாம் திட்டமிட்டபடி தமது நினைவு தின நிகழ்வை மேற்கொண்டனர்.

## அரச சேவைக்கு...

படிப்பு வரை படித்துள்ள 18 முதல் 30 வரையிலான வயதுடைய பெண்களும், 18 இற்கும் 32 இற்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்களும் இந்த வேலை வாய்ப்புக்காக விண்ணப்பிக்கலாம் என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அனைத்துப் படிகளையும் உள்ளடக்கியதாக 25 ஆயிரம் முதல், 30 ஆயிரம் வரையில் மாத சம்பளம் வழங்கப்படும் என்றும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டி ருக்கின்றது.

நேற்று நடைபெற்ற விண்ணப்பப் பதிவு நடவடிக்கை யின்போது நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டார்கள்.

இன்று யாழ்ப்பணம் துரையப்பா விளையாட்டரங்கில் இவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும் என தெரிவிக்கும் கடிதங்களும் இவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைக்கும், மத்திய அரசுக்கும், அவற்றின் கீழ் இயங்கும் திணைக்களங்களுக்குமே அரச சேவைக்கு ஆட்சேர்க்கும் உரிமையும் அதிகாரமும் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் ஐங்கரநேசன், இராணுவத்தின் இந்த நடவடிக்கையை அத்து மீறிய நடவடிக்கை என்று கண்டித்திருக்கின்றார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் இளைஞர், யுவதிகளின் சுதந்திரமான சிந்தனையை மட்டுப்படுத்தி அவர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான நடவடிக்கையையே இராணுவம் மேற்கொண்டிருக் கின்றது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## 2 முன்னாள்...

தலைமையில் நேற்றைய தினம் வத்திக்கானில் நடைபெற்ற விசேட திருப்பலியின் போது இந்தப் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மில்லியன் கணக்கான பக்தர்களும், வெளிநாட்டு ஆயர்களும் திருப்பலியில் பங்குகொண்டனர்.

இதேவேளை, இரண்டு பாப்பரசர்கள் ஒரே தடவையில் புனிதர் பட்டம் வழங்கப்படுகின்றமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாலியைச் சேர்ந்த பாப்பரசர் 23ஆவது ஜோன் 1958 முதல் 1963 ஆம் ஆண்டுகளில் பாப்பரசராக பதவி வகித்ததுடன், 1935 ஆம் ஆண்டில் ஹிட்லரின் நாஜி படைகளிடம் இருந்து ஆயிரக்கணக்கான யூதர்களையும், ஹங்கேரி நாட்டு யூதர்களையும் காப்பாற்ற உதவிய தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போலந்தைச் சேர்ந்த பாப்பரசர் 2 ஆவது ஜோன் போல் , 1978 முதல் 2005ஆம் ஆண்டு வரை பதவி வகித்ததுடன், இறையியல் பணியாளர்க ளின் புலனடக்கம், மதத்துக்கு அப்பாற்பட்டு மக்களுக்கு கத்தோலிக்கர்கள் பணியாற்றுதல் ஆகியவற்றை வலியுறுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மேமாதத்தில்...

ரிகள் 11ஆம் திகதி இலங்கை வரவுள்ளனர். என இலங்கை, இந்திய மீன்பிடி சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர் பீ.அந்தோனிமுத்து தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை , சிலாபம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள் இப்பேச்சுக் களில் கலந்து கொள்வர்.


## பல்கலையில்...

புதிய பாடத்திட்டத்திற்கு உள்வாங்கப்படும் பொறியியலாளர்களுக்கான பயிற்சிகளுக்காக தொழில்நுட்ப அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர மேலும் பல புதிய பாடத்திட்டங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சின் செயலா ளர் கூறியுள்ளார்.

இதற்கான நிதி ஒதுக்கீடுகள் திறைசேரியால் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 7 ஆவது ஐ.பி.எல்



மும்பை 125/6
பொலாரட் - 33, கௌதம் - 22
உனட்கட் 2 விக்கெட்
டெல்கி 126/4 (18.5)
முரளிவிஜய் - 40
பீற்றர்சன் - 26
மலிங்க 2 விக்கெட்
டெல்கி 6 விக்கெட்டுக்களால் வெற்றி.
ஆட்ட நாயகன் முரளிவிஜய்.



ஹைதராபாத் 145/5
ஆரோன் பின்ஞ் - 44, ராகுல் - 25
ஹில்பென்கஸ், மோகித்சர்மா தலா 2 விக்கெட்
சென்னை 146/5 (19.3)
சிமித் - 66
மக்கலம் - 40
புவனேஸ்வரகுமார், இஷாந்த்சர்மா தலா 2 விக்கெட்
சென்னை 5 விக்கெட்டுக்களால் வெற்றி.
ஆட்ட நாயகன் சிமித்

## ஆணைக்குழுவின் பரிந்துரை அமுலாக்கல்
# ஒன்பது மாகாணங்களிலும் சட்டமா அதிபர் அலுவலகங்கள்

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளின் அடிப்படையில் நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களிலும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளதாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் 9, 212 பரிந்துரைப்படி ஒவ்வொரு மாகாணங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களை அமைத்து குற்றச்செயல் விசாரணையை இலகுபடுத்த வழியேற்படுத்த வேண்டுமெனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன்படி ஒன்பது மாகாணங்களிலும் திறக்கப்படவுள்ள பிராந்திய அலுவலகங்களில் மேலதிக சொலிஸ்டர் ஜெனரல் கள் கடமையாற்ற உள்ளனர். இவர்கள் குற்றவியல் மற்றும் சிவில் சமூகங்களின் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுப்பர். இரண்டு சிரேஷ்ட சொலிஸ்டர் ஜெனரல்கள் இந்தப் பணிகளை மேற்பார்வை செய்வார்கள்.

இந்தப் புதிய திட்டத்தின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் மாகாண சபைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படும். அத்துடன் மாகாணத்திலுள்ள மேலதிக சொலிஸ்டர் ஜெனரல், மாகாணத்திற்கும் பொறுப்பான பொலிஸ் மா அதிபருடன் நேரடியான தொடர்பைக் கொண்டிருப்பர். மாகாணத்தின் பிரதம செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், இந்த அலுவலகங்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவரெனவும் ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஊவா மாகாண தேர்தலில் கவனம் செலுத்தும் ஐ.தே.க.

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தல் பற்றியே தற்போது கவனம் செலுத்தி வருவதாகவும், பொதுத் தேர்தலையோ அல்லது ஜனாதிபதித் தேர்தல் பற்றியோ தற்போது கவனம் செலுத தவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

முக்கியமான தேர்தலை நடத்த தயாராக இருப்பதாக கூறி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சியை முட்டாளாக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டு தனது பதவிக்காலம் முடியும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்தப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் இருப்பதாக ஜனாதிபதி ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

அழுத்தங்களை கொடுக்காமல் அந்த நிலைப்பாட்டை அவர் மாற்றிக் கொள்வார் என்று எதிர்க்கட்சி எதிர்பார்க்கவில்லை.

அரசாங்கம் அடுத்ததாக ஊவா மாகாண சபைத் தேர்தலை நடத்த உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அதற்கான தயார்ப்படுத்தல்கள் குறித்தே தற்போது கவனம் செலுத்தி வருகிறது.

ஊவா மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர், பொதுத் தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா என்பது பற்றி நாங்கள் சிந்திப்போம் எனவும் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

## ஆபத்தான நிலையில் தனியார் பஸ் சேவை

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று வருட காலப்பகுதிக்குள் தனியார் பஸ் துறை பாரிய பாதிப்பை எதிர் கொள்ளும் நிலையில் உள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு நாளும் 1,500 பயணிகள் வரை பொது போக்குவரத்திலிருந்து விலகிச் செல்வதாக தனியார் போக்குவரத்து சங்கத் தலைவர் கெமுனு விஜயவர்தன தெரிவித்தார்.

பொது போக்குவரத்திலுள்ள சீரற்ற நிர்வாகமே இதற்கு காரணம் என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கெமுனு இவ்வாறு தெரிவித்தார்.

## வடக்கின் கல்வி வளர்ச்சி விசேட திட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

வடமாகாண கல்வி வளர்ச்சிக்கு விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மாகாணத்தில் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் யாழில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமைச்சின் செயலாளர் அநுரதிசாநாயக்கா தெரிவித்தார்.

இதன்போது, யாழ் பல்கலைக்கழகத்தில் பத்து துறைகளுக்கான பேராசிரியர்கள் பிரச்சினை மற்றும் வடமாகாணத்தில் நிலவும் கல்வி நிலை தொடர்பில் அறிந்து கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டத்தில், ஆரம்பக்கல்வி மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி தொடர்பில் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

மேலும், வடமாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கல் தொடர்பிலும் விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தேசிய பாடசாலைகளின் நூலகங்களுக்கு நிதி

நாடளாவிய ரீதியாகவுள்ள தேசிய பாடசாலை நூலகங்களுக்கு மேலும் தலா ஒரு இலட்சம் ரூபா நிதி வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்காக ஏற்கனவே கோடி 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வழங்கப்படும் நிதி மூலம் பாடசாலையின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன் அடையக்கூடிய நூல்களை வாங்கும்படி, தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுப் பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்கள் பயனடையக்கூடிய மாதிரி கேள்வி, பதிலகளை உள்ளடக்கிய நூல்களையும், பாடசாலை நூலகங்களில் இணைத்துக் கொள்ளும்படியும், கோரப்பட்டுள்ளதாக சிரேஷ்ட கல்வி இயக்குனர் டபிள்யூ.எம். பாலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

## வசதிகுறைந்த மாணவிக்கு ஆசிரியை செருப்புமாலை



சப்பாத்து வாங்க வசதியின்றி செருப்பை அணிந்து பாடசாலைக்குச் சென்ற மாணவியொருவரை தண்டிப்பதாகக் கூறி, செருப்பை மாலையாக்கி அம்மாணவிக்கு ஆசிரியையொருவர் அணிவித்த சம்பவமொன்று திருகோணமலை, சேருநுவர பிரதேச பாடசாலையொன்றில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் தகவலறிந்த சேருநுவர பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.பீ.வீரரத்ன, பாதிக்கப்பட்ட மாணவிக்கு தனது சொந்த செலவில் சப்பாது வாங்கிக் கொடுத்துள்ளார்.


தந்தையை இழந்த நிலையில் தாயுடன் வாழ்ந்து வந்துள்ள மேற்படி மாணவி, தன்னிடம் சப்பாத்து இல்லாத காரணத்தால் செருப்பை அணிந்து பாடசாலைக்குச் சென்றுள்ளார்.

## முகமூடி ஹெல்மட் தடைகுறித்து ஆராய்வு

முகத்தை முழுமையாக மறைக்கும் ஹெல்மட்டுக்களை அணிந்து கொண்டு மேற்கொள்ளப்படும் கொள்ளைகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதால் இவ்வாறான ஹெல்மட்டுக்களை தடைசெய்யும் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவது குறித்து பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு வருவதாகவும் முகத்தை முழுமையாக மறைக்கும் ஹெல்மட்டுக்களை பாவிக்கும் நபர்கள் குறித்து இரகசியமான முறையில் தகவல்களை திரட்டி வருவதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

முகத்தை முழுமையாக மறைக்கும் ஹெல்மட்டுக்களை அணிந்து கொண்டு கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி முதல் இதுவரை 14 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவற்றில் இரண்டு கொள்ளைகள் குறித்து மட்டுமே சந்தேக



நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## வாள் வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் படுகாயம்

யாழ்.இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு அருகில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்.கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த நவரத்னராஜா கஜன் (வயது - 20) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த வெள்ளியன்று மாலையில் நண்பர்களுடன் கதைத்துக் கொண்டுநின்ற பிரஸ்தாப இளைஞர மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வாளால் வெட்டியுள்ளதாக யாழ்.பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## கடன் அடிப்படையில் வீட்டிற்கு மின் இணைப்பு

புதிய வீட்டுத் திட்டங்களை மேற்கொள்ளும்போது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கடன் அடிப்படையில் மின் இணைப்பை வழங்குவதற்கு மின் மற்றும் எரி சக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இலங்கை மின்சார சபையால் முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 3.5 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் முதற் கட்டம் அம்பாந்தோட்டை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இங்கு ஒரு குடும்பத்திற்காக 40,000 வரையான கடன் தொகை வழங்கப்படவுள்ளதுடன் இத்தொகை 6 வருட காலத்திற்குள் திருப்பி செலுத்தப்படவேண்டும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஏப்ரல் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.